கத்திரிமலைச் சாரல்

(நாட்டுப்புறப் பாடல்கள்)

கவிஞர் கோ. பெரு[illegible]

எட்டாவது
உலகத்தமிழ் மாநாட்டுச்
சிறப்பு வெளியீடு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 [illegible]

KATHTHIRIMALAI SAARAL
(Folk Songs)
by Kavignar Ko. Pe. Naa.

முதற்பதிப்பு : டிசம்பர் 1994
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு.

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

Code No. : A815
ISBN : 81-234-0373-9.

விலை : ரூ. 25 . 00

அச்சிட்டோர் :
கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ்
6/4, சூரப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.
தொலைபேசி : 842910

ஒளி அச்சு : டாமியா லேசர் பிரிண்ர்ஸ்,
சென்னை - 2.

பதிப்புரை

மானுடச் செயல்பாட்டின் கலை வடிவங்களாக நாட்டார் பாடல்கள் வழங்குகின்றன. அவற்றைச் சேகரித்து நூல் வடிவமாக்குவது மொழிக்குச் செய்யும் தொண்டாகும்.

பாலை மலை மலையாளிகளிடம் கவிஞர் கோ. பெ. நா. சேகரித்த நாட்டார் பாடல்கள் 'பாலை மலைப் பாடல்கள்'என்று நூலாக்கம் பெற்றுள்ளது. அவருடைய அடுத்த கட்ட உழைப்பின் பயனாக இந்நூல் உருப்பெற்றுள்ளது. நூலாசிரியர் இப்பாடல்களைச் சேகரிக்கக் கடுமையாக முயன்றுள்ளார் என்பதைப் படிப்பார் உணர்வர்.

இத்தொகுப்பில் சடங்குளில் பாடப்படும் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், கதைப்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், அவலச்சுவை ததும்பும் பாடல்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

வழிவழியாகக் கத்திரிமலை மக்களிடம் வழங்கிவந்த இப்பாடல்களை நூல்வடிவமாக மாற்றித் தந்ததன்மூலம் கவிஞர் கோ.பெ.நா நாட்டார் வழக்காற்றியலுக்கு அருந்தொண்டாற்றி யுள்ளார்.

ஆய்வாளர்களுக்கு மட்டுமின்றி புத்தகப் பிரியர்களுக்கும் இந்நூல் பயன்படும். எல்லா தரப்பு வாசகர்களிடமும் இது வரவேற்பைப் பெறும் என்பது எங்களின் நம்பிக்கை.

- பதிப்பகத்தார்

முன்னுரை

கத்திரி மலை சேலம் மாவட்டம் மேட்டூரில் இருந்து மேற்குத் திசையில் சுமார் இருபது கிலோமீட்டர் தொலைவில் கர்நாடக மாநில எல்லையில் காடுகள் அடர்ந்து இருப்பதாகும். அம் மலைச்சாரல்களில் சில ஊர்கள் உள்ளன. அவற்றில் குறிப்பிடத் தக்கது மலையாளப்பட்டி.

கொல்லிமலை மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் பாலைமலை மலையாளிகள். பாலைமலை மக்களில் இருந்து, பிரிந்து சென்று குடியேறியவர்களே கத்திரி மலைச் சாரல் மலையாளிகள். இந்நூலில் எடுத்துக் கொண்ட பாடல்கள் சுற்றுவட்டாரத்தில் பாடப் படுபவை. மலையாளப்பட்டியிலும், மற்றும் பல பட்டி தொட்டிகளிலும் பதிவு செய்யப்பட்ட பாடல்களே இங்கு திறனாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுப் புறக் கலைகளில் ஆர்வமுள்ளவர்களுக்காகவும், நாட்டுப் புறப் பாடல்கள் காலத்தால் மறைந்துவிட்டால் அவை வீணாகிவிடுமே என்ற சிந்தனையாலும்தான் அவற்றைப் பாதுகாக்க, நம்மால் இயன்ற தொண்டைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்நூல் ஆக்கப்ப ட்டுள்ளது.

பாடல்கள் பதிவுக்காகச் சென்றபோதும் பதிவு செய்தபோதும் நாங்கள் பெற்ற அனுபவங்களைக் கூறுவது ஒரு வழிகாட்டுதலாக இருக்கும். நானும் எனது ஆசிரிய நண்பர் நா. சம்பத்து அவர்களும் செல்வன் கோபால், செல்வன் பூபதி என்ற மாணவர்களும் ஒரு இருள் சூழும் மாலையில், மலையாளப் பட்டிக்குச் செல்ல, கோவிந்தப்பாடியில் இருந்து நடந்து

சென்றோம். வழியில் சிலரிடம் அறிமுகம் செய்து கொண்டு, நாட்டுப் பாடல் நன்றாகப் பாடுபவர்கள் இவ்வூரில் உள்ளார்களா என்று கேட்டோம்! அதனைப் பதிவு செய்வோம் என்பதையும் விளக்கமாகக் கூறினோம்.

எங்களை அவர்கள் ஏதோ துப்பறிய வந்தவர்களாகக் கருதிவிட்டார்கள். காடுகள் நிறைந்த பகுதிக்கு, பாட்டுக்காகப் படித்தவர்கள் வருவார்களா என்பது அவர்கள் ஐயம். எங்களை அவர்கள் "திரும்பிப் போய்விடுங்கள்! நீங்கள் நினைக்கிற யாரையும் கண்டுபிடிக்க முடியாது. நல்லபடியாகத் திரும்பிப்போய் ஊர் சேருங்கள்" என்று அறிவுரை கூறினார்கள். அவர்கள் கூறிய முறை எங்களை விரட்டி விடுவதாகவே இருந்தது.

என்றாலும், அவர்களிடம் விரிவாக எடுத்துக்கூறி நம்பவைத்து, அவர்களிடமே வழி கேட்டுச் செல்லவும் முடிந்தது. பாடல்கள் பதிவு செய்யும்போது அவ்வூரில், படித்து வெளியில் வேலை பார்ப்பவர் கிடைத்தார். அவர் பெயர் திரு. சின்னுசாமி. அவர் உதவி எங்களுக்கு மிகவும் நன்மை தருவதாக இருந்தது. இரவு 10 மணி முதல் அதிகாலை 3 மணி வரை கூட பாடல்கள் பதிவு செய்துள்ளோம்.

முதலில் பாமரமக்களுக்கு, நமது நோக்கத்தைப் புரியவைப்பதில் பெரிய இடர்ப்பாடுகள் உண்டு. புரிந்து கொண்டபின் அந்தச் சிற்றூரே விழாக்கோலமாகிப் பொது இடத்தில் கூடி கும்மி, கோலாட்டம் - அனைத்தையும் ஆடத் தொடங்குகிறது. அனைத்து ஆண், பெண், சிறுவர், சிறுமிகள் கலந்துகொண்டு, ஆடுகிறார்கள் பாடுகிறார்கள்.

ஒலியை, ஒலிப்பேழையில் பதிவு செய்து, அவர்கள் குரலை அவர்களுக்குப் போட்டுக் காட்டும்போது, மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்துவிடுகிறார்கள். மேலும் மேலும் பாடுகிறார்கள். 'பொண்ணு மாப்பிள்ளைப்பாடல்' பாட

வேண்டுமென்றாலும் ஒரு கணவன் மனைவியை - மணைமேல் உட்கார வைப்பதுபோல் உட்கார வைத்துத்தான் பாடுகிறார் கள் (அப்படி ஒரு நடுத்தர வயது கணவன் மனைவியை மணைமேல் அமர்த்தினார்கள். அவர்கள் நாணத்தோடே அமர்ந்திருந்தார்கள்).

பெண் கேட்கும் பாடலென்றால், நடந்து சென்று தான் (யாரையாவது பெண்வீட்டாரராக நிற்கவைத்து) பெண் கேட்கும் பாடல் பாடுகிறார்கள். கும்மி, கோலாட்டம் எதுவானாலும் முறைப்படி, கைகொட்டி ஆடித்தான் பாடுகிறார்கள். அப்படித்தான் அவர்களால் பாடமுடிகிறது. எடுத்துக்காட்டுக்கு ஒரு நிகழ்ச்சி கூறுகிறேன்.

'ஆதியிலே சொன்ன சொல்லு' என்ற கதைப்பாட்டைப் பாடியவர் பாடும் முன்பாக, படுத்துக் கொண்டுதான் பாட்டுப்பாட முடியும் என்றார். ஏனென்று கேட்டபொழுது, ஆட்டுப்பட்டிக் குடிசலில் படுத்துக் கொண்டு பாடித்தான் பழக்கம் என்று கூறினார். சரி என்று அவருக்கு ஒரு மட்டைத் தடுக்கு போட்டு அவரைப் படுக்கவைத்தோம்! அதன்பின் அவர் 'தண்ணீர் விடவேண்டும்' 'என்றார்! எங்களுக்குப் புரியவில்லை ! விழித்தோம்!

மற்றவர்கள் கூறியதை வைத்து, பின்பாட்டுப் பாட ஆள் கேட்கிறார் என்று அறிந்துகொண்டு, பாடுகிற ஒருவரைப் பின்பாட்டுப் பாட ஏற்பாடு செய்து அவரை அவர் அருகிலே படுக்கவைத்தோம்! ஒலிவாங்கியை அவர்கள் தலைப்பக்கம் வைத்துப் பாடலைப் பதிவு செய்தோம்!இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு.

பாலை மலைக்குச் சென்ற காலத்தில் சில சமயம் உணவின்றி பழங்களைத் தின்று, பசியாறிய நிலை உண்டு. ஆனால், கத்திரிமலைச் சாரலில், உண்ண உணவும் கிடைத்தது.

கத்திரிப்பட்டி திரு. செல்வத்தின் தாயார் அன்புடன் வழங்கினார்கள். காலையில் காப்பித்தண்ணியும் கிட்டியது (வறக்காப்பி). பகல் நேரங்களில் மக்கள் ஊரில் இருக்க மாட்டார்கள். மலைக்கும் காட்டுக்கும் வேலைக்குச் சென்று வருவார்கள்.

இப்பாடல்கள் பதிவு செய்யப்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேல் ஆயின. என்றாலும் எடுத்தெழுதித் திறனாய்வு எழுத, பல்வேறு இடையூறுகளால் இத்தனை காலம் ஆகிவிட்டது. எனது பாலைமலைப் பாடலை வெளியிட்ட நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாரே இந்நூலையும் வெளியிட இசைந்துள்ளார்கள். அவர்கள் உதவிக்கு என்றும் நன்றியுடையேன்.

எனக்கு பல்வகையிலும் உதவிசெய்த மேலே குறிப்பிட்டுள்ள நண்பர்களுக்கும், மாணவர் ஆண்டிக்கரை ஆக. வாசுதேவன் போன்ற இளைஞர்களுக்கும், கத்திரிப்பட்டி திருமதி சித்தாயி, திருமதி காவேரி போன்றவர்களுக்கும் என்றும் நன்றிக் கடப்பாடுடையேன். இந்நூலையும் தமிழுலகம் ஏற்று ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன்.

பாவேந்தர் குடில்,
8/40 பூங்காசாலை,
மேட்டூர் அணை - 636 401.

கோ.பெ. நாராயணசாமி,
(கோ.பெ.நா.) .

பொருளடக்கம்

		பக்கம்
1)	திருமண நிகழ்ச்சி - ஏசலும் பூசலும்	1
2)	பழிப்பும் - சிரிப்பும்	14
3)	ஆதியிலே சொன்ன சொல்லு	25
4)	வள்ளிக் கிழவன் - மாதவிக்கூத்து	51
5)	பல நாளும் சீரழிஞ்சேன் !	74
6)	அணி பார்த்துப் பூட்டவில்லை	86
7)	பன்மணிக் குவியல்	99
8)	தாலாட்டும் ஒப்பாரித் தாலாட்டும்	125
9)	துன்ப மாலைகள்	137

1. திருமண நிகழ்ச்சி - ஏசலும் பூசலும்

மக்கள் பண்பாட்டை விளக்குவதில்; திருமணமுறை ஒரு இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. அதனை அறிந்து கொள்வோமானால், அம்மக்களின் பண்பாட்டினைத் தெரிந்து கொள்ள இயலும். கத்திரிமலைச் சாரல் மக்களிடம் திருமணமுறை பற்றி வினவியபோது, கிடைத்த தகவல்களைக் கீழே தருகிறேன்.

திருமணத்திற்குமுன், நம்மைப் போலவே பெண் பார்க்கச் செல்கிறார்கள். அவர்கள், செல்லுமுன், தடவழி பார்க்கிறார்கள். தடவழி என்றால் சகுனம் பார்த்தல்தான்! தடவழி சரியாக இருந்தால், பெரிய மனிதர்கள் முன் செல்ல சிலர் உடன் செல்வார்கள். அவர்கள் பார்க்கச் செல்லும் குடும்பம், மாப்பிள்ளையின் குடும்பத்திற்கு மாறுபட்டதாக இருக்கும்.

குடும்ப வழிகள் பல உண்டு. அவை மாணிக்கம் குடும்பம், பலியன் குடும்பம், தலைவெட்டி குடும்பம் என்ற பல பெயர்கள் உண்டு. ஒரே குடும்பப்பெயர் உடைய குடும்பத்தில் பெண் எடுக்கும் பழக்கம் அவர்களிடம் இல்லை. உயர் குடும்பங்களில் சிலர் ஒரே கோத்திரத்தில் பெண் எடுக்கமாட்டார்கள்! வேறு கோத்திரத்தில்தான் எடுப்பார்கள். ஒரே இரத்தவழி வராமல் இருக்க இம்முறை பின்பற்றப்படுகிறது.

பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பெரும்பாலும் பெயர்ப் பொருத்தம் மட்டுமே பார்க்கப்படுகிறது. சாதகம் பார்க்கும் பழக்கம் அவர்களிடம் இன்னும் புகவில்லை. பெயர் பொருத்தம் சரியாக இருந்தால்தான் பெண்பார்க்கப்போவார்கள். அப்படிப் போகும்போது, நீர் நிரப்பிய ஒரு சுரைக்குடுக்கையும் ஒரு கைத்தடியும் முன் எடுத்துச் செல்ல வேண்டும். தடியும்

சுரைக்குடுக்கையும் முன் எடுத்துச் செல்லப்படவில்லை எனின், பெண் வீட்டாரை அவமதித்த குற்றம் மாப்பிள்ளை வீட்டாருக்கு வந்து சேரும். ஞாயம் பேசி, தடியும் சுரைக்குடுக்கையும் முன் அனுப்பாமைக்கு, குற்றமும் (தண்டம்) வைக்கப்படலாம்.

பெண்ணுக்கும் பரிசம் வழங்குதல் கட்டாயமாகும். திருமணம் மாப்பிள்ளை வீட்டில்தான் நடைபெறும். திருமண உணவில் கேழ்வரகுக் களி கட்டாயம் போடப்பட வேண்டும். திருமணத்திற்குப் பின் பெண் வீட்டிற்குப் பெண்ணுடன் மாப்பிள்ளை வரும்போது 'கோழிக் கறி நெல்லஞ் சோறு' விருந்தாகப் படைக்கப்படும்.

திருமணப் பந்தலில் கரகம் வைக்கப்பட்டிருக்கும். ஒரு பெரியவர்தான் திருமணச் சடங்குகள் செய்வார். வெற்றிலை வைத்துச் சில சடங்குகள் உண்டு. சமுதாயப் பெரியவர் தாலியை எடுத்துக் கொடுப்பார். மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டியபின் வாழ்த்துப் பாடல் பாடப்படும்.

அப்பாடல் :

இலைக்கு இலை எடுத்து
இளையவளே பொன்பூத்து
மனைக்கு சமைஞ்ச பொண்ணு
மணவாளன் பொண்ணு
கொங்கு மணவாளன்
குருக்கத்தி சேர்ந்தொளிரும்
வண்ணத் தடுக்கும் வாடாத மாலையும்
பொன்னுந் தடுக்கும் பூவாத மாலையும்
ஈனாத வாழை இளவாழை தலைவாசல்
இடம்புரி வலம்புரி இருபுறம் கட்டி
மார்பு நெறைஞ்சிருக்கும்
மல்லிகை திருமாலை

தோளு நெறைஞ்சிருக்கும் ,
துளசி திருமாலை
கொண்டை நெறைஞ்சிருக்கும்
கொடிமல்லி திருமாலை
குத்துவிளக்கும் குடவிளக்கு லட்சணமும்
சரவிளக்கும் மகர தோரணமும்
மஞ்சளும் சந்தனமும் இண்ணியிலே சந்தனமும்
இளிக்கால் வெத்திலையும், வைத்து
கன்னிய பொண்ணுக்கும்
கன்னிய மாப்பிளைக்கும்
மங்கிலியம் கட்டிட
காலைப் பொழுதிலே
கனத்த மேளம் முழங்க
நீரிலே பயிரு மொளச்சப்படி
நிலத்திலே தாமரை பூத்தப்படி
ஆல்போல் வளர்ந்து
அருகுபோல் வேரோடி
மூணு இலை மொளச்சி
மெய்யாக வாழ்ந்திடுக! பொண்ணே!

இவ்வாறு வாழ்த்துக் கூறிய பின், உணவு படைக்கப்படும். அனைவரும் பொண்ணு மாப்பிள்ளையுடன் உணவுண்பார்கள்.

அதன்பிறகு சடங்கு உண்டா? உண்டு. அவை ஏசலும் பூசலுமாகப் பாடல் பாடுதல் போன்றவை. முதலில் மாப்பிள்ளையை, அவனது அக்காள் தங்கை அல்லது அக்காள் தங்கை முறையில் உள்ளவர்கள் புகழ்ந்து பாடுவார்கள். நங்கை, கொழுந்தி முறையில் உள்ள பெண்கள் ஏசி பழித்துப் பாடுவார்கள் அவை வேடிக்கையாக அளவோடு இருக்கும்வரை மகிழ்ச்சியாகவே இருக்கும். சிலசமயம் அளவுக்குமேல் ஏசல்

சென்றால் அது பூசலாக மாறிவிடுவதும் உண்டு. மாப்பிள்ளையின் தங்கை பாடுகிறாள்:

அறுவருவா மேட்டுமேலே
யாராரெல்லாம் வாராங்க
எல்லா அண்ணனும் வாராங்கன்னு
எங்க அண்ணனும் வாராங்க.
என்ன குத்தி ஆக்கலாம்!
எது குத்தி ஆக்கலாம்?

தங்கை திருமணமானவளானால் அவள் வீட்டுக்கு அண்ணன் வருகையை இவ்வாறு பாடுகிறாள். அவர் விருந்தோம்பல் இங்கு கூறப்படுகிறது. அண்ணனுக்கு எப்படி சிறப்பாக விருந்து வைக்கலாம் என்று சிந்திக்கிறாள். உடன்பிறப்புப் பாசமல்லவா? இதோ பாடுகிறாள்:

போன வருசத்து சம்பா நெல்லு
பொதி பொதியா கிடக்குது
பச்சை நெல்லு குத்தி குத்தி
பளபளன்னு சோறு வடிப்பேன்.

சோறு வடிச்சால். போதாது! அதற்குத் தக்கக் குழம்பும் கறியும் செய்து சாப்பிடச் சொல்லுகிறாள். எப்படி உபசரிக்கிறாள்:

உண்ணுங்க அண்ணா உண்ணுங்க
ஊரு பார்க்கப் போகலாம்.
தின்னுங்க அண்ணா தின்னுங்க
தேரு பார்க்கப் போகலாம்.
சந்தனத்திலே கோலம் போடறேன்
சாஞ்சிக்க அண்ணா சாஞ்சிக்க
குங்குமத்திலே கோலம் போடறேன்
குந்திக்க அண்ணா குந்திக்க.

இப்படியெல்லாம் அண்ணனை (மாப்பிள்ளையை) அவள் பாடவும், மணப்பெண்ணின் உடன்பிறப்புக்குப் பாடவேண்டும் என்ற உந்துதல் ஏற்படுகிறது. மணமகனை தன் மாமனை நன்கு தாக்கிப்பாட எண்ணுகிறாள். பாட்டு புறப்படுகிறது:

அறுவருவா மேட்டுமேலே
யாராரெல்லாம் வாராங்க
எல்லா மாமனும் வாராங்கன்னு
எங்க மாமனும் வாராங்க.
என்ன குத்தி ஆக்கலாம்.
ஏது குத்தி ஆக்கலாம?

மாமனை எந்த அளவு கேலிசெய்ய முடியுமோ அந்த அளவு கேலி செய்துவிட வேண்டும் என்று எண்ணுகிறாள். இப்போது மாமனுக்கு உணவு சமைக்கிறாள். உணவு சமைப்பதற்காக தானியம் தேர்வு செய்கிறாள்.

போன வருசத்து புறடை ஆரியம்
பொதைகுழியிலே கெடக்குது
ஒண்ணா ரெண்டா நேம்பி
ஒண்ணா ரெண்டா ஒடைச்சி

குழியில் கிடக்கும் கேழ்வரகை எடுத்து, அதுவும் மாவு இல்லாத, தோல் மட்டும் நிற்கின்ற புறடை தானியமாக எடுத்து, அரைகுறையாக அரைத்து, களியாகக்கிளறி தன் மாமனைச் சாப்பிடும்படி உபசரிக்கிறாள் - எப்படி?

உண்ணுங்க மாமா உண்ணுங்க
ஊரு பார்க்கப் போகலாம்.
தின்னுங்க மாமா தின்னுங்க
தேரு பார்க்கப் போகலாம்!

இதுவரைக்கும் அவள் சொன்னவை கூட சரிதான் இனி அவள் சொல்லப் போவதுதான் கேலியின் சங்கடமான நிலைக்குச் செல்கிறது. சாப்பிட்டபின் தன் மாமனை உட்காரும்படி வேண்டுகிறாள். எங்கே? தான் மெழுகிக் கோலமிட்ட இடத்தில். எப்படிப்பட்ட கோலம்:

கோழிப்பிய்யிலே கோலம் போடறேன்
குந்திக்க மாமா குந்திக்க
பன்னிப் பிய்யிலே கோலம் போடறேன்
படுத்துக்க மாமா படுத்துக்க

இதுவரை மாப்பிள்ளை புகழ்ந்து பாடப்பட்டான் தன் உடன்பிறப்புகளால். இனி மணப்பெண்ணைப் பழித்தும், அவளை ஆதரித்தும் பாடப்படுகின்ற பாடல்கள் எழுகின்றன. மாப்பிள்ளையைச் சேர்ந்த பெண்கள் பெண்ணைப் பழிக்கிறார்கள். எல்லாம் கேலியும் விளையாட்டுமாகத்தான்! மணமகள் மிகவும் தாழ்ந்த படியில் இருந்து, உழைத்துத் துன்பப்பட்டிருந்தாள் என்று சொல்வதிலே மாப்பிள்ளையின் அக்கா தங்கைகளுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது.

நெல்லஞ்சுமை எடுத்து
நெஞ்சொடிஞ்ச நங்கையரே
கம்மஞ் சுமை எடுத்து
கழுத்தொடிஞ்ச நங்கையரே!

அவள் உருவமும் கேலி செய்யப்படுகிறது. அவள் உட்காருவதும், கழுத்தும் கூட கேலிக்கு உள்ளாகின்றன.

குந்தாணி பொச்சுக்கு
குதிரை எங்கே தேடறது
மந்தாணி கழுத்துக்கு
மாலை எங்கே தேடறது

மணமகள் உண்பது நல்ல அரிசி இல்லையாம், நல்ல பருப்பு இல்லையாம். அவள் இதற்குமுன் சாப்பிட்டது போலத்தான் மோசமான அரிசி பருப்பு கேட்பாளாம். அதை எல்லாம் நாங்கள் கண்டதில்லை, எப்படித் தேடித்தருவது என்கிறார்கள்.

பன்னி ரத்தம் போல
பருப்பு எங்கே தேடறது
ஆத்து மணலு போல
அரிசி எங்கே தேடறது.
ஊத்து மணலு போல
உப்பு எங்கே தேடறது

இவை மட்டுமல்ல, அவளுக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாது என்றும் பழிக்கிறார்கள். இதனை அவளுக்கு வேலை செய்யத் தெரியாது என்று மாப்பிள்ளை வீட்டார் பழித்தும் பாடலாம்! இதனையே பெண் வீட்டார் பாடும்போது, எங்கள் பெண் வீட்டுவேலை செய்யாமல் செல்லமாக வளர்ந்தாள் என்று வருவதாகவும் அமையும்.

கரிச்சட்டி கரிப்பானை - என் நங்கைக்குக்
கழுவத் தெரியாது
புதுச்சட்டி புதுப்பானை - என் நங்கைக்குக்
புழங்கத் தெரியாது.

இதனில், ‘என் நங்கைக்கு’ என்ற இடத்தில் ‘என் பெண்ணுக்கு’ என்று மாற்றிக் கொண்டால், பெண் வீட்டார் பாடும் பாடலாகிவிடுகிறது.

இந்தப் பெண்ணுக்கு வீட்டு வேலையும் தெரியாது. குடித்தனம் செய்யத் தகுதியற்ற பெண் இவள் என்று கூறிய செய்திகள் பெண்ணின் உடன்பிறப்புகளின் உணர்ச்சியைப் பாதித்து விடுகிறது. உடனே அவர்கள் பரிசம் கொடுத்ததால்

இப்படிப் படிப்படியாய்ப் பழி சொல்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

பணத்தைக் கொடுத்தமுன்னு
படிப்படியா பேசாதீங்க
பணமெல்லாம் சேர்ந்தாலும் - எங்க அப்பன் வீட்டு
பந்தலுக்குக் கட்டாது!
துட்டக் கொடுத்தமுன்னு
துடிதுடியா பேசாதீங்க
துட்டெல்லாம் சேர்ந்தாலும் - எங்க அப்பன் வீட்டுத்
தூணு விலை கட்டாது

இவ்வளவு மென்மையாக எதிர்க்கிறார்களே என்ற ஆதங்கத்தில் பெண் வீட்டுச் சார்பில், மாப்பிள்ளையைப் பழித்துப் பாடுகிறாள் மற்றொரு பெண்:

வந்தாண்டி தாயே புட்டிவவறன்
குத்திக் குத்திப் போடறேன்
குந்தாணி நெல்லு

ஏற்கனவே, இந்த மாப்பிள்ளைதான் இல்லத்துக்கு வந்தது போலவும், இவள் நெல்குத்தி உணவு சமைத்துப் போட்டது போலவும் பாடுகிறாள். கேலிக்காகவும், பழிப்புக்காகவும் அப்படிப் பாடுவது வழக்கம்தான்! மேலும் தொடர்கிறாள் அந்தப் பெண். இவள் தோசை சுட்டுப் போட்டாளாம் முன்னூறு நானூறு தோசை தின்ற பின்னும் புண்ணாக்கு ஒரு சட்டி தின்று ஒரு ஏரித் தண்ணீரையே குடித்தாராம் இந்த மாப்பிள்ளை. ஒரு ஏரித் தண்ணீர் போதாமல் இரண்டு சட்டிப் பிண்ணாக்கு தின்று இரண்டேரி தண்ணீர் குடித்தாராம், அதுவும் போதாமல் மூன்று சட்டி நான்கு சட்டி என சாப்பிட்டுக் கொண்டே இருந்தாராம் -

முக்காலி போட்டல்லோ
முன்னூறு தோசை வச்சேன்

அத்தனையும் தின்னாரே
அன்புடைய அத்தை மவன்.
நாற்காலி போட்டல்லோ
நானூறு தோசை வச்சேன்
அத்தையும் தின்னாரே
அத்தையோட சொத்தமவன்
ஒரு சட்டி புண்ணாக்காம்
ஓரேரி தண்ணீராம்.
அத்தையும் தீத்தாரே
அத்தையுடைய அருமைமவன்.
ரெண்டு சட்டி புண்ணாக்காம்
ரெண்டேரி தண்ணீராம்

இப்படியே மூணு சட்டி, நாலு சட்டி என்று சலிப்பு ஏற்படும்வரை புண்ணாக்கு போட்டுத் தீர்க்கிறாள் இந்தப் பெண். ஆனால் பெண்வீட்டார் குறுக்கிடாமல் இருப்பார்களா? குறுக்கிடுகிறார்கள். அப்படிக் குறுக்கிடும் பொழுது மாப்பிள்ளை வீட்டார் ஆரவாரம் செய்கிறார்கள். அவரவர் பக்கம் பாடும்போது, அவரவர் ஆரவாரம் செய்வது வழக்கமே இவை யாவும் வேடிக்கையாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். யாராவது உணர்ச்சிவசப்பட்டவர்களால் சண்டையாகி விடும். அதுவரை பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த பெரியோர்கள் தலையிட்டு சமாதானம் செய்து வைப்பார்கள்.

இப்பொழுது மாப்பிள்ளையில் சிறப்பும் இவனைத் திருமணம் செய்து கொள்வதற்காக இப்பெண் ஏங்கிய ஏக்கமும் மாப்பிள்ளை சார்பில் பாடப்படுகின்றன.

கருங்கரட்டோரம் - எங்க அண்ணன்
கருப்பாடு மேய்க்கையிலே
கடைகெட்ட அத்தைமவ - எங்க அண்ணன்
கடைவாயை முத்தமிட்டாள்

வெள்ளை கரட்டோரம் - எங்க அண்ணன்
வெள்ளாடு மேய்க்கையிலே.
வெக்கங்கெட்ட அத்தை மவ - எங்க அண்ணன்
வெறும் வாயை முத்தமிட்டாள்
காரவடை தின்னுக்கிட்டு - எங்க அண்ணன்
கடைவீதி போகையிலே
கடைகெட்ட அத்தைமவ - எங்க அண்ணன்
கடைவாயை முத்தமிட்டாள்.

பெண்ணின் அக்காவுக்குச் சினம் ஏற்படுகிறது. அவள் குறுக்கிட்டுப் பாடுகிறாள்:

வெல்லத்தைத் தின்னுக்கிட்டு - என் தங்கா
வீதி வழி போகையிலே
வெக்கங் கெட்ட அத்தை மவன் - என் தங்கா
வெல்லவாயை முத்தமிட்டான்.

உடனே மாப்பிள்ளை வீட்டுப் பக்கமிருந்து பதில் வருகிறது.

கோடாலியைப் போட்டுகிட்டு - என் தம்பி
கொல்லை வழி போகையிலே
குடி கெட்ட அத்தை மவ - என் தம்பியை
கொஞ்சி கொஞ்சி முத்தமிட்டாள்.

மணப்பெண் பக்கமிருந்து (கோடலி - குடுமி) சண்டை போல் பாட்டு வருகிறது.

கடலையைத் தின்னுகிட்டு - என் தங்கை
கன்னு மேய்க்கப் போகையிலே
கரிசட்டி மாமன் மவன் - என் தங்கை
காலை வந்து முத்தமிட்டான்.

மாப்பிள்ளை பக்கமிருந்து பாடல் தள்ளுகிறது.

வெத்தலையைத் தின்னுகிட்டு - என்தம்பி
வீதி வழி போகையிலே
புத்தி கெட்ட மாமன் மவ - என் தம்பி
பொடனியிலே முத்தமிட்டாள்.

இவர்களது ஏசல் முற்றுப் பெறவில்லை. சற்று திசை மாறுகிறது. மாப்பிள்ளையின் அக்காள் மேலும் பாடுகிறாள். தன் தம்பியை இவள் சுற்றிச்சுற்றி வந்ததால்தான் மனம் இரங்கித் திருமணம் செய்து கொண்டான் என்கிறாள்.

மாங்கா மரமேறி - என் தம்பி
மாங்கனியை உண்கையிலே
மாங்காமரம் சுத்தி சுத்தி
மயங்கினவ நீதானே!

மனதில் இது பாவமின்னு - என் தம்பி
மடியில் வச்சி மாலையிட்டான்!

தேங்கா மரமேறி - என் தம்பி
தேங்காயைப் பறிக்கையிலே
தேங்காமரம் சுத்தி சுத்தி
தேம்பினவ நீதானே

தேடி இது பாவமின்னு - என் தம்பி
திண்ணை மேலே மாலையிட்டான்!

அப்படியே இவன் பெண்ணுக்கு இரக்கப்பட்டு மாலையிட்டிருந்தாலும், அவளுக்கு உரிய மரியாதை யைத் தர வேண்டாமா? தரவில்லை என்பது போல, உலக வழக்கை ஒட்டிப் பாடுகிறாள் மாப்பிள்ளையின் உடன்பிறப்பு. நடவாததை நடந்தது போலப் பாடுவதும் இலக்கியமரபு தானே.

மாப்பிள்ளை தன் மனைவியை நடக்க வைத்துவிட்டுக் குதிரைமேல் வருவாராம்! விரும்பி அவள் திருமணம் செய்து கொண்டமைக்கு இதுதானா தண்டனை என்கிறாள்.

கொள்ளு பொறுக்கி மவன்
குதிரை மேலே வாராரு!
கோயிலாரு பெத்த செல்வம்
கால் நடையா வாரதென்ன?

நல்ல குடும்பத்துக்கு
இவரோ மருமகன்?

அத்தையம்மா பெத்த மவன்
ஆனை மேலே வாராரு!
அருங்லவர் பெத்த செல்வம்
கால்நடையா வாரதென்ன?

புண்ணியரு வாசலுக்கு
இவரோ மருமவன்.

இந்தப் பாடல்களில் சமுதாய உண்மைகள் பொதிந்து இருப்பதைக் காண முடியும். இன்றும் படித்தவர்கள் கூட, மனைவி மக்களுடன், ஊருக்குச் செல்கிற பொழுது, மனைவிதான் மூட்டை முடிச்சுகள், குழந்தை குட்டிகளைச் சுமக்கவேண்டி வருகிறது. கணவன், ஒரு சின்ன பையைக் கையிலே எடுத்துக் கொண்டு கவலையின்றி நடப்பார்! இன்று இது ஓரளவு மாறி வருகிறது என்றாலும், பெண்ணடிமைச் சமுதாயத்தின் மிச்சம் மீதிகள் இருக்கத்தான் செய்கின்றன.

கொள்ளு பொறுக்கி மவன் குதிரை மேல் வருவதும் ஆனை மேல் வருவதும், அவன் மனைவி நடந்து வருவதும் எல்லா நிலைகளிலும் சமுதாய உண்மைகள்தாம்! திருமணங்களில் கூட, ஆண்கள் நாற்காலிகளில் உட்காருவதும், பெண்கள், கீழே

விரிப்புகளில் உட்காருவதும், நாம் கண்டவைதாம். உணவு உண்ணும்போது கூட ஆண்கள் முன்னால் உண்பதும், பெண்கள் குழந்தைகளுடன் இருந்தாலும் பின்னர்தான் உண்பதும் நிகழும் நிகழ்ச்சிகள்தாம்!

பெண் இரண்டாம் நிலையில்தான் வைக்கப் பட்டுள்ளாள் என்பனவற்றையும் இப்பாடல்கள் நிறுவுகின்றன. அத்துடன் நாட்டுப்புற மக்களின் பண்பாடு நாகரிகம் காட்டப்படுகின்றன.

உணவு வேளை வந்தவுடன் திருமணப் பாடல்கள் ஏசல் பூசல்கள் முடிவுற்று சுமுகமாகிவிடுகின்றன.

2. பழிப்பும் சிரிப்பும்

நிலவொளியில் ஆண்களும் பெண்களும் வேற்றுமை யின்றிக், கூடி பகலெல்லாம் உழைத்த களைப்பு நீங்க, ஆடிப்பாடி மகிழ்வது வழக்கம். அந்த நாட்டுப்புற மக்கள், எதைப் பாடினாலும், கும்மியடித்துக் கொண்டு அல்லது உரிய அபிநயம் பிடித்துக்கொண்டு தான் பாடுகிறார்கள்.

இரவில் அவர்கள் பாடுவதற்குக் கருப்பொருளாகக் கிடைப்பது பெரும்பாலும் திருமணம், ஆண் பெண் தொடர்பான பால் உணர்வுகள், அவர்களுக்குள்ளே போட்டிகள், சவால்கள் முதலியனவாகும்.

மிக இணக்கமாகத் தொடங்கும் பாடல் நிகழ்ச்சி ஒன்று. ஒரு சில பெண்கள் மாப்பிள்ளை வீட்டாராக பாவனை செய்துகொள்கிறார்கள். சிலர் பெண் வீட்டாராகப் பாவனை செய்துகொண்டு இரண்டு அணியாகப் பிரிகிறார்கள். மாப்பிள்ளை வீட்டார், தாம் முறைப்படி பெண் கேட்க வேண்டியவர்களிடம் அதாவது பெண் வீட்டாரிடம் பெண் கேட்க வருகிறார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் வரிசையாக நின்று கொண்டு, பெண் கேட்டுக்கொண்டே முன்னோக்கிப் பாடிச் செல்கிறார்கள். பெண் வீட்டார் - பின்னோக்கிச் செல்கிறார்கள். பெண் வீட்டார் பதில் கூறிப்பாடும்போது இவர்கள் வரிசையாக முன்னே வருகிறார்கள். பெண் கேட்டவர்கள் பின்னாலேயே நகர்ந்து செல்கிறார்கள். இது மாறிமாறி நடைபெறும்.

மாப்பிள்ளை வீட்டார்:

கிச்ச கிச்சு லேக்லா பொண்ணு உண்டா?
கிய்யால லேக்லா பொண்ணு உண்டா?
சாமக் குருத்துபோல பொண்ணு உண்டா?
சம்பந்திக் கூட்டமே பொண்ணு உண்டா?

பெண் வீட்டார் பிகு செய்து கொண்டு பதில் சொல்வதாக அமைகிறது. இப்பாடல், இன்றும் நாட்டுப்புறங்களில் பெண் வீட்டாருக்குத்தான் மாப்பிள்ளை வீட்டார் பரிசம் தர வேண்டும். பல நடை நடக்க வேண்டும். இதோ பதில்:

கிச்சு கிச்சு லேக்லா பொண்ணு இல்லே!
கிய்யால லேக்லா பொண்ணு இல்லே!
சாமக் குருத்துபோல பொண்ணு இல்லே!
சம்பந்திக் கூட்டமே பொண்ணு இல்லே!

இங்கே சாமைக் குருத்து போல 'தளதள' என்றிருக்கும் பெண்ணைக் கேட்பதும் நமக்கு ஒரு செய்தி தருகிறது. அவர்கள் வேளாண்மையில் 'சாமை' என்ற தானியம் முக்கிய இடம் வகிக்கிறது. நெல்லரிசி பயன்பட வேண்டிய இடங்களில் அதற்குப் பதிலாக சாமை அரிசி உணவு அதற்குச் சமமாகக் கருதப்படும்.

மீண்டும் மாப்பிள்ளை வீட்டார் முன்னோக்கிச் சென்று கொண்டே பெண் கேட்கிறார்கள். முன்னர் பாடிய அதே பாட்டு. கிச்ச கிச்ச லேக்லா பொண்ணுண்டா என்பது அந்தப் பாட்டு. அதற்குப் பதில் சொல்லும் மாப்பிள்ளை வீட்டார்,

கிச்ச கிச்ச லேக்லா வயித்ல இருக்கு
கிய்யால லேக்லா வயித்ல இருக்கு
சாமக் குருத்து போல வயித்ல இருக்கு
சம்பந்திக் கூட்டமே வயித்ல இருக்கு

என்று பாடுவார்கள். மீண்டும் மாப்பிள்ளை வீட்டார் முன்னால் நடந்து வந்துகொண்டே பழைய படியே பெண் கேட்பார்கள். பெண் வீட்டார்,

கிச்ச கிச்ச லேக்லா பொறந்திருக்கு
கிய்யால லேக்லா பொறந்திருக்கு
சாமக்குருத்து போல பொறந்திருக்கு
சம்பந்திக் கூட்டமே பொறந்திருக்கு.

என்று பாடுவார்கள் - மீண்டும் மீண்டும் மாப்பிள்ளை வீட்டார் பழையபடியே பெண் கேட்டுக் கொண்டிருக்க பெண் வீட்டார்,

தவழ்ந்திருக்கு
நடந்திருக்கு
சமைஞ்சிருக்கு

என்றெல்லாம் இறுதி அடி வரும்படியாகப் பாடி இறுதியில்:

கிச்ச கிச்ச லேக்லா பொண்ணு தர்ரோம்
கிய்யால லேக்லா பொண்ணு தர்ரோம்
சாமக் குருத்து போல பொண்ணு தர்ரோம்
சம்பந்திக் கூட்டமே பொண்ணு தர்ரோம்.

என்று முடிப்பார்கள். அமைதியாகவும், வேடிக்கை யாகவும் பாடப்படும் 'இப்பாடல்' நமக்கு உணர்த்துவது என்ன? பெண் கேட்டுச் சென்றாலும், உடனே பெண் கிடைத்துவிடாது. பல நடை சலிக்காமல் நடக்க வேண்டும். பெண் வீட்டார் எளிதில் தன் பெண்ணைக் கொடுத்து விடமாட்டார்கள் என்பனவற்றை இது நமக்கு உணர்த்துகிறது.

உணர்ச்சியோடும், ஆத்திரத்தோடும் பாடல்களும் ஆண் பெண் பாடல்களில் உண்டு. இது ஆண்கள் ஒரு அணி. பெண்கள் ஒரு அணி. இங்கு இனக் கவர்ச்சி வரவில்லை. இன மோதல் வருகிறது. முதலில் பெண்கள் வரிசையாக நின்று முன் பின்னாகச்

சென்று கும்மியடித்துப் பாட, ஆண்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். ஒரு பெண் முன்பாட்டுப் பாட கும்மியடிக்கும் அனைவரும் பின்பாட்டு பாடுகிறார்கள்.

ஆம்பளைங்க கட்டறது
என்ன என்ன வேட்டி?
குப்பை மேட்டில் கிடக்கும்
கோமணத்து வேட்டி!

பொம்பளைங்க உடுத்தறது
என்ன என்ன சீலை?
தெக்கே இருந்து வரும்
தேசங்கிரிப் பட்டு!

ஆம்பளைங்க திங்கறது
என்ன என்ன கிண்ணிலே
பிஞ்சிபோயி கிடக்கும்
பித்தளை கிண்ணிலே.

பொம்பளைங்க திங்கறது
என்ன என்ன கிண்ணிலே
வெள்ளியிலே போட்டிச்ச
வேசான கிண்ணிலே

ஆண்பிள்ளை கட்டுவது கிழிந்த கோமணத் துணியாம். பெண் கட்டுவதோ தெற்கே இருந்த வந்த பட்டுச் சேலையாம். ஆண்பிள்ளை உடைந்த பித்தளைக் கிண்ணியில்தான் சாப்பிடுவானாம்! ஆனால் பெண்ணோ வெள்ளித் தட்டில்தான் சாப்பிடுவாளாம்! பெண் பெருமிதமாகச் செல்வச் சீமாட்டியாக நடந்து கொள்வாளாம். ஆனால் ஆணோ, இழிவாக, பாமரனாக நடந்து கொள்வானாம்.

வாழ்க்கையில்தான் அடிமை நிலையில் இருந்தாலும், கற்பனையில், வேடிக்கையிலாவது பெண் ஆணை மிஞ்சுகிறாள். மேலும் பாடுகிறார்கள்.

ஆம்பிளைங்க குடிக்கிறது
என்ன என்ன சொம்புலே?
பிய்யிலே கிடக்குமாம்
பித்தாளை சொம்புலே!

பொம்பளைங்க குடிக்கறது
என்ன என்ன சொம்புலே?
வெங்கலத்திலே அடிச்ச
வேசான சொம்பு!

ஆம்பளைங்க திங்கறது
என்ன என்ன சோறு?
அவரைக் கீரை பொருச்சந்தழை
ஆட்டாம் புழுக்கை ஆகியம்!

பொம்பளைங்க திங்கறது
என்ன என்ன சோறு?
கோழிக்கறி நெல்லஞ்சோறு
குந்திக் குந்தி தின்னுவம்!

ஆம்பளைங்க போடறது
என்ன என்ன வெத்திலை!
அரசந்தழை வெத்திலை
ஆட்டாம் புழுக்கை பாக்கு!

பொம்பளைங்க போடறது
என்ன என்ன வெத்திலை
தெக்கே இருந்து வரும்
தேசம் கிரி வெத்திலை!

ஆம்பளைங்க போடறது
என்ன என்ன சுண்ணாம்பு
கூடையிலே அடைச்சிருக்கும்
கோழி போட்ட சுண்ணாம்பு

பொம்பளைங்க போடறது
என்ன என்ன சுண்ணாம்பு
குப்பியிலே அடைச்சிருக்கும்
குளிருவாச சுண்ணாம்பு.

ஆம்பளைங்க துவைக்கிறது
என்ன என்ன தண்ணித்தொறை
பேயும் பிசாசும்
தண்ணீ வாக்கும் தண்ணித்துறை.

பொம்பளைங்க துவைக்கிறது
என்ன என்ன தண்ணித்துறை
சந்தனமும் சவ்வாதும்
வாசம் வீசும் தண்ணித்துறை.

ஆம்பளைங்க படுக்கிறது
என்ன என்ன மெத்தை
அந்தண்டை இந்தண்டை
கட்டெறும்பு மெத்தை

பொம்பளைங்க படுக்கிறது
என்ன என்ன மெத்தை
அந்தண்டை இந்தண்டை
மல்லிகைப்பூ மெத்தை

ஆம்பளைங்க போடறது
என்ன என்ன குடுமி

காலிமாறும் விளக்கமாறும்
தொங்குமாங் குடுமி

பொம்பளைங்க போடறது
என்ன என்ன கொண்டை
பொட்டி நகை பேழை நகை
போட்டு வச்ச கொண்டை

ஆம்பளைங்க நடக்கிறது
என்ன என்ன நடை
காரிமாட்டைக் கெழட்டெருது
துரத்தி வரும் நடை

பொம்பளைங்க நடக்கிறது
என்ன என்ன நடை
செவலை மாடு சிங்காரமா
நடக்கும் நடை!

ஆம்பளைங்க ஏறறது
என்ன என்ன குதிரை
பல்லை பல்லை கெஞ்சுமாம்
பவுடு போன குதிரை

பொம்பளைங்க ஏறறது
என்ன என்ன குதிரை
வெள்ளியிலே சேணம் போட்ட
வீரமான குதிரை!

பெண்கள், ஆம்பளைகள் கட்டுவது குப்பைத்துணி சாப்பிடுவது பிஞ்சுபோன பித்தளைக் கிண்ணி, என்று சொல்வதோடன்றி, நீர் குடிக்கும் சொம்பு உடைந்த பித்தளைச் சொம்பு, சாப்பிடுவது அவரைக்கீரை, கேழ்வரகுக்களி, போடும் வெற்றிலை அரசந்தழை. கோழி எச்சமான சுண்ணாம்பு,

ஆட்டுப்பிழுக்கைப் பாக்கு, வேட்டி துவைப்பது கூட நல்ல துறையல்ல. பேயும் பிசாசும் இருக்கும் நீர்த்துறை. அவர்கள் படுக்கும் படுக்கையும் கூட ஈயெறும்பு மொய்த்துக் கிடப்பதுதான். அவர்கள் போடும் குடுமியில் விளக்குமாறும் காலிமாறும் தொங்குமாம். நடக்கும் நடை எப்படிப்பட்டது? கிழட்டெருது காரி மாட்டின்மீது காதல்கொண்டு துரத்திக் கொண்டு ஓடும் நடை ஏறி சவாரி செய்வதோ பல்லுபோன குதிரை.

இப்படியெல்லாம் அவர்கள் கூறுவது, அவர்கள் அன்றாடம் பார்க்கின்ற, பழகுகின்ற, புழங்குகின்ற எடுத்துக் காட்டுகளால் கூறுவதைக் கேட்டு மகிழ்ச்சி யடையலாம். குறிப்பாக காரிமாட்டைக் கிழட்டெருது துரத்தும் நடை, வேடிக்கையானது. நகைச்சுவையை வரவழைக்கக்கூடியது.

பெண்கள் தங்கள் சிறப்புகளாகக் கூறுவன சற்று மிகைப்பட்ட கற்பனை உடையவை. நாட்டுப்புற மக்களுக்குக் கற்பனை எவ்வளவு கைவந்த கலையாக உள்ளது என்பதற்கு இது சான்று பகர்கிறது.

பெண்கள் உடுத்துவதோ உயர்ந்த பட்டுச்சேலை. அவர்கள் சாப்பிடும் தட்டமோ வெள்ளியால் செய்தது. தண்ணீர் குடிக்கப் பயன்படுத்துவது வெண்கலச் செம்பு. சாப்பிடும் உணவு கோழிக்கறி நெல்லஞ்சோறு இறக்குமதியான வெற்றிலையில் குளிர்ந்த சுண்ணாம்பு தடவிப் போடுவார்கள். அவர்கள் துணி துவைப்பது சந்தனமும் சவ்வாதும் மணக்கின்ற நீர்த்துறை. படுப்பதோ மல்லிகை மணம் வீசும் பட்டு மெத்தை. அவர்கள் போடும் கொண்டையில் பெட்டிநகை, பேழை நகை அணியப் பெற்றிருக்கும். அவர்களது நடை இளம் செவலை மாடு நடக்கும் அழகிய நடை. சவாரி செய்யும் குதிரை வெள்ளிச் சேணம் போட்டது.

இதுவரை நிதானமாக அமைதியாகச் சென்ற பாட்டு, சற்று முறுக்காகச் செல்கிறது. கைகள் முடுக்காகத் தட்டப்படுகின்றன. கால்கள் வேகமாக நடைபயில்கின்றன.

ஆம்பிள்ளை அறுக்கும் பில்லு
அடிபட்ட குன்னம் பில்லு
பொம்பளை அறுக்கும் பில்லு
புதுமையான சம்பாப் பில்லு

ஆம்பிளை கட்டும் சுமை
அடிபட்ட குன்னஞ்சுமை
பொம்பளை கட்டும் சுமை
பொதி பொதியா சம்பாச் சுமை

ஆம்பிளை திங்குஞ்சோறு
அழுகிப் போன பழைய சோறு
பொம்பளை திங்கும் சோறு
புதுமையான சம்பாச்சோறு

ஆம்பிள்ளை தேய்க்கும் எண்ணெய்
அழுகிப் போன தேங்காய் எண்ணெய்
பொம்பளை தேய்க்கும் எண்ணெய்
புத்தம்புது சம்பங்கி எண்ணெய்

ஆம்பிளை வைக்கும் பொட்டு
அடிச்சட்டி கரிப்பொட்டு
பொம்பளை வைக்கும் பொட்டு
குளுமையான சாந்துப்பொட்டு

ஆம்பிள்ளை கட்டும் வேட்டி
அழுக்குச் சட்டிக் கரித்துணி
பொம்பளை கட்டும் சேலை
புத்தம்புது பட்டுச் சேலை

முன் கூறப்பட்டவையே கூட, மீண்டும் இந்த விரைவு சந்தத்திலும் வருகின்றன. ஆம்பிள்ளை அறுப்பது குன்னம்புல்லு. அது சரியானபடி கிட்டாது. சுமையும் விரைந்து சேர்க்க இயலாது. ஆகவே ஆண்கள் தான் அதனை அறுப்பார்கள்! பெண்கள் 'தள தள' வென வளர்ந்துள்ள சம்பாப் புல்லைத்தான் அறுப்பார்கள். ஆணைவிட பெண்கள் கூர்மையான அறிவுடையவர்கள் என்று மட்டுமல்ல, சிறப்பான பொருள்களையே பயன்படுத்துவார்கள் என்பதையும் பெண்கள் பெருமையாகக் கூறிப் பாடுகிறார்கள்.

பெண்கள் பாடி முடிக்கும்வரை பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்த ஆண்கள், பிறகு தாங்கள் பாடத் தொடங்குகிறார்கள். இதே பாடல்கள்தான்! ஆனால் பெண்களைக் குறைத்தும், தங்கள் மதிப்பை உயர்த்தியும் பாடுகிறார்கள். பாடல்களில் வேறுபாடில்லை. பாடல் அடிகளில் பெண் என்பது ஆணுக்கும் ஆண் என்பது பெண்ணுக்கும் மாறுகிறது.

ஆம்பளைக்கு கட்டறது
என்ன என்ன வேட்டி?
தெக்கே இருந்து வரும்
தேசங்கிரி வேட்டி

பொம்பளைங்க கட்டறது
என்ன என்ன சேலை
குப்பையிலே கிடக்கும்
குட்டை கந்தல் சேலை

ஆம்பளைங்க திங்கறது
என்ன என்ன கிண்ணி?
வெள்ளியிலே அடிச்சிருக்கும்
வேசான கிண்ணி.

பொம்பளைங்க திங்கறது
என்ன என்ன கிண்ணி?
பிஞ்சு கிடக்கும்
பித்தாள்ள கிண்ணி

இவ்வாறே பாடல் முழுவதும் மாற்றம் பெறுகிறது. இந்த செய்திகள் சற்று உணர்ச்சிகரமாக மாறி ஆண்கள் பாடுவது.

கரட்டோரம் கொட்டாயாம்
கவண்டன் மகள் குப்பாயாம்
குப்பாயி பட்டபாடு
கொட்டாயை கேட்டுப்பாரு

இப்பாடல் பாலை மலைப் பாடலிலும் வந்துள்ளது. ஆனால் அதற்கு அங்கு பதில் கிடைக்கவில்லை. இங்கே பதில் கிடைக்கிறது மிகச் சூடாக. சற்று விரசம்தான் என்று தோன்றுகிறது. ஆனாலும் அவர்கள் இயல்பு போலவே பாடுகிறார்களே!

ஆத்தோரம் ரெண்டு முட்டை
அழகான கோழி முட்டை
கோழிமுட்டை பட்ட பாடு
கொமுரிப் பொண்ணை கேட்டுப்பாரு!

இப்பாடல்களைக் கேட்கும் இளைஞர்களும் சிரிக்கிறார்கள். இளம் பெண்களும் வாய்க்குள் சிரிக்கிறார்கள். பெரியோர்கள் வாய்விட்டே சிரிக்கிறார்கள். உணர்ச்சிகரமாக இருந்த சபை கலகலப்பாக மாறிவிடுகிறது.

3. ஆதியிலே சொன்ன சொல்லு

'சின்னண்ணன் பெரியண்ணன் கதை' என்று அண்ணன்மார் கதை வழங்கி வருவதை நாம் அறிவோம். ஆனால் குறிப்பிடப்படுகின்ற பொன்னர் சங்கர் கதையல்லாமல், பல சின்னண்ணன் பெரியண்ணன் கதைகள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி வழங்கி வருகின்றன. அவற்றுக்குள் எந்த ஒற்றுமையும் இருக்காது.

இந்த கதையும் அந்த வரிசையிலே ஒரு கதைதான்! இதனை 'சின்னண்ணன் கதை' என்று சொல்கிறார்கள். இது 'அதியில் சொன்ன ஒரு சொல்லுக்காக' நிகழ்ச்சிகளைச் சுமக்கிறது. இது ஒரு மெல்லிய காதல் உணர்வோடு தொடங்கி, அண்ணன் மிரட்டலுக்காக அடங்கி, சூழலால் ஒடுங்கி சிதறலாக முடிகிறது.

இக்கதைப்பாட்டில் சரியான எதுகை மோனைகள் இல்லை. என்றாலும் பாடுகின்றபொழுது, நான்கடிக்கு ஒரு முறை இழுத்துச் சரிகட்டி, பின்பாட்டுக்காரருடன் ஒட்டி முடிக்கிறார் பாடுபவர். இனி கதைப்பாட்டுக்குப் போகலாம்.

சின்னண்ணன் பெரியண்ணன்
அண்ணன்தம்பி ஏழே பேரு
ஏழுபேர் அண்ணனுக்கு
இளையதம்பி சின்னண்ணன்
ஆரவன் சின்னண்ணன்
கரடு மலைக்குள்ளே
காரை வனங்காட்டுக்கு
சூரை வனங்காட்டுக்கு
எருத்து மாட்டை ஓட்டிப்போறான்.

ஏரிக்கரை மேலே
எருத்து மாட்டை மேயவிட்டான்!
ஓசந்த நல்ல கல்லேறி
புல்லாங்குழலெடுத்து,
ஓசையிட்டு ஊதுரானே!
கல்லால பத்துமாடு
பில்லால பத்துமாடு
மாட்டைப் பிரித்துவிட்டு
மேய்க்கிறாண்டா சின்னண்ணன்.
காரை வனங்காட்டுக்குள்ளே
ஏரிக்கரை மேலே
ஊதுரானே சின்னண்ணன்
புல்லாங்குழல் எடுத்து
உன்னிதமா ஊதுரானே!
எடமலைக்கு அந்தாண்ட
சூரை வனங்காட்டிலே
கன்னங் கருத்த பொண்ணு
கருத்த ஆடு மேய்க்கிறாளே !
எருமையும் ஓட்டிக்கிட்டு
வாராளே ஏரிக்கு
கன்னங் கருத்த பொன்னு
கண்டாளே சின்னண்ணனை
ஏரிக்கரை மேலே
எருமையை விட்டுவிட்டு
கரைமேலே உட்காந்து
ஓசனைகள் செய்கிறாளே !

சின்னண்ணன், சூரைவனங்காட்டு ஏரிக்கரையிலே மாடுகளை மேய்க்கிறான். கன்னங்கருத்த பொண்ணு கருத்த ஆடும் பெருத்த எருமைகளையும் சேர்த்து மேய்க்கிறாள். குழல் வாசிக்கும் சின்னண்ணனைப் பார்க்கிறாள். அவனது

ஒலிஇசையைக் கேட்கிறாள். சின்னண்ணனும் அவளைப் பார்க்கிறான். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலும் அவர்கள் பேசிக் கொண்டதில்லை. இவ்வாறுதான் நாள்தோறும் நடந்தது.

ரெண்டுபேரும் கரைமேலே
குந்தியே இருந்தாலும்,
ஒருவருச காலமா
ஒருவரும் பேசவில்லை.
எருமையும் மாடுகளும்
இண்ணஞ்சிதான் மேய்ஞ்சாலும்
வாய்பேசா சின்னண்ணன்
மனசிலே நெனைக்கிறானே !
"யாரடா இந்த பொண்ணு
ஒருவருச காலமா
வாயால பேசாமல் - எருமை
மாடுமேய்ச்சி வாராளே !
இவள் பேசா போதினிலே
நான் பேச மாட்டேனே !"
இந்தவிதமாகத்தான்
ஓசனைகள் செய்யுறானே!
எருமை மேய்க்கும் சின்னபொண்ணு
இளமனதில் யோசிக்கிறாள்:
"யாரடா இந்த பையன்
ஒரு வருச காலமா
வாயுமே பேசாம
வந்து மாடு மேய்க்குறானே!
இந்த பையன் பேசாம
நான் பேச மாட்டேனே!"
இப்படி மனசுக்குள்ளே
எண்ணி இருக்கிறாளே!

ரெண்டு பேரும் ஒருமனசா
எண்ணங்கொண்டு இருந்தாங்க
ஒருவருச காலமா
ஓசனையில் இருக்குறாங்க.

சின்னண்ணன் ஒரு திசையில் இருந்து கால்நடைகளை ஓட்டி வருவான். அவள் மற்றொரு திசையில் இருந்து கால்நடைகளை ஓட்டி வருவாள்! ஆனால் ஒரு ஏரிதான் அவர்களும் கால்நடைகளும் சங்கமம் ஆகும் இடம். ஒருவருக்கொருவர் பேசாமலே ஓராண்டு கழிந்த நேரத்தில் ஒரு நாள்:

ஒருநாள் ஒருபொழுது
ஓடையிலே மேய்க்கையிலே
செங்காத்தும் செம்மழையும்
சேர்ந்து அடிக்குதம்மா
கருங்காத்தும் கருமழையும்
கலந்து அடிக்குதம்மா
காத்திலே வேட்டி
கைவிட்டுப் போகாம
சின்னண்ண சாமியுமே
எட்டு மொழ வேட்டியை
மழையிலே நனையாம
சுருட்டி எடுத்தானே!
மரப்பொந்துக்குள்ளே
சுருட்டியும் வச்சானே!
கோமணத் துணியோடே.
குந்தி இருந்தானே!
முண்டுக் கட்டு ஓடம்போட.
முடங்கிக் கிடந்தானே!

இவன் வேட்டியை மரப்பொந்தில் வைத்துவிட்டு முடங்கிக் கொண்டான். செங்காத்தும் செம்மழையும் சூரையடிக்கிறது. அந்தப் பெண்ணின் நிலை என்ன? கன்னங்கருத்த பொண்ணு என்ன செய்கிறாள்?

செங்காத்தும் செம்மழையும்
சேர்ந்து அடிக்கும்போது
கன்னங்கருத்த பொண்ணு
காரெருமை மேய்க்கும் பொண்ணு
குளிரிலும் காத்திலுமே
குந்தி கிடந்தாளே!
செங்காத்து வேகத்திலே
சீலை கிழிந்ததுவே!
தேகாதி தேகமெல்லாம்
சில்லுன்னு நனைஞ்சாளே!
மத்தி மரத்தடியே
சின்னண்ணன் குந்தியிருக்க
கருத்த பொண்ணு சேலையெல்லாம்
கந்தல் கந்தல் ஆயிடிச்சே!
சேலை கிழிந்ததனால் எழுந்திருக்க முடியாமல்
காய்ச்சல் குளிரும் வர
கடகடன்னு நடுங்குறாளே!

சேலை கிழிந்து போனதால் வெட்கத்தின் காரணமாகவும் அவள் எழுந்திருக்க இயலவில்லை. குளிர் காரணமாகவும் எழுந்திருக்க இயலவில்லை. காற்றும் மழையும் ஓய்கின்றன.

செங்காத்தும் செம்மழையும்
சேர்ந்து நின்ன பின்னாலே
எட்டு முழ வேட்டியை
எடுத்தானே சின்னண்ணன்
எடுத்து விரித்துமே

கன்னங்கருத்த பொண்ணு
கடுங்குளிரில் நடுங்கும் பொண்ணு
சீலை கிழிஞ்ச பொண்ணு
உடம்பிலே போர்த்தி விட்டான்!
கரைக்குமேல் குந்தி,
கருப்பியைப் பார்க்குறானே!

அவன் எழுந்து தன் புடவையை, வேட்டியைச் சுற்றிக் கொண்டு பழித்தாள்! மீண்டும் புடவையைக் கட்டிக் கொண்டு வேட்டியைத் தருவாள் என்று எதிர்பார்த்தான் சின்னண்ணன். அதற்காக அமைதியாகக் காத்துக் கொண்டிருந்தான்! அவனிடம் ஓராண்டு காலம் பேசாதிருந்த கருப்பி, அவனிடம் நெருங்கிக் கெஞ்சலாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறாள்!

"புடவை கந்தல் கந்தலாகி விட்டதனால் அது கட்ட இயலாத நிலையில் உள்ளது. உனது எட்டு முழ வேட்டியில் நாலு முழம் கிழித்துக் கொடு!" என்று கேட்கிறாள்! கருப்பிதான் முதன்முதலாகப் பேசுகிறாள்॰ 'தேவை' அவளைப் பேச வைத்து விட்டது.

தக்க சமயத்தில் உதவிய அவனிடம் அய கௌரவம் பாராட்ட வேண்டியதில்லை அல்லவா? அவள் கேட்கிறாள்:

யாரடா சின்னண்ணா
அழகுள்ள மாமாவே
ஆபத்துக் காலத்திலே
காப்பாத்தி விட்டாயே!
காலைப் புடிக்கிறேன்
கருணையுள்ள மாமாவே !

அவள் இவ்வாறு சொல்லவும், சின்னண்ணன் அதே பாங்கில் பதில் அளிக்கிறான்.

யாரடி பெண்ணே நீ
அழகுள்ள கருப்பாயி
எந்தனுக்கும் குளிர்காய்ச்சல்
வந்து கொண்டே இருக்குதடி !
வேட்டியைத் தாருமென்று
வேண்டியே நிற்குறானே !

வேட்டியைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கின்ற அவள் நீ இந்த வேட்டியில் பாதியாவது கிழித்துக் கொடு என்று மன்றாடுகிறாள். நீ அப்படி எனக்குக் கொடுத்தால் பிற்காலத்தில் உனக்கு 'முந்தானை தருவேன்! என்று கூறுகிறாள். நான் உன்னைத் திருமணம் செய்துகொண்டு மனைவியாவேன் என்ற பொருளில் அவள் கூறியதாகத்தான் கொள்ள வேண்டும். நாட்டுப்புறங்களில், 'ஒருவனுக்கு முந்தானை விரித்தாள்' என்றால் அவனுடன் உறவில் கலந்து விட்டாள் என்றுதான் பொருள்.

எட்டு மொழ வேட்டியைத்தான்
ரெண்டா கிழிப்பாயோ
கிழிச்சதுக்குச் சமமா என்
முந்தாணி தருவேனே !
முந்தாணி தருவேன்னு
சத்தியம் செய்யுறாளே!

ஆனாலும் சின்னண்ணன் தன் பெரிய அண்ணனை நினைத்து அஞ்சுகிறான். வேட்டி இரண்டு துண்டாக்கப்பட்டால், அண்ணன் காரணம் கேட்டு அடிப்பான் என்று அஞ்சுகிறான். எண்ணிக் கலங்குகிறான். கலக்கத்தோடு கூறுகிறான்:

ஆரடி பெண்ணே நீ
அழகுள்ள கருப்பாயி
அண்ணன் இதைக் கண்டான்னா
அடிச்சிப் புடுவானே!

வேட்டி கிழிஞ்சதுக்கு
வெட்டிப் புடுவானே!

அவன் அச்சமில்லாமல் வேட்டியைக் கிழித்துத் தரலாம் என்றும் அண்ணன் கேட்டால் ஏற்ற சமாதானம் சொல்லத் தந்திரம் சொல்லித் தருவதாகவும் கூறுகிறாள் கருத்த பொண்ணு.

அருமை மாமாவே
அழகுள்ள மம்முதனே
மாடு மேய்க்கையிலே
மத்தியான நேரத்திலே
காரைவன முள்ளு சிக்கி
கந்தலாப் போச்சுன்னு
சுரை வனம் காட்டிலே
சுக்குச் சுக்காப் போச்சுன்னு
சொல்லுமடா மாமாவே
சொந்தமுள்ள ராஜாவே!
இது கூடத் தெரியாதா
இப்படியே செல்லிப்புடு

அவள் சொன்னதை வேறு வழியின்றி அப்படியே ஏற்றுக்கொண்டான். கன்னங்கருப்பி சுற்றியிருந்த அவனுடைய வேட்டியில் சரிபாதி கிழித்து எடுத்துக் கொண்டு, மாடுகளை ஓட்டிக் கொண்டு, பட்டிக்குத் திரும்பி வந்தான்.

பொழுதும் இறங்குதடா!
பொன் மேகம் கட்டுதடா!
சின்னண்ண சாமியும்
மாட்டையும் ஓட்டி வந்து
பட்டியிலே அடைச்சானே!
பாதிவேட்டி கட்டிக்கிட்டு
வந்தானே சின்னண்ணன்

வேட்டியை கட்டிக்கிட்டு
வீட்டுக்கு வந்தானே
பாதி வேட்டி காணமுன்னு
பார்த்தானே பெரியண்ணன்

சின்னண்ணன் பயந்தபடியே, பெரியண்ணன் பார்த்து விட்டான். வேட்டி துண்டாகி விட்டது என்று சினம் கொண்டு கேட்கிறான்.

ஆரடா தம்பியே
அருமையுள்ள சின்னண்ணா!
பாதிவேட்டி என்ன ஆச்சி
பஞ்சையா நிக்குறியே!

இதற்கு, பயந்தபடியே பதில் கூறுகிறான் சின்னண்ணன்:

காரை வனங் காட்டிலே
கருத்தாக மாடு மேய்ச்சேன்
காரைமுள்ளு மாட்டியல்லோ
கந்தலாப் போச்சுதண்ணா!
சூரைவனங்காட்டிலே
சுத்திச் சுத்தி மாடு மேய்ச்சேன்
சூரைமுள்ளு மாட்டியல்லோ
சுக்கலாப் போச்சுதண்ணா
கந்தலாப் போனபக்கம்
கத்திரிச்சி வீசிப்புட்டேன்
சுக்கலாப் போனபக்கம்
துண்டிச்சி வீசிப்புட்டேன்
என்று பொய் சொல்லுறானே
ஏமாளி சின்னண்ணன்.

சின்னண்ணன் பேச்சில் தடுமாற்றம், பொய்பேச அவனால் இயலாமை' கண்ட பெரியண்ணன் இவன் ஏதோ தவறு

செய்திருக்கிறான் என்று யூகித்து, அவன் பேச்சை நம்பாமல் தம்பியை ஏசுகிறான்.

பெரியண்ணன் தம்பி பேசும்
பேச்சையும் நம்பவில்லை
பெரியண்ணன் கிட்டே நீ
பித்தலாட்டம் பேசறியே
பொய்பேச லாச்சான்னு
புளியமாறு ஒடிச்சானே
அடியோ அடியின்னு
அடிச்சானே பெரியண்ணன்
அழுவோ அழுவுன்னு
அழுதானே சின்னண்ணன்.

அடிதாங்க முடியாத சின்னண்ணன் வேறெதுவும் செய்ய இயலாமல் அழுது புலம்புகிறான். கந்தலாகப் போன பாதி வேட்டியைக் காட்டு என்று அண்ணன் அடித்ததால் கன்னங் கருத்த பொன்னின் வீட்டுக்கு ஓடுகிறான் சின்னண்ணன். மாலை மயங்கி இருள் சூழத் தொடங்கும் அந்தி நேரம் !

அண்ணன் அடிச்ச அடி
அடி தாங்க முடியாம
அழுது புலம்பிக்கிட்டு
வாரானே சின்னண்ணன்.
கன்னங் கருத்தபொண்ணை
கண்டு சொல்ல ஓடுறானே !
ஓட்டம் பெருநடையா - அவள்
ஊட்டுக்கு ஓடறானே !
கன்னங் கருத்த பொண்ணு
சின்னண்ண சாமியை
கண்ணிலே பார்த்தாலே
கண்டு கலங்கினாளே !

அவன் தன் உடம்பில் பட்ட தழும்புகளோடு தலைவிரிகோலமாக வருவதுகண்ட கருப்பி கலக்கமும் வியப்பும் கொள்கிறாள்.

என்னடா மாமாவே
ஏதனுக்கு வந்ததடா!
ஆபத்து வந்ததுபோல்
அலங்கோலமா வரியே
நடந்ததைச் சொல்லென்று
கேட்டாளே கருத்த பொண்ணு

அதற்கு அவன் பதில் சொல்கிறான். அண்ணன் என்ன சாக்கு சொல்லியும் அடித்துவிட்டான் என்று கூறுகிறான்.

வேட்டியைக் கிழிச்சல்லோ
உங்கிட்டே தந்ததற்கு
அண்ணன் அடிச்சான்னு
அலறிப் புலம்புறானே!
உன்னிடத்தில் சொல்லிவிட
ஓடிவந்தேன் என்கிறானே!

'மீதி பாதி வேட்டியை என் அண்ணனிடம் காட்ட வேண்டும். அதை வாங்கிப் போக வந்தேன்! அதைக் கொடு என்று கேட்டான் சின்னண்ணன்! ஓராண்டு காலம், ஒருவரோடொருவர் பேசாமலே ஆடும், எருமையும் மேய்த்து வந்தார்கள். ஒருவரோ டொருவர் பேசாமலே சந்தித்து வந்தவர்களை காற்றும் மழையும் மனத்தளவிலும் சந்திக்க வைத்தது. காற்றும் மழையும் வீசியபோது, சின்னண்ணன் தன் வேட்டியை அவள் மீது போர்த்தியதை அவள் பெரும்பேறாகக் கருதினாள். அது நாள் வரை அவனிடம் பேசாமல் இருந்தமைக்கு வருத்தப் பட்டாள். சின்னண்ணனிடம் இருந்து கிடைத்த அரை வேட்டியை, அன்பின் அடையாளமாக வைத்துக் கொண்டாள்! பொய் பொய்யாகவே

நிலைபெறட்டும் என்று எண்ணினாள். ஆகவே, வேட்டியைத் திருப்பித்தராமல், "அடி வாங்கியது வாங்கியாகிவிட்டது. வேட்டி என்னிடமே இருக்கட்டும். அதற்குப் பதிலாக நான், தக்க காலத்தில் என் முந்தானையை முன்னால் கூறியபடி தருவேன். இது உறுதி" என்று கூறினாள். அவள் அதை ஏன் பலமுறை கூறுகிறாள். அவனை அவள் திருமணத்தில் அடையவேண்டும் என்ற எண்ணத்தால்தான்! அவள் சொல்கிறாள்:

இருந்தாலும் இருக்கட்டும்
போனாலும் போகட்டும்
ஆனதெல்லாம் ஆச்சு
அடிபட்டுமுடிஞ்சாச்சு
இந்த இருட்டிலே
எங்கேயும் போகாதே!
திண்ணையிலே படுத்திருந்து
காலையிலே எழுந்திருச்சி
பட்டிக்குப் போயிடப்பா
வேட்டிக்குப் பதிலாக
முந்தானை தாரேன்னு
சொன்னது சொன்னதுதான்
என்றாளே கருத்த பொண்ணு.

சின்னண்ணனுக்கும் கருத்த பொண்ணு சொல்வது சரியாகப் பட்டது. அவள் மீது அவனுக்கும் ஒரு ஆவல் பிறந்தது. அவள் கொடுத்த உணவைச் சாப்பிட்டான். திண்ணையிலே படுத்துத் தூங்கினான். காலையில் எழுந்து ஆட்டுப்பட்டிக்குப் போய்விடுகிறான்.

பொழுது விடிஞ்சிருச்சி
பொய்க்கோழி கூவிடிச்சி
சின்னண்ண சாமியுமே
கருப்பி வீட்டுத் திண்ணயிலே

கண்விழிச்சி பார்த்தானே
காலை விடியுமுன்னே
காட்டுக்கு வாரானே!
பட்டிக் குடிசையிலே
படுத்திருந்த மாதிரியே
பட்டியைத் தூக்கி வச்சி
பாலைக் கறந்துகிட்டு
வீட்டுக்கு வாரானே
சின்னண்ண சாமியுமே!

இது இப்படி இருக்க, சில நாட்கள் ஓடிவிட்டன. கன்னங்கருத்த பொண்ணைப் பெண் பார்க்க வேறு அயலூரர்க்காரர்கள் வந்தார்கள்.

ஏழுமலைக்கு அந்தாண்ட
இளம்பருத்திக்காடு விட்டு
மாப்பிள்ளை வீட்டாரும்
மலையும் செடிகடந்து
கருப்பாயி தன்னையே
பெண்பார்க்க வாராங்க!
பெண்ணைத்தான் பார்த்துமல்லோ
பொருத்தமும் பார்த்தாங்க.

கன்னங்கருத்த பொண்ணுக்கு, திடீரென திருமண ஏற்பாடு கூடிவிட்டதால், பெற்றோரை எதிர்த்து நிற்கக் கருப்பியால் முடியவில்லை. இந்த நேரத்தில் ஆறு அண்ணன்மார்களுக்குத் கீழான தம்பி தன்னைத் திருமணம் செய்துகொள்ளப் பெண் கேட்க வருவதாகவும் தோன்றவில்லை. சூழ்நிலை அவளை மௌனியாக இருக்கச் செய்துவிட்டது. இளம்பருத்திக் காட்டு மாப்பிள்ளைக்கும், இவளுக்கும் திருமணம் முடிவு செய்யப்பட்டு விட்டது கருப்பி தன் எண்ணங்களை அப்படியே விழுங்கிக் கொண்டாள்.

கருப்பிக்குக் கல்யாணம்
கல்யாணம் செய்தாங்க
இந்த ஒரு சேதியைத்தான்
கேட்டானே சின்னண்ணன்
நாலு முழ வேட்டிக்கு
முந்தானை தாரேன்னு
கருப்பிதான் சொன்ன சொல்லை
கருத்திலே மூடிவச்சான்!
ஏரிக்கரை மேலே
எருதுகளை மேயவிட்டான்
ஆயங்குழலெடுத்து
ஊதுகிறான் சின்னண்ணன்!

சின்னண்ணன் தன்னை மறந்து குழல் ஊதிக் கொண்டிருந்தபொழுது, தன் கணவன் வீட்டாருடன் இளம்பருத்திக் காட்டிற்குப் போய்க் கொண்டிருந்த கருத்த பொண்ணு அதனைக் கேட்டு மெதுவாக நடக்கிறாள்!

கட்டிக் கொடுத்த பொண்ணு
கன்னங்கருத்த பொண்ணு
கட்டிக் கொடுத்த ஊருக்கு
காத்தாலே போறாளே!
எல்லாரும் முன் செல்ல
இவளுந்தான் போறாளே
ஏரிக்கரை மேலே
ஏறியே போறாளே
கருத்தப் பொண்ணைப் பார்த்துவிட்ட
சின்னண்ண சாமியுந்தான்
ஏரிக்கரை மேலே
உசந்து வளர்ந்திருக்கும்
ஒத்தை மரம் மேலேறி

உட்கார்ந்திருந்தானே!
ஏரிக்கரை வந்ததுமே
கன்னங்கருத்த பொண்ணு
ஒறம்பரையை முன்னவிட்டு
ஒதுங்கியே பின்னடைந்தாள்!
சின்னண்ண சாமியைக்
காணமுன்னு பார்க்கிறானே!
மாடுதான் மேயுதப்பா
மன்னவரைக் காணலையே
இருகரையும் மாறிமாறி
இங்குமங்கும் பாக்குறானே!
சின்னண்ண சாமிதான்
ஒதிமரத்து மேலேருந்து
வெத்தலையைத் தின்னுபுட்டு
தூவென்னு மூஞ்சானே!
தொப்புன்னு கீழிறங்கி
தோசமுள்ள பொண்ணே நீ
அருமையுள்ள பொண்ணே நீ
ஆதியிலே சொன்ன சொல்லு
அழிஞ்சிதான்னு கேட்டானே!

ஆதியிலே சொன்ன சொல்லை மறந்து விட்டாள் இந்தக் கருப்பி என்று எண்ணிய சின்னண்ணன் வெற்றிலையை மென்று அவள் பக்கம் துப்பினான். தன்னைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறிய அவள் ஏமாற்றி விட்டாள். 'எப்படி நீ இன்னொருவனைத் திருமணம் செய்து கொண்டாய்' என்று கேட்கிறான். நீ உன் கணவனோடு மகிழ்ச்சியாக ஊருக்குக் கிளம்பி விட்டாயே என்று கேட்கிறான். அதற்கு அவள் தான் தன் திருமணத்தைத் தடுக்க இயலவில்லை என்றும் தான் அவனை மறக்கவில்லை என்றும், தன் சொல்லைக் காப்பதாகவும் கூறுகிறாள்:

ஆடிப்பண்டிகைக்கு
அழைச்சிக்கிட்டு வருவாங்க
ஆதியிலே சொன்னசொல்லு
அழியாது என்று சொல்லி
ஒறம்பரையும் போகும் திசை
ஓடினாளே கருத்த பொண்ணு

இந்த நேரத்துக்குமேல் அவள் இங்கு நின்று பேசிக் கொண்டிருந்தாளானால், அவள் கணவன் அல்லது உறவினர் தேடிக்கொண்டு வரலாம் அதனால் அவள் சின்னண்ணனுக்குச் சுருக்கமாகப் பதில் சொல்லி விட்டுப் புறப்படுகிறாள். 'ஆதியிலே சொன்ன சொல், முந்தானை தருகிறேன் என்று கூறிய சொல் அழியவில்லை என்று மட்டும் உறுதி கூறுகிறாள் அவளும் அவள் உறவினர்களும் சென்று மறைந்து விட்டார்கள்.

சில மாதங்கள் கடந்தன. ஆடிமாதமும் வந்தது. தலையாடிப் பண்டிகைக்கு, தன் பெற்ற வீட்டுக்கு அழைத்து வரப்பட்டாள் கருப்பாயி. சின்னண்ணன் எல்லாம் மறந்து தானுண்டு, தன் மாடுகளுண்டு, ஊதும் புல்லாங்குழலுண்டு என்று வாழ்ந்து வருகிறான். கருப்பாயியுடன் ஆடிப் பண்டிகைக்கு வந்த அவள் கணவன் அவளை விட்டுவிட்டு! ஊருக்குச் சென்று விட்டான்! ஆடி மாதம் முழுதும் அவள் தந்தை வீட்டிலேதான் இருக்க வேண்டுமாம்.

சின்னண்ணனுக்காகச் சமயம் பார்த்துச் காத்திருந்தாள் கருப்பாயி. தான் ஆதியில் சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிடவேண்டும் என்று எண்ணியிருக்கிறாள் அவன் இரவில் பட்டிக் குடிசையில்தான் படுத்துக் கொள்வது வழக்கம்.

ஆகவே, ஓர் முன் இரவில் பலகாரங்களை ஒரு வட்டியில் எடுத்துக்கொண்டு, சின்னண்ணன் படுத்திருக்கும் பட்டிக் குடிசைக்கு வருகிறாள் கருத்த பொண்ணு.

பட்டிக் குடிசையிலே - சின்னண்ணன்
படுத்துமே இருக்கிறானே!
பலகாரம் எடுத்துகிட்டு - கருப்பாயி
பட்டிக்கு வாராளே!
சின்னண்ணன் பட்டிக்கு - அவள்
தேடியே வாராளே!
குடிசைக்குக் கீழே நின்னு - அவள்
கொஞ்சியே சொல்லுறாளே!
ஆதியிலே சொன்ன சொல்லு - சின்னண்ணா
அழியாதிருக்குதப்பா!
கருப்பண்ண சின்னசாமி - நீயும்
கண்முழிச்சி இறங்குமையா!
பலகாரம் கொண்டுவந்தேன் - சாமி
பட்டியிலே தின்னுமையா!
கொழுக்கட்டை கொண்டுவந்தேன் - சாமி
குடிசையிலே தின்னுமப்பா!
ஆதியிலே சொன்ன சொல்லு - சின்னண்ணா
அழியாதிருக்குதையா!

இவ்வாறு கருப்பாயி குரல் கொடுத்தாள். சின்னண்ணனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அவன் அவள் வந்ததை உணர்ந்தான். ஆதியிலே சொன்ன சொல்லு அவனை அவள் திருமணம் செய்து கொள்வது தான்! மற்றொருவன் மனைவியான பின் அவள் முந்தானையைத் தருவதல்ல. அவன் உள்ளத்தை அவள் விரும்பினான். வெறும் உடலையல்ல ஆகவே அவன் ஏதும் பேசவில்லை

'அவன் தன் மீது கோபமாக இருப்பான் ஊடல் தீர்த்துவிடலாம் என்று எண்ணியே அவள், அவனைத் தட்டி அழைக்கிறாள்! தூங்குகிறானோ' என்ற அய்யம் வந்தது கிள்ளுகிறாள் புரட்டுகிறாள்! எந்தப் பயனும் இல்லை. சின்னண்ணன் உணர்ச்சியற்றவன்போல் கிடந்தான்.

படுத்திருக்கும் சின்னண்ணனை
எழுப்புறா கிள்ளுறாளே!
புரட்டியே பார்க்கிறாளே!
பொத்துபொத்தென்று அடிக்கிறாளே!
எத்தனை செய்த போதும்
ஏனென்று கேட்கவில்லை.
எத்தனை செய்த போதும்
எழுந்திருக்க வில்லையம்மா!
அத்தனைக்கும் சின்னண்ணன்
அசையாம படுத்திருந்தான்!

பொறுமையிழந்த கருத்த பொண்ணு கவலை கொள்கிறாள். தன் வாக்குறுதியை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்று எண்ணுகிறாள். அவளுக்கு ஏனோ அந்த எண்ணம் தவறு என்றே தோன்றவில்லை. சொன்ன சொல்லைக் காப்பதுதான் நாணயம் என்று கருதுகிறாள்.

என்னமோ தெரியவில்லை
எழுப்பியும் எழவில்லை
ஆதியிலே சொன்னசொல்லைக்
காப்பாத்த வழியில்லை
என்று மனம் கலங்கி
சின்னண்ண சாமியை
ஓங்கரிச்சிப் படுக்கவச்சி
ஒட்டிப் படுத்தாளே!
சேர்த்துப் படுத்தாலும்
சின்னண்ணன் அசையவில்லை
கட்டிப்புடிச்சாலும்
கட்டையா கிடக்குறானே!
கண்ணே திறக்கவில்லை

மூச்சும் விடவில்லை
முழுராவும் படுத்திருந்தாள்!

என்ன முயற்சி செய்தும், சின்னண்ணன் எழுந்திருக்கவே இல்லை. இனி என்ன செய்வது? தன் சொல்லைக் காப்பாற்ற முடியவில்லையே! ஆனாலும் பொழுது விடியப்போகிறது.

இனிமேல் இங்கிருந்தால் பொழுது விடிந்துவிடும், பழிச்சொல் வந்துவிடும். புறப்பட்டுப் போய்விட வேண்டியதுதான் என்று முடிவு செய்கிறாள் கருத்த பொண்ணு.

பொழுது விடிகிறது
பொற்கோழி கூவியது
நேரமும் ஆகிறது. இனி
குத்தமும் வாருமென்று
அழுதுபுரண்டுக்கிட்டு
அங்கிருந்த மாட்டுகிட்டே
நான் வந்த செய்தியினை
சாட்சி நீ சொல்ல வேண்டும்
என்று புலம்பினாளே!
ஆயிரம் ஆட்டுக்கு
ஒரு கடா செம்மறியே
பட்டிக்கு நான் வந்தேன்னு
சாட்சியும் நீ சொல்லவேணும்
மூலைப் பனைமரமே
நீயுந்தான் ஒரு சாட்சி
ஆதியிலே சொன்ன சொல்லைக்
காப்பாத்த வந்தேனின்னு
சேதியைச் சொல்லிடுங்க
என்றுமே கருப்பி சொல்லி
அழுதுகிட்டுப் போனாளே!

அவளுக்குச் சாட்சி மாடும் ஆட்டுக் கெடாவும், பனைமரமும்தான்! அவை பேசாதவை என்றாலும், தன் ஆற்றாமைக்குக் கூறிச் செல்கிறாள். ஆயிரம் ஆட்டுக்கு ஒரு கடா அவள்மீது இரக்கம் கொள்ளக்கூடும்.

அவள் போன பின் சின்னண்ணன் கண்விழித்தான். இன்னொருவன் மனைவியாகிவிட்ட கருப்பாயியை அவன் தீண்ட விரும்பவில்லை மனத்தாலும் தீண்டக் கூடாது என்று எண்ணியே அவள் அந்த இடத்தை விட்டுப் போகும்வரை மூச்சை அடக்கிக் கட்டையாகக் கிடந்தான். நடந்தவை அனைத்தும், கனவில் நடந்த காட்சிகளாக அவனுக்குத் தோன்றின.

கருப்பாயி போனபின்னே
சின்னண்ணன் எழுந்திருச்சான்!
பொய்க்கனா கண்டதுபோல்
பொசுக்குன்னு எழுந்தானே!
தூக்கம் தெளிவாச்சி
துக்கம் முடிவாச்சி
மூலைப்படலை நீக்கி
பட்டியை நகர்த்துறானே!

காலையில் பட்டியை இடம் மாற்றி வைக்க வேண்டும்! அதற்காகப் பட்டியின் மூலைப்படலை அவிழ்த்தான்! கன்னங்கருத்த பொண்ணு, எருத்து மாட்டையும், ஆட்டுக் கெடாயையும், ஒண்டிப் பனை மரத்தையும், தான் வந்ததற்குச் சாட்சி வைத்துவிட்டுப் போய்விட்டாளல்லவா? தன்மீது குற்றம் இல்லை என்று கூறுவது அவள் எண்ணம்.

பெண் என்றால் பேய் மட்டுமல்ல முன் சொன்ன மூன்றும் இரக்கப்பட்டிருக்க வேண்டும். எருதுமாடு என்று மில்லாதபடி ஓடிவந்து அவனை முட்டித் தள்ளியது.

கோடிக் கொம்பு எருத்துமாடு
குத்துதடா கொம்பாலே
முட்டித்தள்ளி சின்னண்ணனை
மூனுதரம் புரட்டுதடா!
தூக்கியே போடுதடா
துரத்துதடா சின்னண்ணனை

சின்னவண்ணன் எருத்துமாட்டைத் தந்திரமாகப் பிடித்துக் கட்டி அடிக்கிறான்.

எருத்துமாட்டைக் கட்டிவச்சி
சாத்துராண்டா சின்னண்ணன்

பிறகு ஆட்டுப்பட்டியை எடுத்துவைக்கச் சென்ற சின்னண்ணனை, ஆட்டுக்கடா வந்து முட்டுகிறது.

ஆட்டுப்பட்டி அவிழ்க்கையிலே
ஆட்டுக்கிடாய் ஓடிவந்து
காலுச் சந்தில் தலையைவிட்டு
தூக்கியே போட்டதடா!

சின்னண்ணனுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முன்பு மாடு முட்டியது. இப்பொழுது ஆட்டுக்கடாய் தூக்கிப் போடுகிறது.

இத்தனை காலமில்லே
இதுகாலம் ஆட்டுக்கடா
தூக்கியே போடுதுன்னு
துன்பப்பட்டு நிக்குறானே!
ஆட்டுக்கடாவையுமே
துரத்தியே அடிக்கிறானே!

ஆட்டுக்கடாவை அடித்துவிட்டாலும் அவனுக்கு மனது அமைதி இல்லை. 'ஏதோ குற்றம் நடந்துவிட்டது. கருப்பாயியை அவமானப்படுத்திவிட்டோமென்று இவை முட்டுகின்றனவா?

அவள்மீது அளவு கடந்த ஆசை! உண்டு. அது திருமண ஆசை! உள் மனத்தில் அவனுக்கு அந்த ஆசை போகவில்லை. ஆனால் உலக நடப்பின் பண்பாட்டோடு அவன் ஒட்டிப்போகத்தானே, அவள் எண்ணத்தை நிறைவேற்ற மறுத்தான்! அது குற்றமா? அவனுக்கு மனதில் அமைதி இல்லை. என்றாலும் பசும்பாலைக் கறந்தான்! பால் சொம்பை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்படுகிறான்.

பொழுதும் விடிஞ்சிருச்சி
பொற்கோழி கூவிடுச்சி
மாட்டுப்பாலைக் கறந்துகிட்டு
வீடுநோக்கிப் போறானே!
ஒண்டிப் பனை மரத்து
ஓரமா போறானே!
பனைமரத்துப் பாளையுமே
பாலுமேலே இத்துவிழ
பாலையுமே ஊத்திப்புட்டு
பதறுறானே சின்னண்ணன்.

பால் சிந்திப் போனதால் அவன் அறிவு அழிந்தது. ஓடிப்போய் கோடரியை எடுத்துவந்தான். பனைமரத்தை வெட்டுகிறான்.

கொப்பரையை வீட்டில்வைத்து
கோடரியை எடுத்து வந்து
மரத்தையும் வெட்டுறானே
மனசு கெட்ட சின்னண்ணன்.
ஒண்டிப் பனைமரமும்
மடமடன்னு சாயும்போது
அங்கே ஓடி இங்கே ஓடி
அடிமரத்தில் சிக்கினானே!

ஒண்டிப் பனைமரமும்
அவன் மேலே சாய்ஞ்சிருச்சே!

பனைமரம் சின்னண்ணனை நசுக்கி அழுத்திக் கொண்டது. உயிர் போகுமுன் கருப்பாயியைப் பார்க்க நினைக்கிறான். அவள் மிக்க அன்புள்ளவள் நான்தான் அவளை உதறித் தள்ளிவிட்டேன் என்று கலங்குகிறான்! அவன் முன் செய்தது சரியா தவறா என்று தோன்றவில்லை. அவன் உயிர் பிரிந்தது.

செத்து மடிஞ்சானே
சின்னண்ண சாமியுமே!
சின்னண்ண சாமியுமே
சிவலோகம் சேர்ந்தானே!
மாண்டு மடிஞ்சானே
வைகுந்தம் சேர்ந்தானே!

தம்பி இறந்த செய்தியை அறிந்து பெரியண்ணன் ஓடிவருகிறான் மரத்தடியில் சிக்கிக்கிடந்த தம்பியை எடுக்கிறான். ஊரார் எல்லாம் கூடிவிடுகிறார்கள்.

வீட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்ட சின்னண்ணன் உடல், சடங்குகளுக்குப் பின் சுடுகாட்டுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. வீங்கிய கண்களோடு தன் தம்பியின் உடல் மீது கட்டைகளை அடுக்கினான் பெரியண்ணன் விறகுக்கு எண்ணெய் ஊற்றப்பட்டது. தீயை மூட்டினான் பெரியண்ணன்.

அண்ணன் வச்சி தீ
ஒண்ணும் புடிக்கலையே!
எண்ணெயை ஊத்தினாலும்
ஏதும் புடிக்கலையே!
நெருப்புப் புடிக்கலையே
யாரு தீ வச்சாலும்!
ஊராரு எல்லாம்

ஒண்ணா தீ வச்சாலும்
ஏனென்று கேட்கலியே
தண்ணிலே தீ வச்சபடி
சட்டுன்னு அணைஞ்சிடுதே!
சின்னண்ண சாமிக்கு
தீயும் புடிக்கலியே!

சின்னண்ணன்மீது மரம் விழுந்து இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்ட கன்னங்கருத்த பொண்ணு ஓடோடி வந்தாள்! அவள் வரும் முன்பாகவே, சிதையில் தீயும் பற்றவில்லை என்ற அதிசய செய்தியும் ஊர்முழுதும் பரவி விட்டது.

தான் இரவு வைத்த சாட்சிதான் அவனைக் கொன்று விட்டதோ என்று அழுது புரண்டாள்! ஓடோடி வந்தாள் சுடுகாட்டுக்கு. தீ பற்றாமையால் திகைத்து நின்ற மக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டே உளளே வந்தாள்! சின்னண்ண சாமியின் எட்டுமுழ வேட்டியில் கிழித்தெடுத்து தனக்கு அவன் கொடுத்த நாலு முழ வேட்டியைத் தன்னுடன் கொண்டுவந்திருந்தாள்! அதனை அவள் தன் உடலில் சுற்றிக்கொண்டாள்!

பெரியண்ணன் கையில் இருந்த தீயை வாங்கினாள். தன்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த சின்னண்ணனைத் திருமணம் செய்துகொண்டு சொல்லைக் காப்பாற்றியிருக்க வேண்டும் அப்படிக் காப்பாற்றாமல் போனதற்கு மன்னிக்கும்படி அவனிடம் மானசீகமாக வேண்டினாள்! தானும் அவன் மீது கொண்டிருந்த அன்பை எண்ணினாள்! தீயை எடுத்துக்கொண்டு சிதையை மூன்று முறை சுற்றி வந்தாள்! சிதையில் தீ வைத்தாள்.

அழுதுபுரண்டல்லோ
தீயையும் மூட்டினாளே
'திக்' கென்று புடிச்ச தீ

திகுதிகுன்னு எரியுதப்பா!
குப்புன்னு தீப்புடிச்சி
கொழுந்து விட்டு எரியுதப்பா

அவள் சிதைக்குத் தீ வைத்தவுடனே 'குப்' என்று தீப்பிடித்து எரிந்ததைத் கண்ட கருத்த பொண்ணு தனக்காகத்தான் சின்னண்ணன் காத்திருந்தான் என்று கருதினாள். ஒரு கணம் யோசித்தாள்! அவளுக்கு உணர்ச்சிதான் ஓங்கி இருந்தது. உடனே தீயில் குதித்துவிட்டாள்.

கொழுந்துவிட்ட தீக்குள்ளே
குதித்துப் புரண்டாளே!
திப்புண்ணு உழுந்த பொண்ணை
தீப்புடிச்சி எரியுதடா!
சின்னண்ணன் வாழ்க்கையிலே
சேர்ந்திருக்க வேணுமின்னு
ஆதியிலே சொன்னசொல்லு
அழியாமே இருக்குதுன்னு
தீயிலே கருத்தபுள்ளே
விழுந்து உயிர்விட்டாளே!
ரெண்டோடம்பும் ஒண்ணாகி
நீறாகிப் போனாங்க.
ஆதியிலே சொன்னசொல்லு
அழியாமே நின்னுதப்பா!

இந்தக் கதையிலே 'சொல்தவறாமை' என்ற நீதியை எடுத்துக்கொண்டால் உயர்வுதான் சிறக்கிறது. கருத்தபொண்ணு நடவடிக்கைகள் எல்லாம், சரியா தவறா என்று ஆய்வு செய்வதைவிட கிராமப்புறக் காதலின் யதார்த்தங்கள் இருப்பதை இங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

'கருத்தபொண்ணு வந்து தீ வைத்தபின் தான் தீ பிடித்தது' என்பது மிகைக் கற்பனைதான்! நாட்டுப்புறக் கதைகளில் இப்படிப்பட்ட கற்பனைகள் ஏராளம் உண்டு. அதில் இருக்கின்ற மையக்கருத்து 'அவன் ஆழ உள்ளத்தில் இருந்த காதல்மனம் வேக மறுத்துவிட்டது' என்பதுதான்!

கருப்பி சின்னண்ணனைத் திருமணம் செய்து கொள்ளாமைக்குக் காரணம் சாதியாக இருக்கலாம். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வாக இருக்கலாம். பெண்கள் 'நான் இவனைத்தான் கட்டிக் கொள்வேன்' என்று கூறுவது பெண்ணுக்கு நாணமற்ற செயலாகக் கருதப்படலாம்.

இத்தகைய காரணங்களால் அவள் தான் விரும்பியவனைத் திருமணம் செய்துகொள்ள இயலாதுபோயினும் சாவு அவர்களை இணைத்தது. அதனைத் தடுக்க முடியாது என்பதனை இக்கதை கூறுகிறது. ஆர்வம் உள்ளவர்கள் மேலும் ஆய்ந்து அறிக.

4. வள்ளிக் கிழவன் - மாதவிக் கூத்து

இப்பகுதியில் இரண்டு கதைப்பாடல்கள் இடம் பெறுகின்றன. ஒன்று முருகன் வள்ளி கதை. மற்றொன்று கோவலன் கதை. முதலில் முருகன் வள்ளி கதையைப் பார்க்கலாம்.

வேடர்கள் ஐந்து பேர் உடன்பிறந்தவர்கள். அவர்களில் யாருக்கும் குழந்தைச் செல்வம் இல்லை. அவர்களுக்கு 'வள்ளி' மகளாகக் கிடைக்கிறாள். இதனை உடுக்கடிப்பாட்டு வழி கேளுங்கள்:

ஐந்து பேரு வேடருக்கு வள்ளி - நீ
அழகான பொண் பிறந்தே மாதே!
ஐந்து பேரு வேடருந்தான் வள்ளி - உன்னை
தினைப்புனந்தான் காக்கவைத்தார் மாதே

காடு வெட்டி முள்பரப்பி வள்ளி - அங்கு
கம்பு சோளம் தினை விதைத்தார் மாதே!
காட்டெருமை ஏரோட்ட வள்ளி - அங்கு
கள்ளெரெல்லாம் கல்பொறுக்க மாதே!

மோடு வெட்டி முள்பரப்பி வள்ளி - அங்கு
முத்து சோளம் தினை விதைச்சார் மாதே !
மோட்டானை ஏரோட்ட வள்ளி - அங்கு
முரடரெல்லாம் கல்பொறுக்க மாதே!

காடுவெட்டி நிலந் திருத்தி முள்வேலி போட்டு, அந்த வேடர்கள் காட்டெருமையும் யானையும் கொண்டு ஏர் உழுதார்கள். கள்வர்களும் முரடர்களும், உழுத நிலத்தில் எழுந்த கற்களைப் பொறுக்கினார்கள்! பின்னர் நிலத்தில் போட்ட விதைகள் முளைத்தன.

ஒன்னாம்தான் மாசத்திலே வள்ளி - அங்கு
ஒரு இலையாம் தினம்பயிராம் மாதே
ஓரெலைக்கும் காப்பு கட்டி வள்ளி - அங்கு
ஒரு பானை பொங்கல் வைத்தார் மாதே!
ஒருதலை நாகம் வந்து வள்ளி - அங்கு
உருவுதாமே தினம் (தினை) பயிரை மாதே!

ரெண்டாம்தான் மாதத்திலே வள்ளி - அங்கு
ரெண்டெலையாம் தினம்பயிராம் மாதே
ரெண்டெலைக்கும் காப்பு கட்டி வள்ளி - அங்கு
ரெண்டு பானை பொங்கல் வைத்தார் மாதே!
ரெண்டுதலை நாகம் வந்து வள்ளி - அங்கு
ராவுதாமே தினம்பயிரை மாதே!

மூணு தலை நாகம் வந்து, நான்கு தலை நாகம் வந்து - இப்படியே தொடர்கிறது. பத்தாம்தான் மாதம் வரை போவதும் உண்டு. அது பயிரைப் பொருத்தது. ஆனால் இங்கு பயிர் ஒரு இலை விட்டதும் பொங்கலிட்டு காப்புக்கட்டி (கண்ணேறு கழித்து) சிறு தெய்வங்களை வணங்கிப் பாடும் வழக்கம் இன்றும் உண்டல்லவா? இனி பயிரைப் பாதுகாப்பு செய்கிறார்கள்.

பாலைமலை மூங்கில் வெட்டி வள்ளி - அங்கு
பக்கமெல்லாம் பரணுபோட்டார் மாதே!
கொல்லிமலை மூங்கில் வெட்டி வள்ளி - அங்கு
குறுக்கெல்லாம் வேலி போட்டார் மாதே!
தட்டி வரிஞ்சுகட்டி வள்ளி - அங்கு
தழையெல்லாம் வெட்டி வைத்தார் மாதே!

பறவைகள் பயிரில் வந்துவிடுகின்றன. இனி வள்ளி பரண் மீது ஏறிப் பறவை விரட்ட வேண்டும். பறவையை விரட்டக் கவண் வேண்டுமல்லவா? வெள்ளியால் செய்த கவண், வெங்கலத்தில் செய்த குண்டுகள் அவளிடம் கொடுக்கப்பட்டன.

வெள்ளிக் கவண் எடுத்தா வள்ளி - அங்கு
வெண்கலத்தால் குண்டு செய்தார் மாதே!
ஏலேலோ என்று சொல்லி வள்ளி - அவள்
ஏறுனாளாம் பரணுமேலே மாதே!
ஆலோலம் என்று சொல்லி வள்ளி - அவள
அன்னக்கிளி ஓட்றாளாம் மாதே
பத்தாம்தான் மாதத்திலே வள்ளி - அவள்
பரணை விட்டுக் கீழே வந்தா மாதே!

தினைப்புனம் காவல் காக்கும் அதே நேரத்தில், தினைக் கதிர்களைக் கொய்து காலால் மிதித்துத் தினை யைப் பிரித்தெடுக்கும் வேலையும் செய்கிறாள். அதுமட்டுமல்ல. கல்லுரலில் தினையை இட்டு, கடம்பை உலக்கையால் குற்றி அரிசியையும் எடுக்கிறாள். தேக்கு இலையை முறமாகக் கொண்டு புடைக்கிறாள். மாவாக்குகிறாள். மலைத்தேனையும் அழிக்கிறாள். தேனையும் தினைமாவையும் கலந்து பக்குவம் செய்கிறாள். அதனை அவள் மட்டுமே சாப்பிட்டு விடவில்லை. தன் அண்ணனுக்கும் எடுத்துவைக்கிறாள். நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை இதில் அப்படியே பிரதிபலிக்கிறது.

கைத்தினையா கருதுகிள்ளி வள்ளி - அவள்
காலால் தினைமிதிச்சா மாதே
கல்லால் உரலெடுத்து வள்ளி - அவள்
கடம்பகுச்சால் குத்துறாளே மாதே
தேக்கு எலை முறமாக்கி வள்ளி - அவள்
சேத்துறாளாம் தெனைமாவைத்தான் மாதே!

பாலைமலைத் தேனழிச்சி வள்ளி - அவள்
பக்குவமா மாவு பேஞ்சா மாதே!
கொல்லிமலைத் தேனழிச்சி வள்ளி - அவள்
குழையாமத்தான் மாவுபேஞ்சா மாதே!

அண்ணனுக்கு வேணுமின்னு வள்ளி - அவள்
தலைமாவைத்தான் எடுத்துவச்சா மாதே!

இந்த நேரத்தில்தான் முருகனாகிய கிழவன் வருகிறான். முருகன் வேங்கை மரமாகவோ, வேடனாகவோ வந்த செய்தி இவர்கள் பாட்டில் இல்லை. நினைவுக்கேற்ப அவர்கள் சுவைக்கேற்ப சொந்தக் கற்பனைகளைக் கலந்து பாடுகிறார்கள்.

வந்த கிழவன் தனக்குப் பசியாக இருப்பதாகக் கூறுகிறான். அந்தப் பண்டாரக் கிழவன் பசிக்காக, தனக்கு வைத்திருந்த தினைமாவில் பாதியை அவனுக்கு அளிக்கிறாள். சாப்பிட்ட கிழவன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு மேலும் பசி குறையாமல் இருப்பதாகக் கூறுகிறான். அவள் தனக்கு வைத்திருந்த தலைமாவில் மீதியையும் கொடுத்து விடுகிறாள். மீதியைக் கேளுங்கள்:

பண்டாரக் கிழவனுக்கு வள்ளி - மீதி
பாதி மாவை எடுத்துத் தந்தா மாதே!

அந்த மாவைத் தின்றுவிட்ட கிழவனுக்கு மேலும் பசி தீரவில்லையாம். வள்ளியும் கிழவனும் உரையாடுகிறார்கள்! கேளுங்கள்:

கிழவன் : தின்ன மாவு தித்திக்குதே வள்ளி - அடி
இன்னும் மாவு தாருமடி புள்ளே!

வள்ளி : பிச்சைக்கு நீ வந்தவனா கிழவா - அட
பிள்ளைன்னு சொல்லுறியே பண்டாரம்
கஞ்சி கேட்டு வந்தவனா கிழவா - நீ
கண்ணைக்காட்டி நிக்குறியே பண்டாரம்.
சோத்துக்கு நீ வந்தவனா கிழவா - நீ
சொந்தம் ஆகப் பாக்குறியே பண்டாரம்

என்றெல்லாம் கூறியபோதும், கிழவனுக்கு மேலும் திணைமாவு கொடுத்தாள்:

தனக்கு வைத்த மாவினையே வள்ளி - அந்தத்
தலைப்புமாவைத் தந்துவிட்டாள் மாதே!

இத்தனை மாவையும் வாங்கிச் சாப்பிட்ட கிழவன் இப்பொழுது தண்ணீர் கேட்கிறான்:

கிழவன் : தின்னமாவு தித்திக்குதே வள்ளி - இனி
தண்ணீ கொஞ்சம் தாருமடி மாதே!

வள்ளி: பிச்சைக்கு நீ வரவும் இல்லை கிழவா - நீ
புருசனாகப் பாக்குறியே பண்டாரம்
ஏரியிலே தண்ணிபிருக்கு கிழவா - நீ
எடுத்தெடுத்து குடிச்சிக்கடா பண்டாரம்

கிழவன் தனக்கு ஏரித் தண்ணி தேவையில்லை என்றும், வள்ளிதான் தண்ணீர் தரவேண்டும் என்றும் கேட்கிறான்:

கிழவன் : ஏரியிலே இருக்கும் தண்ணி வள்ளி - அது
எருமை மாடு குடிச்ச தண்ணி மாதே!

வள்ளி : ஆத்திலே தண்ணி இருக்கும் கிழவா - அங்கே
அள்ளிக் குடிச்சிக்கடா பண்டாரம்.

கிழவன் : ஆத்திலே இருக்கும் தண்ணி வள்ளி - அது
ஆமை குடிச்ச தண்ணி மாதே!

வள்ளி: பாழியிலே தண்ணி இருக்கும் கிழவா - அங்கே
பார்த்துக் குடிச்சுக்கடா பண்டாரம்.

கிழவன்: பாழியிலே இருக்கும் தண்ணி வள்ளி - அது
பாம்பு குடிச்ச தண்ணி மாதே!
நீ குடிக்கும் சொனைத் தண்ணி வள்ளி - அடி
எனக்குக் கொஞ்சம் தாருமடி மாதே!

எனக்கு எருமைமாடு குடிச்சதும், ஆமை குடிச்சதும், பாம்பு குடிச்சதுமான தண்ணீரெல்லாம் வேண்டாம். நீ குடிப்பதற்காக வைத்திருக்கும் சுனைநீர் கொடு என்று கேட்கிறான் கிழவன். வேறு வழிகாணாத வள்ளி, கையை ஒட்டச்சொல்லி கும்பத்திலிருந்து தண்ணீர் ஊற்றுகிறாள். தண்ணீர் குடிப்பது போலப் பாவனை செய்யும் கிழவன், அவளைக் கட்டிப் பிடித்து விடுகிறான்! அவன் கட்டிப் பிடித்ததோடு இந்த நாட்டுப்புறக்கதை முடிகிறது. மேலும் கதை உண்டு கூறுங்கள் என்று அந்தக் கத்திரிமலை வாழ் மக்களிடம் கேட்டுப் பார்த்தோம். அதற்கு மேல் இருப்பதாக அவர்களுக்குத் தெரியவில்லை. வேறு வழியின்றி நாங்களும் கதையை முடித்துக் கொண்டோம். மற்றொரு கதை அதுவும் காப்பிய வடிவில் உள்ள கதையின் நாட்டுப்புறச் சிதைவுதான்! அதனை இதன் பின் அளிக்கின்றேன்.

சேர இளவரசன், செம்மைக் கவிஞன் இளங்கோ தந்த சிலப்பதிகாரத்தின் கதைப்பகுதியின் ஒரு பகுதி இம்மக்களால், கும்மிப் பாடலாகப் பாடப்படுகிறது. அதுவும் இடத்திற்கும் பண்பாட்டிற்கும், வாழ்க்கை நிலைக்கும் ஏற்ப அமைந்துள்ளது. இதைப் போன்ற கதைப்பாடல்களைக் கேட்கும்போது, இதைப்போன்ற நாட்டுப்பாடல் கதைகளை ஆதாரமாகக் கொண்டு இளங்கோ சிலம்பு யாத்தாரா, அல்லது அவரது சிலம்பை ஆதாரமாகக் கொண்டு, நாடுமுழுதும் நடிக்கப்பட்ட நாடகங்களின் சிதைவுகள் நாட்டுப்புறப் பாடலாயிற்றா என்பது ஆராயவேண்டிய ஒன்று. இதனை ஆய்வாளர்கள் சிந்திப்பார்களாக.

இப்பாடல், உடுக்கடிப்பாடலாகவும் கூட பாடப்படுகிறது. உடுக்கடியில் பாடும்போது 'ஏலேலக் கும்மி ஏலேலா' என்ற சந்தத் தொடர் ஒட்டு வருவதில்லை. கும்மியடித்துப் பாடும் போது அவை தொடர்ந்து வருகின்றன.

பட்டிணமாம் பட்டிணமாம் ஏலேலக்கும்மி ஏலேலா
காவிரிப்பூம் பட்டிணமாம் ஏலேலக்கும்மி ஏலேலா
பட்டிணத்து வீதியிலே ஏலேலக்கும்மி ஏலேலா
வாலைப்பொண்ணு ஆடுறாளாம் ஏலேலக்கும்மி ஏலேலா
ஆட்டம் என்றால் நல்ல ஆட்டம் ஏலேலக்கும்மி ஏலேலா
பாட்டு எல்லாம் நல்ல பாட்டு ஏலேலக்கும்மி ஏலேலா.

கோவலன் கண்ணகிக்கு இன்றுதான் திருமணம் முடிந்தது. கோவலனின் நண்பர்கள் பக்கத்தூரில் ஒரு வாலைப்பெண் ஆடுவதைப் பார்த்து வந்து கோவலனிடம் கூறுகிறார்கள் கோவலன் தானும் அங்கு சென்று வாலைப்பெண் கூத்தைப் பார்த்துவர தன் தாயிடம் அனுமதி வேண்டுகிறான்.

போயிவாரேன் என்றன் தாயே
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆட்டம் பார்க்கப் போயி வாரேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
பாட்டு கேட்கப் போயிவாரேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
அங்கடிக்கும் மத்தளமும்
ஏலேலக்கும்மி ஏலேலா
இங்கிருக்க முடியவில்லை
எலேலக்கும்மி ஏலேலா
சென்னூருத்தான் செட்டிமவ
ஏலேலக்கும்மி ஏலேலா
எட்டி எட்டி ஆடுறாளே
ஏலேலக்கும்மி ஏலேலா

திருமணம் ஆன அதே நாளில் 'செட்டிமவ' ஆடும் ஆட்டம் பார்க்கக் கோவலன் போய்வர வேண்டும் என்று தாயிடம்

கேட்கிறான். கோவலனின் வேண்டுகோளை அந்தத் தாய் ஒப்பவில்லை. திருமணம் ஆன சுவடுகள் மறையக்கூட இல்லை. அதற்குள் நீ கூத்து பார்க்கச் செல்லக்கூடாது என்று தாய் கூறுகிறாள்.

கச்சாயந்தான் சுட்டசட்டி
ஏலேலக்கும்மி ஏலேலா
கண்ட மணம் போகவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
பணியேரந்தான் சுட்டசட்டி
ஏலேலக்கும்மி ஏலேலா
பாதினேம் போகவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
பந்தலுந்தான் பிரிக்கவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
வந்த சனம் போகவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
ஊத வந்த நாதசுரம்
ஏலேலக்கும்மி ஏலேலா
ஊட்டவிட்டுப் போகவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
கொட்டவந்த மேளதாளம்
ஏலேலக்கும்மி ஏலேலா
கோட்டை விட்டுப் போகவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆட்டம் பார்க்க வேணுமின்னா
ஏலேலக்கும்மி ஏலேலா
நம்ம அரண்மனையில் ஆட்டிவைப்பேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
அங்கேயேதான் ஆடுமாட்டம்
ஏலேலக்கும்மி ஏலேலா

மாறாட்டமா தோணுதடா
ஏலேலக்கும்மி ஏலேலா.
மங்கையும்தான் ஆடும் ஆட்டம்
ஏலேலக்கும்மி ஏலேலா.
மாறாட்டமா தோணுதடா
ஏலேலக்கும்மி ஏலேலா.
வந்துபார்க்க வேணுமின்னா
ஏலேலக்கும்மி ஏலேலா.
மாளிகையில் ஆட்டிவைப்பேன்
ஏலேலக்கும்மி ஏலேலா.
குந்திப் பார்க்க வேணுமின்னா
ஏலேலக்கும்மி ஏலேலா.
நம்ம கோட்டையிலே ஆட்டிவைப்பேன்
ஏலேலக்கும்மி ஏலேலா.

தாயார் கோவலன் கூத்துப் பார்க்க அயலூர்க்கு செல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக கெஞ்சியும் கூட சொல்கிறாள்:

வேண்டாமடா என் மகனே
ஏலேலக்கும்மி ஏலேலா.
வார்த்தை சொன்னா கேளுமடா
ஏலேலக்கும்மி ஏலேலா.
மாறாட்டமா இல்லாமலே
ஏலேலக்கும்மி ஏலேலா.
மரப்பதுமை ஆட்டி வைப்பேன்
ஏலேலக்கும்மி ஏலேலா.

தாயார் எவ்வளவோ தடை செய்து கூறுகிறாள். திருமணம் ஆன அன்றே வேற்றூர் போவது முறையல்ல. தீங்கு நேர்ந்துவிடும், என்று எண்ணுகிறது அத் தாய் உள்ளம் ஆனால்

கோவலன் பிடிவாதமாக, ஆட்டம் பார்க்கப் போயாக வேண்டும் என்று கூறுகிறான்.

என்ன என்ன சொன்னபோதும்
ஏலேலக்கும்மி ஏலேலா
போயி வாரேன் என் தாயாரே
ஏலேலக்கும்மி ஏலேலா
செரிசோட்டு செல்வ மக்க
ஏலேலக்கும்மி ஏலேலா
சொல்லும்படி சொல்லுறாங்க
ஏலேலக்கும்பி ஏலேலா

செரி சோட்டு மக்கள் - அதாவது தன் வயதை உடைய செல்வக் குடும்பத்துப் பிள்ளைகள் அழைக் கிறார்கள். எப்படிப் போகாமல் இருப்பது என்கிறான் கோவலன். தாய்க்கு, கோவலனுக்கு விடை கொடுப்பது தவிர வேறு வழி இருக்கவில்லை.

என்ன என்ன சொன்ன போதும்
ஏலேலக்கும்மி ஏலேலா
ஏறலியே என் மகனே
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆனையில்தான் குந்திக் கொண்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆட்டம் பார்க்கப் போயி வாடா
ஏலேலக்கும்மி ஏலேலா
குதிரையில்தான் குந்திக் கொண்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
கூத்துப் பார்க்க போயிவாடா
ஏலேலக்கும்மி ஏலேலா.

தாய் விடை கொடுத்து விட்டதனால் கோவலன் குதிரை மேலேயும் ஆனை மேலேயும் குந்திக் கொண்டு புறப்படுகிறான்.

குதிரை மேலே குந்திக்கொண்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
கூத்துப் பார்க்க புறப்பட்டானே
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆனை மேலே குந்திக் கொண்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆட்டம் பார்க்கப் போறானையா
ஏலேலக்கும்மி ஏலேலா
குருசி மேலே உட்காந்தல்லோ
ஏலேலக்கும்மி ஏலேலா
கூத்துப் பாாத்தான் கோவலனும்
ஏலேலக்கும்மி ஏலேலா.

கோவலன் செல்வன் மகன் ஆனதால் குருசிமேல் உட்கார்ந்து கொண்டு ஆட்டம் பார்க்கிறான். மாதவி ஆட்டம் தொடங்குகிறாள்.

ஐம்பதடி கம்பம் நட்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
எழுபதடி கம்பம் நட்டு
ஏலேலக்கும்மி ஏலேலா
ஏறுனாளாம் கம்பம் மேலே
ஏலேலக்கும்மி ஏலேலா.

கம்பத்தின் மீது பலவிதமான ஆட்டங்களைக் காட்டுகிறாள் அந்த மாதுப் பெண்ணாள். அந்த மாதுப் பெண் ஆகிய செட்டிமவ எழுபது அடி கம்பத்தின் மேலிருந்து, ஒரு மாலையை கையில் வைத்துக்கொண்டு பேசுகிறாள். "இந்த மாலையை நான் கழற்றி வீசுவேன். இது யார் கழுத்தில்

விழுகிறதோ அவர் எனக்குக் கணவனாக வேண்டும்" என்று கூறுகிறாள்.

பூமாலைதான் கையிலெடுத்தாள்
ஏலேலக்கும்மி ஏலேலா
பொய்க் கம்பத்தில் நிற்குறாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
மாலையைத்தான் வீசுறாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
பெரியவங்க கேளுங்கய்யா
ஏலேலக்கும்மி ஏலேலா
சிறியவங்க கேளுங்கய்யா
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆம்பளைங்க கேளுங்கய்யா
ஏலேலக்கும்மி ஏலேலா.
பொம்பளைங்க கேளுங்கம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா
மாலை யார்க்கு விழுந்தாலுமே
ஏலேலக்கும்மி ஏலேலா.
மாலைக்காரன் என் கணவன்
ஏலேலக்கும்மி ஏலேலா.
பூவு நல்லா விழுந்தாலுமே
ஏலேலக்கும்மி ஏலேலா
பூவுக்காரன் என் கணவன்
ஏலேலக்கும்மி ஏலேலா.

இப்படி எல்லா திசையிலும் பார்த்துக் கூறிய மாதுப்பொண்ணு நான்கு புறமும் மாலையை வீசிக்கொண்டே, மாலைக்கு அறிவுரை சொல்கிறாள். அவள் வீசியும் கையைவிட்டுப் பூமாலை போகவில்லை. இதோ கூறுகிறாள்.

பூமாலையே பூமாலையே
ஏலேலக்கும்மி ஏலேலா
பொந்தியிலே வச்சுக் கொள்ளு
ஏலேலக்கும்மி ஏலேலா
தெற்கு நல்லா ஒசந்துடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா.
தென்கடலைத் தாண்டாதே
ஏலேலக்கும்மி ஏலேலா.
வடக்கே நல்லா ஒசந்துடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா.
வடகடலைத் தாண்டிடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா
கிழக்கே நல்லா ஒசந்துடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா
கிழக் கடலைத் தாண்டிடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா
மேற்கே நல்லா ஒசந்துடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா
மேற்கடலைத் தாண்டிடாதே
ஏலேலக்கும்மி ஏலேலா

இப்படி எல்லாம் அறிவுரை கூறி வீசுகிறாள் மாதுப்பொண்ணு. அது பூமாலைதான். அதனைப் பொன்மாலை என்கிறாள். பொதுக்கூட்டங்களில் துண்டு போர்த்தும் போதுகூட பொன்னாடை போர்த்துதலாகக் கூறுகிறார்கள். அதனைப் போலவே:

பொன்மாலையை வீசினாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
போகுதம்மா சுத்தி சுத்தி
ஏலேலக்கும்மி ஏலேலா

கோவலனைக் கண்டதுவே
ஏலேலக்கும்மி ஏலேலா
கழுத்திலேயும் விழுந்ததுவே
ஏலேலக்கும்மி ஏலேலா.

கோவலன் தன் கழுத்தில் மாலை விழுந்தவுடன் திகைப்புற்றான். கம்பத்தின் மேல் இருக்கின்ற மாதுப் பொண்ணாள் இறங்கி வந்து கோவலன் கையைப் பிடித்துக் கொண்டாள். அவள் வேண்டுகிறாள்:

வீசிவிட்ட பூமாலைதான்
ஏலேலக்கும்மி ஏலேலா
விழுந்ததம்மா கழுத்தினிலே
ஏலேலக்கும்மி ஏலேலா
எங்கணவா எங்கணவா
ஏலேலக்கும்மி ஏலேலா
எழுந்துவாரும் எம்பொறனே
ஏலேலக்கும்மி ஏலேலா

அவள் தன் கையைப் பிடித்து இழுத்ததும் கோவலனுக்குச் சினம் உண்டாகிறது. அவன் சீறுகிறான்:

யாரடியே தேவடியா
ஏலேலக்கும்மி ஏலேலா.
என்னை வந்து கூப்பிடுறே
ஏலேலக்கும்மி ஏலேலா
நானும் வர மாட்டேனடி
ஏலேலக்கும்மி ஏலேலா
இங்கிருந்து போயிடடி
ஏலேலக்கும்மி ஏலேலா

"நான் போய்விடுகிறேன். எனது மாலையைக் கழற்றிக் கொடுங்கள்" என்று கேட்கிறாள். ஆனால் நடந்தது என்ன?

கழுத்திலுள்ள மாலையது
ஏலேலக்கும்மி ஏலேலா
என்னுடைய பொன்னுமாலை
ஏலேலக்கும்மி ஏலேலா
மாலையைத்தான் கொடுத்தீங்கன்னா
ஏலேலக்கும்மி ஏலேலா
மாதுபொண்ணு போயிடுவேன்
ஏலேலக்கும்மி ஏலேலா.

இவ்வாறு அவள் சொன்னவுடன் மாலையைக் கழற்ற முயல்கிறான். மாலை கழுத்தோடு ஒட்டிக்கொண்டு விட்டது. எடுக்கவோ நகர்த்தவோ கூட முடியவில்லை.

மாலையைத்தான் கழற்றுகிறான்
ஏலேலக்கும்மி ஏலேலா
கழுத்தோடத்தான் ஒட்டிடுதே
ஏலேலக்கும்மி ஏலேலா

இது கண்ட கோவலன் தன் தோழன்மார்களிடம் அரிவாளைக் கொண்டுவந்து மாலையை அறுத்தெறிங்கள், என்கிறான்.

அறுவாளைத்தான் கொண்டுவாங்க
ஏலேலக்கும்மி ஏலேலா.
அறுத்தெறிங்க பூமாலையை
ஏலேலக்கும்மி ஏலேலா.

அறுவாளில் மட்டுமல்ல, கொடுவாளிலும் இரம்பத்திலும் கூட அறுத்துப் பார்த்துவிட்டார்கள். நடந்ததென்ன?

அறுவாளுந்தான் பல்லுபோச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
அறுக்கவில்லை பூமாலையை

ஏலேலக்கும்மி ஏலேலா
ரம்பத்தைத்தான் எடுத்தாங்கையா
ஏலேலக்கும்மி ஏலேலா
ராவிடுங்க பூமாலையை
ஏலேலக்கும்மி ஏலேலா
ரம்பமும்தான் பல்லுபோச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
ராவவில்லை பூமாலையை
ஏலேலக்கும்மி ஏலேலா
கொடுவாளைத்தான் எடுத்துமல்லோ
ஏலேலக்கும்மி ஏலேலா
கொத்தினாங்க பூமாலையை
ஏலேலக்கும்மி ஏலேலா
கொடுவாளுந்தான் உடைஞ்சி போச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
கொத்தவில்லை பூமாலையை
ஏலேலக்கும்மி ஏலேலா.

இனி கோவலன் கலக்கமடைகின்றான். தன்னுடன் வந்த நண்பர்களிடம் கேட்கிறான் என்ன செய்வதென்று. தாய்சொல்லைத் தட்டியதற்காக வருத்தமடைகிறான்.

என்ன செய்வோம் அண்ணன்மாரே
ஏலேலக்கும்மி ஏலேலா
இடைஞ்சலுமே வந்ததையா
ஏலேலக்கும்மி ஏலேலா
தாயி வார்த்தை தட்டி வந்தேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
தப்பு வந்து சேர்ந்ததையா
ஏலேலக்கும்மி ஏலேலா
கூட வந்த அண்ணன்மாரே

ஏலேலக்கும்மி ஏலேலா
வீடுபோயி சேருங்கப்பா
ஏலேலக்கும்மி ஏலேலா
அம்மா சொல்லைக் கேட்கவில்லை
ஏலேலக்கும்மி ஏலேலா
அடிமையாக ஆயிட்டேனே
ஏலேலக்கும்மி ஏலேலா
மாதுக்கு நான் அடிமையா
ஏலேலக்கும்மி ஏலேலா
போயிவாரேன் அண்ணன்மாரே
ஏலேலக்கும்மி ஏலேலா.

கோவலன் மாதுப்பொண்ணோடு சென்றுவிட்டான். இங்கு புது மணப்பெண் கண்ணகி கெட்ட கனா கண்டு எழுந்திருந்து தன் மாமியிடம் அந்தக் கனாவைக் கூறுகிறாள்:

அத்தை அத்தை மாமியத்தை
ஏலேலக்கும்மி ஏலேலா
சொப்பனந்தான் கண்டேனத்தை
ஏலேலக்கும்மி ஏலேலா
காடு வெட்டி கல்பொறுக்கி
ஏலேலக்கும்மி ஏலேலா
கம்பு சோளம் தினை விதைச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
களை எடுத்துப் பாதுகாத்தேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
காக்கை வந்து மேயுதம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆண் மயிலும் பெண் மயிலும்
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆனந்தமா சேரக் கண்டேன்

ஏலேலக்கும்மி ஏலேலா
ஆண்மயிலு தலையறுந்து
ஏலேலக்கும்மி ஏலேலா
பூமியிலே விழவும் கண்டேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
பூமியிலே விழுந்ததனால்
ஏலேலக்கும்மி ஏலேலா
பொன்மயிலும் அழவும் கண்டேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
தாலியும்தான் புலம்புதத்தை
ஏலேலக்கும்மி ஏலேலா
தங்கணவன் எங்கே போனார்
ஏலேலக்கும்மி ஏலேலா
கூறை நல்லா புலம்புதத்தை
ஏலேலக்கும்மி ஏலேலா
கோவிலாரும் எங்கே போனார்
ஏலேலக்கும்மி ஏலேலா
பாவை என்ன செய்வேன் அத்தை
ஏலேலக்கும்மி ஏலேலா
பரமரையும் காணலையே
ஏலேலக்கும்மி ஏலேலா.

கண்ணகியின் கனவில் அவள் தாலியும் புலம்புகிறது. புதுச்சேலையும் புலம்புகிறது. இராமன் காடு சென்றபோது 'ஆவும் அழுத அதன் கன்றழுத' என்று கூறினாரே, அதனை இங்கு ஒப்பிடலாம். 'ஆண் மயில் தலையறுந்து' விழுந்தது அவளுக்கு மிக்க வருத்தம் சேர்க்கிறது. கம்பு சோளம் தினையில் காக்கை மேய்கிறது. இந்த கனவுகளுக்கு அஞ்சிய தாயும், கோவலன் சென்று சேர்ந்துள்ள இடத்தைக் கூறுகிறாள்:

சொல்லுறதைக் கேளுமம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா
திருக்கடையாம் பட்டணத்தில்
ஏலேலக்கும்மி ஏலேலா
தேவடியா இருக்குறாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
தேவடியா வீட்டினிலே
ஏலேலக்கும்மி ஏலேலா
சென்றமர்ந்து கொண்டானம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா.

என்று சமாதானம் சொல்கிறாள் மாமி. சில நாட்கள் சென்றன. கண்ணகியின் வருத்தம் கண்ட மாமி, மகனுக்கு ஓலை எழுதி அனுப்ப ஏற்பாடு செய்கிறாள்:

ஓலை ஒண்ணு எழுதுறேனே
ஏலேலக்கும்மி ஏலேலா
ஓயாமத்தான் அழுவாதம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா
பதறாமதான் இருந்திடம்மா
ஏலேலக்கும்மி ஏலேலா
பரமனைத்தான் கொண்டுவாரேன்
ஏலேலக்கும்மி ஏலேலா
யாரடியே தாதிமாரே
ஏலேலக்கும்மி ஏலேலா
அருகில் நல்லா வாருங்கடி
ஏலேலக்கும்மி ஏலேலா

தோழிகளை அருகில் அழைத்த மாமி, ஓலை எழுதச் சொல்கிறாள். தன் மகன் கோவலனுக்கு 'கண்ணகி இறந்து விட்டாள்! உடனே புறப்பட்டு வா' என்பதாகக் கூறுகிறது கடிதம்:

கோவலனே என் மகனே
ஏலேலக்கும்மி ஏலேலா
கொண்டுவரும் ஓலை பாரு
ஏலேலக்கும்மி ஏலேலா
கொம்பனையான் கோயிலிலே
ஏலேலக்கும்மி ஏலேலா
கொம்பனையாள் கண்ணகியை
ஏலேலக்கும்மி ஏலேலா
ஒரு கொம்பன் நாகம் தீண்டிடிச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
ஒரு சர்ப்பம் வந்து தீண்டிடிச்சி
ஏலேலக்கும்மி ஏலேலா
மயக்கம் போட்டு விழுந்திட்டாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
மாண்டு நல்லா மடிஞ்சிவிட்டா
ஏலேலக்கும்மி ஏலேலா
மாலையிட்ட தோசத்துக்கு
ஏலேலக்கும்மி ஏலேலா
மண்ணு தள்ள வார வேணும்
ஏலேலக்கும்மி ஏலேலா
கூரையிட்ட தோசத்துக்கு
ஏலேலக்கும்மி ஏலேலா
நீ கொள்ளி வைக்க வாரவேணும்
ஏலேலக்கும்மி ஏலேலா
இத்தனையும் சொல்லியல்லோ
ஏலேலக்கும்மி ஏலேலா
எழுதிவிட்டாள் ஓலையுந்தான்
ஏலேலக்கும்மி ஏலேலா
தாதியைத்தான் கூப்பிட்டுமே
ஏலேலக்கும்மி ஏலேலா

தந்திபோலக் கொடுக்கச் சொன்னா
ஏலேலக்கும்மி ஏலேலா
சீக்கிரமா முடுக்குறாளே
ஏலேலக்கும்மி ஏலேலா
செங்கடையான் பட்டினத்தே
ஏலேலக்கும்மி ஏலேலா

தாதி செல்வதற்குச் சற்று தயங்குகிறாள். மாதுபொண்ணு வீட்டுக்குப் போனால் அவள் உள்ளே விடாமல் விரட்டிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சுகிறாள். கண்ணகியின் அத்தை அதற்கு ஒரு வழியும் சொல்லி அனுப்புகிறாள்.

வீடு தேடிப் போனாலுமே
ஏலேலக்கும்மி ஏலேலா
விரட்டுவாளே எந்தனையும்
ஏலேலக்கும்மி ஏலேலா.

தோழியின் இந்தக் கூற்றுக்கு மாமி பதில் சொல்கிறாள்:

ஆத்தங்கரை தேடியல்லோ
ஏலேலக்கும்மி ஏலேலா
போங்களடி தாதியரே
ஏலேலக்கும்மி ஏலேலா.

என்று,

சொல்லி நல்லா அனுப்பிவைச்சா
ஏலேலக்கும்மி ஏலேலா
சொன்னபடி ஓடுறாங்க
ஏலேலக்கும்மி ஏலேலா

கோவலன் காலையில் ஆத்தங்கரை செல்கிறான்.

காலையிலே எழுந்தொடனே
ஏலேலக்கும்மி ஏலேலா
ஆத்தங்கரை போகிறானே
ஏலேலக்கும்மி ஏலேலா.
ஆத்திலேதான் தலைமுழுகி
ஏலேலக்கும்மி ஏலேலா
அரும்பு போல நாமம் வைத்தான்
ஏலேலக்கும்மி ஏலேலா.
திண்ணை போட்டுக் குடிசை போட்டான்
ஏலேலக்கும்மி ஏலேலா
பிள்ளையாரை பூசிக்கிறான்
ஏலேலக்கும்மி ஏலேலா

கோவலன் ஆற்றங்கரையில் பூசை செய்துகொண்டு இருக்கும் நேரத்தில் தோழிமார்கள், கடிதத்தைக் கொண்டு வந்துதருகிறார்கள். அதை வாங்கிப் படித்து அவலம் கொண்ட கோவலன் வீட்டுக்கு வந்து மாதுப்பெண்ணைப் பதற்றத்துடன் பார்த்து, "என் மனைவி இறந்துவிட்டாள், சென்று வர அனுமதி கொடு" என்று கேட்கிறான். மாதுப்பெண்ணாள் கோவலன் செல்ல அனுமதி மறுக்கிறாள். பிறகு மனம் இரங்கி, அவனிடம் இருக்கும் அனைத்துப் பொன் நகைகளையும், பொருள்கள் அனைத்தையும் வாங்கிக் கொண்டு, கட்டும் துணியையும் வாங்கிக் கொண்டு,

ஆத்தி நாரு அரைஞாண் கயிறு
ஏலேலக்கும்மி ஏலேலா
வாழைமட்டை கோவணமாம்
ஏலேலக்கும்மி ஏலேலா

என்ற கோலத்தில் அனுப்பி வைக்கிறாள். இந்த முக்கால் நிர்வாணக் கோலத்தோடு தன் மனைவிக்குச் சடங்குகள் செய்ய

வருகிறான் கோவலன். பாடலில் சில இடங்கள் புரியவில்லை. ஆனால் கதை புரிந்தது. அந்த இடங்களில் உரைநடையில் எழுத வேண்டியதாயிற்று.

பெருங்காப்பியங்களின் சிறுபகுதிகளையும் தமக்கேற்ப, ஏற்ற பகுதியை எடுத்துக்கொண்டு பாடுகிறார்கள். பாரதியும்கூட மகாபாரதத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டுதானே 'பாஞ்சாலி சபதம்' பாடினான்.

ஆக, வள்ளியின் கதையையும், கோவலன் கதையையும் கிராமப்புற மக்கள் பாடும் பாங்கை, அதுவும் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு கும்மியில் பாடும் பாங்கை இதுவரை கண்டோம்!

சிலம்பின் போக்கிற்கும், நாட்டுப்புற கதைப் போக்கிற்கும் அவரவர் பண்பாடுகளே, நாகரிக வாழ்க்கை அமைப்புகளே காரணம் என்றுணர்க.

5. பல நாளும் சீரழிஞ்சேன்!

பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு, சமுதாயத்தின் எந்த நிலையில் இருந்தாலும், துன்பங்கள்தான் தொடர்கின்றன. பெண் தன் தகப்பனார் வீட்டில் எவ்வளவு செல்லமாக வளர்ந்தாலும், அவள் 'இன்னொரு வீட்டிற்குப் போக வேண்டியவள்' என்ற காரணம் காட்டி, அடக்கமாக வைக்கவேண்டும் என்றே தாயும் கூறுவாள். அடக்கியும் வைப்பாள்!

திருமணம் செய்து கொடுத்தபின், அவள் புகுந்த வீட்டில் பெரும்பாலும், பல்வேறு ஏமாற்றங்கள், துன்பதுயரங்களில் அகப்பட்டு, அகம் கெட்டு நசித்துப் போகிறாள். கணவன் வீட்டில் ஏற்பட்ட துன்பங்களால் அவள் மீண்டும், பிறந்தவீடு வந்தாலும், தாய், தந்தை இருக்கும்வரை சிறிது வரவேற்பும் வாழ்வும் கிடைக்கின்றன. தந்தை தாயாருக்குப்பின், அண்ணன் தம்பி இருந்தாலும், நங்கை கொழுந்தியர் அவளை அண்டவிடுவதில்லை.

திருமணம் செய்து கொடுக்கப்படும்போதும், கொடுக்கப் படும் இடத்தின் உண்மை நிலையினை உணரஇயலாது போய்விடுவதுண்டு. அதனால் மணப்பெண் கட்டிவைத்திருந்த ஆசைக் கோட்டைகள் பொடிப்பொடியாகி விடுகின்றன.

இத்தகைய கருத்துக்களைக் கூறும் நாட்டுப்புறப் பாடல்கள் இங்கு தொகுக்கப்பெற்று விளக்கப்பெற்றுள்ளன. அவற்றை நீங்களே படியுங்கள்:

மாப்பிள்ளை வீட்டார் பெரிய செல்வந்தர்கள், ஏராளமான நிலபுலம் இருக்கிறது என்று நம்பி, பெண்ணைக் கொடுத்தார்கள். கொடுத்தபின்தான் அந்தப்பெண் வீட்டின் நிலை

அறிகிறாள். மிகுந்த துன்பத்துக்கும் ஆளாகிறாள். அவள் குரலைக் கேளுங்கள்:

பருத்தி வேப்பம்பூ பட்டணத்துத் தாழம்பூ
பணக்கார சீமையன்னு பார்த்துக் கொடுத்தீங்க
பல் புடிச்சிப் பார்த்தீங்க
படுமுடிச்சி சித்தரிடம்
பல நாளும் சீரழிஞ்சேன்!

கொழுந்து மகிழம்பூ
கொட்டத்துத் தாழம்பூ
கொலைகாரச் சீமையிலை
கூப்பிட்டுக் கொடுத்தீங்க
கொடுமுடிச்சி சிக்கறுக்க
கொஞ்சநாளா சீரழிஞ்சேன்!

காடு பரவலுன்னு
காராளன் பச்சலுக்கு
கன்னியைக் கொடுத்தீங்க
கன்னி போயி பார்க்க
காடு பரவவில்லே
காராளன் பச்சலில்லே
கன்னி போயி கூலி செய்ய
கடம்பட்டு போனேனே!

பூமி பரவலுன்னு
புது எக்கர் பச்சலுன்னு
பொண்ணாளே கொடுத்தீங்க
பொண்ணாளும் போயிபார்க்க
பூமி பரவவில்லே
புதுஎக்கர் பச்சலில்லே

பொண்ணுபோயி கூலி செய்ய
போனேன் தலை எழுத்தா?

நிறைய ஏலம் உள்ளவர்கள் மாப்பிள்ளை வீட்டார் என்று நம்பி, பெண் கொடுத்தார்கள் திருமணம் ஆனது. மங்கல நாண், கட்டும்போது போடுகின்ற மூன்று முடிச்சைப் 'படுமுடிச்சி' 'கொடுமுடிச்சி' என்று வருணிக்கிறாள் அவள் மேலும் அவளும் கூலி வேலை செய்யும் நிலைதான் அங்கிருந்தது. சொல்கிறாள் கேளுங்கள்.

பத்து மலைக் கந்தாண்ட
பார்த்த பக்கம் வயக்காடு
பத்து லட்சம் நெல் பூமி
பாயும் வயக்காட்டுக்கும்
பன்னீரு பாய்ச்சலுக்கும்
பார்த்து வரக் கூடாதோ
பஞ்ச விலை கூறினியே!

எட்டுமலைக் கந்தாண்
எட்டுலட்சம் நெல் பூமி
ஏழை மயக்கத்துக்கும்
இளநீரு தோட்டத்துக்கும்
எடுத்து வரக்கூடாதோ?
ஈன விலை கூறினீங்க . . .

பத்து மலைக்கு அந்தப் பக்கம் பத்து லட்சம் நெல் விளையும் பூமியும், எட்டு மலைக்கு அந்தப் பக்கம் எட்டு லட்சம் நெல் விளையும் பூமியும் இருப்பதாகச் சொல்லி இவளைத் திருமணம் செய்துவிட்டார்கள். பெற்றோர்கள் நன்றாய்ப் பார்க்காமல் ஈன விலைக்கு விற்பது போல இவளைக் கொடுத்து விட்டார்கள். ஆனால் அங்கே என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை என்பது மட்டுமல்ல. கொடியவர்களிடம் ஒப்படைத்து

விட்டார்களே! பாம்பிருக்கும் கொம்பு, விசமிருக்கும் கொம்பு, என்று தெரிந்தே பெற்றோர், திருமணம் செய்து கொடுத்தார்களா என்று வருந்துகிறாள். திரும்பத் திரும்ப மாப்பிள்ளை வீட்டார் சொன்ன பொய்யை நம்பிவிட்டார்களே என்றும் வருந்துகிறாள்:

எட்டுவள்ள காடுண்டு
ஏழங்கண வீடுண்டுன்னு
என்னைப் பெத்த சதிகாரி
ஈசுவரியை மாலையிட்டா!
ஈசுவரியும் போய்ப் பார்த்தேன்.
ஏழங்கண வீடுமில்லே
இண்டு முள்ளிராணிகிட்டே
இருந்து பொழைக்கணுமாம்
எதிரிருந்து வாழணுமாம்!

பத்துவள்ள காடுண்டு
பத்தங்கண வீடுண்டு
பாத்து கட்டிவச்சாங்க
பார்வதியும் போய்ப்பார்த்தேன்!
பத்துவள்ள காடுமில்லே
பத்தங்கண வீடுமில்லே
நான் புகுந்த கோட்டையிலே
பச்சமுள்ளு ராணிகிட்டே
பாத்து பொழைக்கணுமாம்!

எட்டுவள்ளக் காடும், பத்துவள்ளக் காடும் இல்லை. எட்டங்கண வீடும், பத்தங்கண வீடும் ஏதுமில்லை என்பது மட்டுமல்ல அவளது மாமியாரோ மிகவும் கொடுமைக்காரியாக இருக்கிறாள். அவள் மாமி இண்டுமுள்ளு மாதிரி இழிப்பவள். பச்சமுள்ளு மாதிரி இழித்துவிடக் கூடியவளாகவும் இருக்கிறாள். பெற்றோர்கள் இதை அறிந்தே கொடுத்தார்களோ என்று வருந்துகிறாள் அந்தப் பெண்:

பால மரமுன்னு
பாம்பிருக்கும் கொம்புன்னு
பலபேரும் சொன்னாங்க
பாலமரத்திலே - என்னை வளர்த்தின சண்டாளி
பாம்புக்குப் பெண் கொடுத்தே
பாலை மரத்திலே - பாம்பிருக்கும் கொம்பிலே
பல நாளாச் சீரழிச்சேன்!

வேப்ப மரமுன்னு
விசமிருக்கும் கொம்புன்னு
வெகுபேரு சொன்னாங்க
வேப்பமரத்திலே - என்னை வளர்த்தின சண்டாளி
விசமிருக்கும் கொம்புகிட்டே
விசத்துக்குப் பெண் கொடுத்தே
வேப்பமரத்திலே - விசமிருக்கும் கொம்பிலே
வெகு நாளா சீரழிஞ்சேன்!

அதிலும் கணவன் நல்லவன்தானாம். குரங்கு போன்ற மாமியாரால்தான் தொல்லையாம். எத்தனை வெறுப்பு ஏற்பட்டிருந்தால் அவ்வாறு சொல்வாள்:

கோட்டையும் நல்ல கோட்டை - எனக்கு வந்த
கொண்டவரும் ராஜாகுட்டி
நான் புகுந்த மாளியிலே
ஒண்டவந்த ராஜாத்தி
கோட்டையிலே இருக்கிறது.
குரங்கு ரெண்டும் பொல்லாப்பு.

மாமியார் மட்டுமல்ல கணவன் வீடுவிட்டு இங்கு ஒண்டவந்த நாத்தனாரும் குரங்கு என்கிறாள்!

மாளிகையும் நல்லதுதான் - எனக்கு வந்த
மன்னவரும் ராஜா குட்டி.

நான் புகுந்த மாளியிலே
இருக்கிறது ரெண்டு
மலைக்குரங்கும் பொல்லாப்பு.

ஒவ்வொரு பெண்ணுக்கு ஒவ்வொரு மாதிரி தொல்லை உண்டாகும். மற்றொரு பெண், தன்னை உறவினருக்குத் திருமணம் செய்து தராமல், வேறு எவருக்கோ கொடுத்துவிட்டதால் துன்பப்படுவதாகச் சொல்கிறாள்:

எண்ணெய் எலுமிச்சங்கா
இனம் கூறி பெண் பிறந்தேன்
ஈசுவரியே நான் வளர்ந்தேன்
இனமோ சனமோன்னு
எண்ணி இருக்காம
இனம் மாறி மாலையிட்டேன்!
இனமே ஒரு புறமா?
ஈசுவரியும் மறுபுறமா?
இனத்தை இழந்தாச்சி
என் பொறப்பைத் தேடலாச்சு.

தண்ணி எலுமிச்சங்கா
தடம் சேர்ந்த மல்லிகைப்பூ
தங்கா நான் பெண் பிறந்தேன்
சனமோ இனமோன்னு
தங்கி இருக்காம
தடம்மாறி மாலையிட்டேன்
சனமே ஒரு புறமா
சண்டாளி வாடுறனே
சனத்தை நெனைக்கலாச்சு
தன் தாயைத் தேடலாச்சு

வட்டி ரொம்ப குத்துச்சம்பா
வாராட்டி திங்கலம்பேன்
வாழையும் போசனமும்
வயிறு ரொம்பத் தின்னாலும்
மயிலி வந்து குத்தம் சொன்னா
வாழைலையும் போசனமும்
மருந்தாக் கசக்குதம்மா!

தன் இனத்தில் திருமணம் செய்து கொள்ளாமல், தன் சனத்தில் திருமணம் செய்து கொள்ளாமல், தானாக விரும்பி திருமணம் செய்து கொண்டவள் புலம்புகிறாள்! அவளை ஆதரிப்பார் இல்லை. நல்லது கெட்டதற்கு வருவாரில்லை. நல்ல உணவு கிடைத்தாலும் அதனை மனதார உண்ண முடியவில்லை என்பது அவளது ஆதங்கமாக உள்ளது.

நாட்டில் இன்றும் நாம் இந்த நிலைமையைப் படித்தவர் சமூகத்திலும் பார்க்கிறோம். தானாக விரும்பித் திருமணம் செய்து கொண்ட பெண்ணோ அல்லது ஆணோ விதிவிலக்காக இருப்பவர்கள் தவிர மற்றவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

பெரியவர்களாகப் பார்த்து செய்கின்ற திருமணங் களிலும், சில இடர்ப்பாடுகளும், பல இடர்ப்பாடுகள் கூட வந்து விடுகின்றன. அதனை 'விதி' என்று கூறி, ஒரு சொல்லில் தட்டிக்கழித்து விடுவார்கள். தாமாக, சாதி விட்டுச் சாதி, இனம் விட்டுத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு, தானாக இடையூறு வாராவிடினும் வேண்டுமென்றே இடையூறுகள் செய்கின்ற நிலை, நம் நாட்டில் இன்னும் இருந்து வருகிறது. அந்த இடர்ப்பாட்டின் ஒரு குரல்தான் மேலே கண்ட பாடல்.

கணவர் வீட்டில் தம் மகள் சிறப்பாக வாழவேண்டும் என்பதற்காக, பெண்ணைக் கொடுத்ததுமல்லாமல், விளை

நிலங்களான மண்ணையும் கொடுத்தார்கள் பெற்றவர்கள். அவள் மீது இருந்த பட்டாவையும் மாற்றிக்கொண்டு, நிலத்தையும் பிடுங்கிக் கொண்டு தாய்வீட்டுக்கு அனுப்பி விட்டனர் மாமன் மாமியாரும் கணவனும். பெண்ணின் தாய் ஏதும் செய்ய இயலா நிலையில் வருந்துகிறாள்.

பத்துலட்சம் கந்தாயம் - என் பெண்ணை
பாங்கிக்கு வேணுமின்னு
பண்ணிவச்சேன் பட்டாவும்
பட்டாவும் என்னுதின்னார் - நான் பொறந்த
மாளிகையில்
பத்திரமும் என்னுதின்னார்.

ஆகத் தாய், தான் பிறந்த வீட்டில்தான் பெண் கொடுத்திருக்கிறாள். அவளுடைய அண்ணன் அல்லது தம்பி மகனுக்குத்தான் பெண் கொடுத்தாள் என்றாரும் பொருள் என்று வரும்போது அண்ணன் தம்பியானாலும் நீதிநெறி தவறிவிடுகிறார்களே!

எள்ளு வயக்காடு - என் பெண்ணுக்கு
எட்டு லட்சம் கந்தாயம் - நான் வளர்த்த
ஈசுவரிக்கு வேணுமின்னு
எழுதி வச்சப் பட்டாவும்
பட்டாவும் என்னுதின்னார்
பத்திரமும் என்னுதின்னார்

மிகச் சின்ன வயதிலேயே இந்தப் பெண்ணை உறவுக்கு என்றில்லாமல், பொருளுக்கென்று திருமணம் செய்து கொண்டார்கள். பாவாடை கட்டவும், சித்தாடை கட்டவும் கூடத் தெரியா வயது.

பாவாடை கட்டுமின்னார்
பாவாடை கட்ட வல்லே

நான் புகுந்த மாளியிலே
பால சரம் போடவில்லை
சித்தாடை கட்டுமின்னார்
சிறு சலங்கை போடுமின்னார்
சித்தாடை கட்ட வல்லே
நான் புகுந்த மாளியிலே
சிறு சலங்கை போட வல்லே

இந்தச் சிறு நிலையில் திருமணம் செய்வித்தார்கள். தான் பட்ட துன்பத்திற்கு,

கோழியா சனிச்சிருந்தா
குப்பையேறி வாழ்ந்திருப்பேன்

என்று புலம்புகிறாள்.

பட்டாவையும் மாற்றிக் கொண்டார்களே என்று தாய் கதறினாள். சிறுமியாகத் திருமணம் செய்து அழைத்துச் சென்று இப்போது வாழ முடியாமல் துரத்திவிட்டார்களே என்று மகள் கதறுகிறாள். கோழியாய்ப் பிறந்திருந்தால் கூட குப்பை மேட்டில் வாழ்ந்திருக்கலாம் என்று வருந்துகிறாள் மகள்.

திருமணம் செய்து கொடுத்த இடத்தில் துன்பப்படுகிறபோது அந்தப் பெண் சொல்கிறாள்:

நாடறிஞ்ச வீட்டுக்குள்ளே
நடுக்கூடத்துக் குள்ளார
நல்லபடி நான் பொறந்தேன்
நல்ல மணி ஓசைக்கும்
நாகமணி ஓசைக்கும்
நடப்பாரு செட்டி மக்க
நாள்தரிக்க வந்தாங்க

வந்து பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு போனார்கள். ஆனால் அவளை அவர்கள் பெற்றவர் வீட்டுக்கு அனுப்புவது இல்லை. தாயைப் பார்க்கவும் அனுமதிப்பதில்லை.

பெத்தவளை சேவிக்கவே
நான் பொறந்த சீமையிலே
நல்ல மணி அம்மாவே
போய்பாக்க எண்ணிருந்தேன்.

அவள் தன் தாயைச் சென்று பார்க்கலாமென்றால் வழியும் தெரியவில்லை. எல்லாம் புதிய வழிகள்:

நடந்த தடமுமில்லே
நான் பார்த்த சீமையில்லே
நல்ல மணி அம்மாவே
நடந்து போனீங்களே!
நான் புகுந்த நாள் முதலா
நல்ல மணி தேடறம்மா
நாகமல்லி வாடறம்மா

போகும் தடத்திலே
புதுக்கிணறும் சாவடியாம்
புதுக்கிணத்துக் குள்ளாற
பொன்னுமல்லி நான் பிறந்தேன்
போ(ற்)த்தும்படி நான் வளர்ந்தேன்
பொன்னுமல்லி வாசனைக்கும்
பொந்தியிலே ஓசனைக்கும்
பூலோகத்து செட்டி மக்க
பொண்ணு கேக்க வந்தாங்க
பொண் குறிச்ச நாள் முதலா
பொன்னுமல்லி சாகுறம்மா
பொருளுமல்லி வாடுதம்மா

அவள் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட இடம் மிகத் தொலைவு என்பதால், திகைக்கிறாள். தன் தந்தையையும் தாயையும் எண்ணுகிறாள்:

ஆத்துக்கு அந்தாண்ட
என்னைப் பெத்த ராசாவே
அன்னமின்னு குந்திருந்தேன்
அன்னமின்னு பார்க்காம
அம்பை உருவுராங்க
ஆண்பிள்ளை பிச்சைக்காரன்
ஆராய்ந்து பார்க்காம
அம்பிலே சுட்டானே
அம்பிலே சுட்டபுண்ணு
ஆறறது எக்காலம்?

குளத்துக்கு அந்தாண்ட
என்னைப் பெத்த அம்மாவே
குயிலுன்னு குந்திருந்தேன்
குயிலுன்னு பார்க்காம
குண்டை எடுக்கிறாங்க
கொடுமைக்கார என் கணவன்
குண்டுலே சுட்டானே!
குண்டுலே சுட்டபுண்ணு
கூடுறது எக்காலம் ?

இப்படித் துன்புறுவாள் ஒரு பெண். சிறுமியாய் இருந்த பெண்ணை இல்லறத்தில் ஈடுபடுத்தியதால் அவள் பெற்ற அனுபவங்களைச் சொல்கிறாள்:

பட்டணத்து வீதியிலே
பந்தாட்டம் ஆடையிலே - என்னைப் பெத்த
செட்டிமன்னன்
பாதியிலே கூட்டி வந்தார்

பந்து சரியில்லையே - நான்
பந்தாட்டம் ஆடலையே
சேலத்து வீதியிலே

சீட்டாட்டம் ஆடையிலே
செய்தி கேட்டு கூட்டிவந்தார்
சீட்டும் சரியில்லையே
சீட்டாட்டம் ஆடலையே!

மந்தையிலே ஆட்டமின்னு
மாதுபெண்ணை கூட்டி வந்தேன்
மந்தை சரியில்லையே
மனதும் சலிக்குதடா!

தெருக்கூத்து ஆடுதுன்னு
தெய்வ சபை கூட்டி வந்தேன்
தெருவும் சரியில்லையே!
தெருக்கூத்தும் ஆடலையே!
தெய்வ சபை கலையுதடா!

மேற்கண்ட பாடல்களில், விளையாடிக் கொண்டிருந்த சிறுமிக்குத் திருமணம் செய்து வைத்ததால் ஏற்பட்ட தீங்குகள் கூறப்படுகின்றன. எதிர்பார்ப்பு மிகவும் ஏமாற்றமாகிவிட்டது என்பது, இதில் முக்கிய மையக்கருத்தாகும். பந்து சரியில்லையே என்பது அவள் கணவன் சரியில்லை என்று சொல்கிறது. சீட்டும் சரியில்லையே என்பதும் அதே கருத்தைக் குறிப்பதாக இருக்கலாம். அல்லது அவர்கள் குடும்பம் சரியில்லை என்பதாகவும் இருக்கலாம். மந்தையிலே ஆட்டம், வாழ்க்கை என்னும் நாடகம், தெருக்கூத்தும் அதுவே. மந்தையும் சரியில்லை. தெய்வ சபையும் சரியில்லை. ஊராரும் சரியில்லாத நியாயம் பேசுவதாகக் கருதி பெண்ணின் தாய் வருந்தும் செய்தியாகவும் இருக்கலாம். இதில் விரிவாகச் சமூகச் செய்திகள் அடங்கியுள்ளன. தோண்டி எடுத்துக்கொள்க.

6. அணி பார்த்துப் பூட்டவில்லை

தமது பெண் தமது வீட்டுக்கு வருவாள் என்று பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பிட்ட நாளில் மாமன் மாமியர் அவளைத் தம் பெற்றோர் இல்லத்துக்கு அனுப்ப மறுத்து விடுகிறார்கள்.

மாயக் குதிரை வண்டி
மயிலி வரும் பொட்டி வண்டி
மயிலி வருவான்னு
மதிலேறிப் பார்ப்பாங்க
மதிலுக்குச் சொந்தக்காரி
மதிலே இடியுதெம்பா
மாமரமும் சாயுதெம்பா
மதிலு இடிஞ்சாலும்
மதிலு வச்சிக் கட்டிக்கலாம்
மாளிகையின் வாசலுக்கு
மயிலி வந்தால் போதுமின்னார் !

பெண் வருவாள் வருவாள் என்று தாய் எதிர்பார்த்து, எதிர்பார்த்து 'வருகிறாளா? வண்டி வருகிறதா?' என்று பக்கத்து வீட்டு மதில் மேல் ஏறிப் பார்க்கிறாள் பக்கத்து வீடு பங்காளி வீடு பங்காளியம்மா 'மதில் மேல் ஏறாதே! அது இடிந்துவிடும்' என்று கூறுகிறாள் மதில் இடிந்தால் நான் கட்டித் தருவேன்! என் மகள் வந்தால் போதுமே! என்று அங்கலாய்க்கிறாள். அடுத்த பாடலும் இதை போன்றதுதான்

சின்னக் குதிரை வண்டி
செல்வி வரும் பொட்டி வண்டி
செல்வி வருவான்னு

செவரேறிப் பார்ப்பாங்க
செவுத்துக்குச் சொந்தக்காரி
செவுரும் இடியுதெம்பா
தேங்கனியும் சாயுதெம்பா
செவரு உடைஞ்சாலும்
செவரு வச்சிக் கட்டிக்கலாம்.
செல்வருட மாளிகைக்குச்
செல்வி வந்தா போதுமென்பா!

அன்றைய தினம் தாய் வீட்டுக்குப் புறப்பட முடியாத மகள், தாய் படும் துன்பத்தை எண்ணிக் கலங்கி இருந்தாள்! மாமன் மாமியரிடம் சற்று முரண்பாடும் செய்து கொண்டாள்! அவர்கள் தமது மகனிடம் வத்தி வைத்து விட்டார்கள். அதனால் அவன் அடித்து விடுகிறான் போலும். அவள் கூந்தல் சோர பெற்றோரிடம் வருகிறாள்.

தாய்,

"கூந்தல் கலைந்ததென்ன
குரலு மங்கிப் போனதென்ன"

என்று கேட்கிறாள். அதற்கு மகள் சொல்கிறாள்,

"ஆத்துக்கு அந்தாண்ட
ஆனை கட்டும் கல்தூணு
ஆனைக்கும் சங்கிலிக்கும்
அணி பார்த்து பூட்டினிங்க
ஆனையை அடிக்க மாட்டோம்"

ஆனையாகிய என்னை அணி பார்த்துத்தான் பூட்டினீர்கள். ஆனையை அடிக்க மாட்டோம் என்றும் கணவன் வீட்டார் உறுதி கூறினார்கள்.

ஆனைக்கும் சங்கிலிக்கும்
அணி பார்த்துப் பூட்டாம
ஆனை கரையறனே
அரண்மனையைச் சுத்தறனே

தகுதியான கணவனுக்குத் திருமணம் செய்து வைக்காமையால்தான், நான் துன்புறுகிறேன் என்கிறாள் கட்டிக் கொடுத்த மகள். மேலும் சொல்கிறாள்:

குளத்துக்கு அந்தாண்ட
குதிரை கட்டும் கல்தூணு
குதிரைக்கும் சங்கிலிக்கும்
குறி பார்த்துப் பூட்டினீங்க
குதிரைக்கும் சங்கிலிக்கும்
குறிபார்த்துப் பூட்டாம
குதிரை அழியறமே - எங்க அப்பன் வீட்டுக்
கோட்டையைச் சுத்தறமே!

அப்பன் வீட்டையே சுற்றிவரும் நிலைமை ஏற்பட்டதற்காக அந்த மகள் வருந்துகிறாள். மற்றொருத்தி பெற்றோர் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள். அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டுதான் வரவேண்டியுள்ளது. மீண்டும் கணவன் வீட்டுக்குத் திரும்பிச் செல்கிறாள். சென்றால் ஏற்றுக் கொள்வானா? ஏனென்றால் அவளது கணவனுக்குத் 'தாரம் இரண்டு' என்று சோசியக்காரன் சொல்லியுள்ளானாம். ஆகவே கணவன் புறக்கணிக்கிறான்.

இஞ்சி வச்சிப் பிஞ்சிறங்கி
ஏர் போட்டுக் கால் வாங்கி
தார் வாங்கும் நாளையிலே
எனக்கு வந்த மன்னருக்குத்
தாரங்களே ரெண்டுமின்னார்!

(அதனால்)
மக்கள் ரெண்டை அழைச்சிக்கிட்டு
மாடு ரெண்டைக் கூட்டிக்கிட்டு
மாளிகைக்கு போய் நின்னேன்!
மாடு ரெண்டும் நம்பளுது
மக்கள் ரெண்டும் யாருமின்னார்
மக்கள் விடும் கண்ணீரு
மாலை நனைஞ்சிவரும்
மனக் கவலை சுத்தி வரும்

இந்தப் பிள்ளைகள் யாருடைய பிள்ளைகள் என்று கேட்கிறான் கணவன். மாடுகள் மட்டும் தன்னுடையவை என்கிறான். மக்களோ தந்தை ஏற்றுக் கொள்ளாமையால் கண்ணீர் விடுகிறார்கள்.

இஞ்சி வச்சிப் பிஞ்சிறங்கி
ஏர் போட்டுக் கால் வாங்கி
தார் வாங்கும் நாளையிலே
எனக்கு வந்த மன்னருக்குத்
தாரங்களே ரெண்டுமின்னார்
(அதனால்)
மக்கள் ரெண்டை அழைச்சிக்கிட்டு
மாடு ரெண்டைக் கூட்டிக்கிட்டு
மகராசன் வாசலுக்கு
மாளிகைக்குப் போயி நின்னேன்
மாடு ரெண்டும் நம்புளுது
மக்கள் ரெண்டும் யாருமின்னார்
மக்கள் விடும் கண்ணீரு
மாலை நனைஞ்சிவரும்
மனைக்கவலை சுத்தி வரும்

இதைக் கண்ட அவள் கணவன் அவள் மீது பழியைச் சுமத்துகிறான். பல குற்றங்களை இல்லாததும், பொல்லாததுமாக அடுக்கடுக்காகக் கூறுகிறான். திகைத்து நிற்கும் அவள் தான் பிறந்த பிறப்பும், இருந்த இருப்பும் எப்படிப்பட்டது என்று புலம்பிக் கூறுகிறாள்:

ஈரோட்டு வக்கீலோட
ஈசுவரியா பெண் பிறந்தேன்
ஈசுவரியா கட்டும் சேலை
சிலுக்கு நெறைஞ்சிருக்கும்
சின்ன கண்ணி ஓட்டிருக்கும்
ஈசுவரியை குத்தம் சொன்னா
சிலுக்கு அறுந்து விழும்
சின்ன கண்ணி இத்து விடும்

பத்துப் பொறப்போட
பட்டணத்து வக்கீலோட
பார்வதியா பெண் பிறந்தேன்
பார்வதி கட்டும் சேலை
பட்டு நெறஞ்சிருக்கும்
பவுனு கம்பி ஓட்டிருக்கும்
பார்வதியைக் குத்தம் சொன்னா
பட்டு அறுந்து விழும்
பவுனு கம்பி இத்து விடும்

தன் கணவன் வாய் கூசாமல் குற்றம் சொல்கிறான். அப்படிக் குற்றம் சொன்னால் அவள் உடுத்திருக்கும் புடவையில் உள்ள பட்டு நூல் அறும், சரிகைக் கம்பி துண்டு துண்டாக இற்றுவிடும். அவள் ஒழுக்கம் பற்றி அவள் உடுத்திருக்கும் புடவைக்குத்தானே தெளிவாகத் தெரியும்.

செல்வச் சிறப்புடைய தாய்மாமனை எண்ணுகிறாள். தன் தங்கச்சிப் புள்ளை என்று தன் மகனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தால் இப்படி வருமா? உறவு என்றும் உற்ற கை கொடுக்குமே! ஆனால் அப்படிச் செய்யவில்லையே என்று வருந்துகிறார்.

தங்கத் தகட்டு வண்டி
தாய்மாமன் ஓட்டும் வண்டி
தங்கச்சிப் பிள்ளைன்னு
தாலி எடுத்திருந்தா
தங்கச்சரம் பூட்டிருந்தா
தனி நாடு போக மாட்டோம்!

தங்கச்சி பிள்ளைன்னு
தாலி எடுக்காம
தங்கச்சரம் பூட்டாம
தனி நாடு போயிட்டமே

ஓமம் சுமந்த வண்டி
ஒரு மாமன் ஓட்டும் வண்டி
பொறந்தவ பிள்ளைன்னு
பொருந்தி எடுத்திருந்தா
பொன்னு சரம் பூட்டிருந்தா
புது நாடு போகமாட்டோம்

பொறந்தவ பிள்ளைன்னு
பொருந்தி எடுக்காம
பொன்னு சரம் பூட்டாம
புது நாடு போயிட்டமே !

மாமன் கைவிட்டதால்தான் தனி நாடு போக வேண்டி இருந்தது. புதுநாடு போய் புதியவரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியிருந்தது என்கிறாள் அந்தப் பெண். தான்

பிறக்காமலே இருந்திருக்கக் கூடாதா? அல்லது என் தாய் மருந்து வாங்கிக் குடித்து கருவிலேயே அழித்திருக்கக் கூடாதா? பெற்று வளர்த்து இவ்வளவு இன்னலுக்கு ஆளாக்கி விட்டாளே தாய் என்று வருந்துகிறாள். தாயை எண்ணிப் பாடுகிறாள்:

கடலைப் பருப்பாட்டம்
கருவாய்த் தரிச்சமம்மா
காயிலே மருந்து வாங்கிக்
கலக்கிக் குடிச்சிருந்தா
கருவழிஞ்சி போயிருப்பேன்

கடையிலே மருந்து வாங்கிக்
கலக்கிக் குடிக்காம
கருவழிஞ்சி போகாம
கன்னியைப் பொண்ணாக்கி
காராளன் வீதியிலே
கவலைப்பட வச்சயம்மா !

உளுத்தம் பருப்பாட்டம்
உருவாத் தரிச்சனம்மா
ஊரிலே மருந்து வாங்கி
உருக்கிக் குடிச்சிருந்தா
உருவழிஞ்சி போயிருப்பேன்

ஊரிலே மருந்து வாங்கி
உருக்கிக் குடிக்காம
உருவழிஞ்சி போகாம
உள்ளூரு வீதியிலே
உருவம் கெட வச்சயம்மா!

கருவை அழிக்கும் 'கலை' எப்படி இருந்தது என்பதும் இந்தப் பாடலில் நமக்குத் தெரிகிறது. கடலைப் பருப்பாட்டம் உளுத்தம் பருப்பாட்டம் கரு இருக்கும் என்பதும், மருந்து

வாங்கிக் குடித்து அதனை அழிக்கும் பழக்கம் மறைவாகவேனும் இருந்துள்ளது என்பதும் தெரிகிறது. தன் நிலையை உருவகமாகக் கூறுகிறாள் படிங்கள்:

நெய்க்காச்ச போட்டடுப்பு
நெல்லிக்கா சூட்டடுப்பு
நெய்க்காச்ச இல்லாம
நெறங்கெட்டு நிக்கிறம்மா!
பால்காய்ச்ச போட்டடுப்பு
பாங்கான சூட்டடுப்பு
இல்லாம பால்காய்ச்ச
பதங்கெட்டு நிக்குறம்மா!

தாய்க்குத் தான் படும் துன்பத்தை எப்படியும் தெரிவிக்க வேண்டும் என்று கருதுகிறாள் அந்தப் பெண். யார் வழியாகச் செய்தி அனுப்புவது என்று அவளுக்குப் புரியவில்லை. அவள் எதிரில் கிளிகள் பறக்கின்றன. அவற்றைப் பார்த்துக் கூறுகிறாள்:

வடக்கே போற பச்சைக்கிளி
வடநாட்டு அச்சக்கிளி
வடநாடு போனிங்கனா - என்னை
வளர்த்த தாயைக் கண்டிங்கனா
மயிலிபடும் துன்பத்தை
மனமுருகச் சொல்லிடுங்க

தெற்கேதான் பச்சைக்கிளி
தென்னாட்டு அச்சக்கிளி
தென்னாட்டு போனிங்கனா
தேடும் தாயைக் கண்டிங்கனா
செல்வி படும் துன்பத்தை
தெய்க்கும்படி சொல்லிடுங்க

இவள் சொற்படி அந்தக் கிளிகள் தாயிடம் துன்பத்தைச் சொல்லிவிட்டன போலும். பதிலும் கொண்டு வருகின்றன.

வடநாடு போனோமாயா
வளர்த்த தாயைக் கண்டோமாயா
மகளும் கரையுறான்னு
மனமுருகச் சொன்னோமாயா

தென்னாடு போனாமாயா
உன்னைப் பெத்த
தேடும் தாயைக் கண்டோமாயா
செல்வி கரையறான்னு - சிறகொடிஞ்சி நிற்குறான்னு
சேதியைச் சொன்னோமாயா

தாயிடம் கிளிகள் கூறின. தாய் என்ன பதில் சொன்னாள்? தாய் சொன்ன பதிலைக் கிளிகள் கூறுகின்றன:

செல்வி கரைஞ்சாலும்
சிறகொடிஞ்சி நின்னாலும்
செத்தவ என்ன செய்வேன்
சீமையிலே உள்ளபடி
சீராக வாழச் சொல்லு

என்பனவாகும். செத்தவ நான் என்ன செய்வேன் என்பது 'இறந்தாள்' என்ற பொருளிலன்றி - எதுவும் செய்ய முடியாத நான் என்னும் பொருள்படலாமல்லவா?

தாய்வீட்டு உணவைப் பலரும் உண்ணுகிறார்கள். ஆனால் நான் மட்டும் அதனை உண்ண இயலா நிலையில் இருக்கின்றேனே என்கிறாள் மற்றொரு பெண்:

வாச கட்டி மண்ணறைஞ்சி
மாவிலயும் கோலமிட்டேன்
வாழைக்கும் தண்ணீர்விட்டேன்

வாழை பழுத்திருக்கும்
வடபுறமா காய்ஞ்சிருக்கும்
வாசலிலே போகும் கிளி
வந்து பசியாறுதம்மா
மன்னருக்குப் பொறந்தகிளி
மனமழிஞ்சி நிக்குறனே!

சின்ன பொட்டி மண்ணைறைஞ்சி
சித்திரத்துக் கோலமிட்டேன்
தென்னைக்கும் தண்ணீர் விட்டேன்
தெக்கபோகும் பச்சைக்கிளி
தின்னு பசியாறுதம்மா
தென்னருக்குப் பொறந்தகிளி
சீரழிஞ்சி நிற்குறனே!

சிறுமியாக இருக்கும்போது தன் தாய்வீட்டில் கோலமிட்டாள். தோட்ட வேலைகளும் செய்தாள்! ஆனால் இப்பொழுது 'யார்யாரோ' வந்து பலன் அனுபவிக்கிறார்கள். ஆனால் நான் வரமுடியாத நிலையில் துன்புற்று நிற்கிறேனே என்கிறாள் அந்த மகள். (யார்யாரோ என்பது வாசலிலே போகும் கிளி, தெக்கப்போகும் பச்சைக்கிளிகள்தான். அவை அண்ணி மார்களாக இருக்கலாம்)

அப்படித் துன்புற்று நிற்கின்ற அவள்தான் அண்ணன்மாரிடம் (அண்ணிமாரிடம்) உதவி கேட்கச் செல்கிறாள். அது கிடைக்கவில்லை. அதை அவள் வழக்கில் உள்ளபடி கூறுகிறாள்:

வாழை இருநூறு
வாழை இலை முன்னூறு
வாழை இலை அறுத்துக்கிட்டு
வளர்ந்த இடமுன்னு

வாசலிலே போயி நின்னேன்
வான்னு அழைப்பாரில்லே
வாழை இலைக்குச் சோறுமில்லே !
தென்னை இருநூறு
தென்னை இலை முன்னூறு
தென்னலை எடுத்துகிட்டுத்
திண்ணையோரம் போயி நின்னேன்
தேடி அழைப்பாரில்லே
தெமனலைக்குச் சோறுமில்லே !

அவளுக்கு அண்ணன் வீட்டில் வரவேற்பு சரியில்லை. கணவன் வீட்டிலாவது கொண்டு போய் சேர்த்துவிடுங்கள் என்று கூறுகிறாள். அவர்கள் வண்டியில் ஏற்றினார்கள். வாடகை கொடுக்கவில்லை. தன்னிடம் வாடகை கொடுக்கப் பணமும் இல்லை வண்டிக்காரன் வழியிலேயே இறக்கி விட்டுவிட்டான்! வண்டி என்பது அவர்கள் காட்டிய வழிதான். அவன் ஒப்படைக்கப்பட்ட பொது மனிதர்களாகவும் இருக்கலாம்.

வண்ணமயிர்க்கோதி
வாடகைக்கு ஓடும் வண்டி
வாழுகிற இடத்துக்கு
வழிபார்த்து ஓடும் வண்டி
வாழுமிடம் சேர்ப்பமின்னு
வண்டியே ஏத்துனாங்க!
வாழும் இடம் செல்லாம
வழியிலே சீரழிஞ்சேன்!

சின்னமயிர்க்கோதி
சில்லறைக்கு ஓடும் வண்டி
சேருகிற இடத்துக்கு
திசைபாத்து ஓடும் வண்டி
சேருமிடம் சேர்ப்பமின்னு

சில்லறையை வாங்குனாங்க
சில்லறையை வாங்கிக்கிட்டு
சேருமிடம் சேர்க்காம
தெருவிலே இறக்குனாங்க
சேருமிடம் சேராம
தெருவிலே சீரழிஞ்சேன்!

அண்ணன்மார்கள் பொதுமனிதர்களிடம் நியாயம் பேசி ஒப்படைத்துவிட்டார்கள். ஆனால் அந்த பொது மனிதர்கள் வழியிலேயே கைவிட்டுவிட்டார்கள்.

தாய்தந்தையர் இருக்கும்போது அவர்கள் பார்த்துத்தான் அவளைத் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவர்கள் உரிய சீரையும்தான் கொடுத்தார்கள். ஆனாலும் அவள் கணவன் தாய் பின்னாலேயே சுற்றி அவள் சொல்லும் சொற்களையே கேட்பவனாகி விட்டான்.

மரமும் மரம் அசைய
மல்லிப்பூத் தேர் அசைய
மன்னவரும் தாயாரும்
மாளிதேசம் போறமுன்னார்
மாளப் பணம் கொடுத்து
மாளிதேசம் ஆள வந்த
மங்கை மனம் சலிச்சேன்
மருக்கொழுந்து வாட்டம் கொண்டேன்!

செடியே கொடி அசைய
செவந்திப்பூத் தேர் அசைய
சீமானும் தாயாரும்
சீமைதேசம் போறமுன்னார்
சேரப் பணம் கொடுத்து
சீமைதேசம் ஆளவந்த

செல்லி மனம் சலிச்சேன்
செண்டுமல்லி வாட்டம் கொண்டேன்.

எவ்வளவு சீர் கொடுத்தும் கூட, இவளைப் புறக்கணித்து விட்டார்கள். அண்ணன் வீட்டுக்குச் சென்றாலும் புறக்கணிப்புத்தாள்! என்ன செய்வாள்! என்ன செய்வாள்! திருமணம் செய்து கொடுக்கும் முன்பே 'மாப்பிள்ளை பிடித்திருக்கிறதா?' என்று கேட்டார்களே அப்பொழுது ஆசைப்பட்டுக் கட்டிக் கொண்டேனே என்று புலம்புகிறாள். எதற்கு ஆசைப் பட்டாளாம்?

கொல்லி மலை மேலே - கோரை படர்ந்திருக்கும்
கோரைப்பூப் பூத்திருக்கும்
கோரைப்பூவுக்காசைப்பட்டேன் !
தூரத்தைப் பார்க்காம
சுத்தி நின்னு மலை பெத்தேன் !
மாலையிட்ட நாள் முதலா
வளர்த்தின ஈசுவரிசியே
மங்கை இளநீரு
மாசமெல்லாம் கண்ணீரு.

பாலை மலை மேலே
பாலை படர்ந்திருக்கும்
பாலைப்பூவாப் பூத்திருக்கும்
பாலைப்பூவுக் காசைப்பட்டேன்
பக்கம் நின்னு மாலையிட்டார்!
மாலையிட்ட நாள் முதலா
தேங்கா இளநீரு
தீராத கண்ணீரு . . .

கோரை பூப்பூத்தால், அது விளைந்து பலன் தரப்போவதில்லை பார்க்க அழகாக இருக்கும். பாலைப் பூவை

யாரும் தலையில் சூட்டிக் கொள்ளப்போவதில்லை காயும் காய்த்தாலும் கசப்பாகத்தான் இருக்கும் பலன் இல்லாத கோரையை, பாலைப் பூவை, கசக்கும் காயை நம்பி மணந்து கொண்டேனே என்று வருந்துகிறாள். அண்ணன்மாரகளாவது கருணை காட்டினார்களா? இல்லையே! அதை எண்ணிப் பாடுகிறாள்

மாம்பூ ராசருவ
மல்லிக் கோடி அண்ணாருங்க
மயிலி செஞ்ச குத்தமென்ன
இந்நேர வேளையிலே
மனசில் சுமை ஆனதென்ன?

தேராம்பூ ராசருவ
செல்லிக்கொடி என் பொறப்பு
செல்லிக் கொடி அண்ணார்கிட்டே
செல்லி செஞ்ச குத்தமென்ன?
சிரசில் சுமை ஆனதென்ன?

அண்ணன்மார்கள் துரத்திவிட்டாலும் கூட (அண்ணிமார்கள்) அண்ணன்மார்களிடம் குறைகாண முடியவில்லை. (அண்ணிமார்களைக் குறைகாண்பதுதான் வழக்கம். அண்ணன் நல்லவன் அண்ணிதான் கெடுத்துவிட்டாள் என்று எண்ணுவது உலகமரபு) அண்ணிகள் சொல்லும் குற்றத்தை எண்ணியும் பாடுகிறாள்.

தான் தன அண்ணன்மார்களோடு பிறந்து பெருமை என்று எண்ணுகிறாள்

ஊசிமல்லி ராசரோடே
உறவுமல்லி பெண் பிறந்தேன்
ஊசிமல்லி ராசர் கிட்டே
ஒசந்தமல்லி குத்தம் சொன்னா

ஒடம்பு கிடந்தசையும்
உத்ராட்சத் தூண் அசையும்

காசி மல்லி ராசரோடே
கனக மல்லி பொண்பொறந்தேன்
காசி மல்லி ராசர்கிட்டே
கனத்த மல்லி குத்தம் சொன்னா
காலும் கிடந்தசையும்
கல்லில் செய்த தூணசையும்.

ஒசந்த மல்லியும், கனத்த மல்லியும் அண்ணிகளாக இருக்கலாம் அவர்கள் இவளைப்பற்றி அண்ணன் மார்களிடம் குற்றம் சொல்கிறார்கள். அதனால் உடம்பு நடுங்குகிறது கால்கள் நடுங்குகின்றன. உத்ராட்சத் தூணும் கல் தூணும் அசைகின்றன. அவர்கள் தன்னைப் பற்றிச் சொல்லும் குற்றம் சரியல்ல என்று எண்ணி அவை நடுங்குகின்றன. அசைகின்றன.

ஆனைக்கும், சங்கிலிக்கும் அணி பார்த்துப் பூட்டாமையினால், ஒரு பெண் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகிறாள் கணவன் வீட்டிலும் வாழமுடியவில்லை. அண்ணன் தம்பிகளும் ஆதரிக்காமல் விட்டுவிடுகிறார்கள். நல்ல இடத்தில் அவள் வாழ்க்கைப்பட்டும் பெருஞ்செல்வத்தில் இருப்பாளானால், 'என் உடன்பிறப்பு' என்று ஓடிவருவார்கள் நாத்தி, நங்கையாரும் வரவேற்பார்கள்.

சமுதாயத்தில் பொருளாதாரத்தோடு தொடர்புடைய வாழ்க்கைதான் யாவற்றையும் நிர்ணயம் செய்கின்றது என்பது புலப்படுகிறது.

7. பன்மணிக் குவியல்

இக்குவியலில், பிள்ளையார், தோழனாகி விடுவதும், தேன்வடியும் தெள் பாங்கு, தேனடைச் சிதறலும் என மூன்று சிறுபகுதிகள் இணைந்துள்ளன. நாட்டுப் பாடல்களில் கடவுள் ஒரு தோழனாகவே இடம்பெறுகிறார். உடன் பேசுவார்! பழகுவார்! கொடுத்ததை உண்பார்! அவரிடம் கோபமும் கொள்ளலாம், சமாதானமும் செய்து கொள்ளலாம். இதோ பிள்ளையாரை நாட்டுப்புற மக்கள் பாடுகிறார்கள்:

ஊருக்கு மேக்காலே தன்னானே னானே!
ஓசந்திருக்கும் நப்பாலை தன்னானே னானே!
நப்பாலை உள்ளிருக்கும் தன்னானே னானே!
சப்பாணிப் பிள்ளையாரே தன்னானே னானே!
சப்பாணிப் பிள்ளையார்க்கு தன்னானே னானே!
என்ன என்ன அடையாளம் தன்னானே னானே!

கும்மி அல்லது கோலாட்டம் அடித்து, பிள்ளையார் என்பதற்கு என்ன அடையாளம் என்று கேட்கிறார்கள் கும்மியடிக்கும் பெண்கள். சப்பாணியாக இருப்பது ஒரு அடையாளம். வேறு அடையாளமும் கூறுகிறார்கள்.

ஓரேருமைப் பால்குடிப்பார் தன்னானே னானம்
ஒத்தமலைத் தேன் குடிப்பார் தன்னானே னானம்
ஓரேருமைப் பாலுக்கும் தன்னானே னானம்
ஒத்தமலைத் தேனுக்கும் தன்னானே னானம்
ஒப்பந்தம் செய்திருப்பார் தன்னானே னானம்

இது நகைச்சுவையாகச் சொல்வது போலிருந் தாலும், பக்தர்கள் இதனை 'நிந்தாஸ்துதி' என்று கூறுவார்கள். நாட்டுப்புற மக்கள் இயல்புப்படி பார்த்தால், கடவுளையே ஒரு தோழன் போல பாவித்துக் கேலி செய்கிறார்கள். 'ஓரெருமைப்பால்' என்பது 'இரண்டெருமைப்பால் மூன்றெருமைப்பால்' எனப் பாடல் தொடர்ந்துகொண்டே செல்கிறது. அதே பிள்ளையாரை வேறுவிதமாகவும் பாடுகிறார்கள்.

பிள்ளையார் பிள்ளையார்
தேவிந்திர பிள்ளையார்
பிள்ளையார் கூடாரம்
என்ன கொண்டு மேயலாம்
என்ன கொண்டு மேயலாம்
எது கொண்டு மேயலாம்.

ஒரு சாரார் இப்படிப் பாட, மறு சாரார் பதில்பாட்டு பாடுகிறார்கள்:

துத்திப்பூ கொண்டு வந்து
சுத்தி சுத்தி மேயலாம்
ஆவாரம்பூ கொண்டு வந்து
தாவாரம் மேயலாம்
வாழைப்பூ கொண்டு வந்து
வடபுறமா மேயலாம்
ஓலைப்பூ கொண்டு வந்து
ஒருபுறமா மேயலாம்

அப்படி மேயும்போது கல்லால் கூரை வேயக்கூடாது. கனக்கும்! புல்லால் வேயக்கூடாது. பிரிந்துவிடும்! தட்டால் வேயக்கூடாது. சரிந்துவிடும் என்று எச்சரிக்கிறார் பிள்ளையார்.

கல்லால் போட்டாலும்
கனக்குதென்பார் பிள்ளையார்
தட்டாலே போட்டாலும்
சரியுதென்பார் பிள்ளையார்
பில்லாலே மேய்ஞ்சாலும்
பிரியுதென்பார் பிள்ளையார்.

பிள்ளையார் பாடல் முடிகிறது. மதுரை மீனாட்சி பந்தாட வருகிறார். இப்பாடல் சந்தம் வேறு.

ஒண்ணாந் தங்கச்சி மதுரை மீனாட்சி
ஓரடி பந்தெடுத்தாடவோ?
பந்து நடுங்கி கீழே விழுந்திட
தேரொரு பக்கம் சாயவோ?
சாய்ந்த தேரை நிமிர்த்தி முடிங்க
அக்கா தங்கச்சி நங்கைமாரே!
சாணிச்சட்டியும் தங்கநிறமாம்
தங்கச்சிக்கேத்த வெண்கலமாம்!

ரெண்டாந் தங்கச்சி மதுரை மீனாட்சி
ரெண்டடி பந்தெடுத்தாடவோ?
பந்து நடுங்கி கீழே விழுந்திட
தேரொருபக்கம் சாயவோ?
சாய்ந்த தேரை நிமிர்த்தி முடிங்க
அக்கா தங்கச்சி நங்கைமாரே!
சாணிச் சட்டியும் தங்க நிறமாம்
தங்கச்சிக்கேத்த வெங்கலமாம்!

இப்படியே மூணாந்தங்கச்சி, நாலாந்தங்கச்சி என்று தொடர்ந்து .பாடல் பாடப்படும். மீனாட்சியம்மை தேரில் ஊர்வலம் வருகிறாள்! அவள் பந்தாடும் காட்சி தேர் தூக்கும் ஆட்களால் நடத்திக் காட்டப்படுகிறது. பந்தைப் பிடிக்கும்

தேர் தூக்கிகள் தேரைச் சாய்க்கிறார்கள். "தேரைச் சாய்க்காதீர்கள் தேரை நிமிர்த்திச் செல்லுங்கள்" என்று சொல்வது போல இருக்கிறது இப்பாடல். திருமாலின் தங்கச்சி ஆகிய மீனாட்சி சாணி தெளிப்பதும் தங்க நிற வெண்கலப் பாத்திரத்தில்தான்! மீனாட்சியையும் சாணி தெளிக்கும் தம் தோழியாகக் கருதுகிறார்கள் கிராமப்புற பெண்கள்.

கடவுளுக்கு நகை அணிவித்து மகிழ்கிறார்கள் கிராமப்புறப் பெண்கள்: நம்மைப் போலவே கடவுளைப் படைத்தோம்! நாம் அணியும் நகைகள்தானே கடவுளும் அணிய வேண்டும்.

காலு செயினாம் காலு செயினாம்
சாமி நாதர் காலு செயினாம்!
சப்பாணி நாதர் காலு செயினாம்!
குருகுரு நாதர் காலு செயினாம்
கும்மாட்டி நாதர் காலு செயினாம்!
வேலமயிலே! தேவ மயிலே!
தேகம் எல்லாம் சந்தனமாம்

மூக்குப் பொட்டாம் மூக்குப் பொட்டாம்!
சாமி நாதர் மூக்குப் பொட்டாம்
சப்பாணி நாதர் மூக்குப் பொட்டாம்
குருகுரு நாதர் மூக்குப் பொட்டாம்
கும்மாட்டி நாதர் மூக்குப் பொட்டாம்
வேல மயிலே ஏல மயிலே
தேகம் எல்லாம் சந்தனமாம்

தொடர்ந்து காலு கொலுசு, கை வளையலு, காது தோடு போன்ற பல நகைகள் வரிசையிலும் இப்பாடல் தொடரும். கடவுள் பெயரால் பெண்கள் அணியும் அத்தனை நகைகளும் நினைவுகூரப்படுகின்றன. ஆனால் கணவன்மார்கள்தான் திண்டாடுவார்கள்.

தேன் வடியும் தென்பாங்கு

தென்பாங்கு என்பது பெரும்பாலும் ஆடுமாடு மேய்க்கும் போது நாட்டுப்புற இளைஞர்கள் பாடுவதாக அமைந்துள்ளது. அவர்கள் பாட்டின் பருப்பொருள் பெரும்பாலும் பால்உணர்வை ஒட்டியதாகவே உள்ளது. கல்லிலும் கரட்டிலும ஏறி நாள் முழுவதும் மாடு மேய்க்கும் அவர்களுக்கு, தனிமைத்துயரை நீக்க, பாடவேண்டியதாகிறது. சிலசமயம் தன்னுடன் ஆடுமாடு மேய்க்கும் பெண்ணைப் பாடுபொருளாக்கியும் பாடல் அமையும்.

இயற்கைச் சூழலில், உச்ச ஒலியில் அவர்கள் பாடும் பாட்டுகள், குன்றுகளில் மோதி, எதிரொலிக்கும்போது, கேட்போர் காதுகளுக்கு, இனிமை சேர்க்கின்றன. கருத்தும் மகிழ்ச்சித் துள்ளலோடு வருகிறது. இதோ ஒருவன், மாடுமேய்ப்பவன் பாடுகிறான்! கேளுங்கள்.

மாமரத்துப் பக்கத்திலே - புள்ளே கிளியம்மா
மானுக்குத்தான் கண்ணிவச்சேன் - போடு கிண்ணாக்கு
மானுபடும் கண்ணியிலே - புள்ள கிளியம்மா
மாமன் மகள் பட்டாளடி - போடு கிண்ணாக்கு

கருங்கரட்டு ஓரத்திலே - புள்ள கிளியம்மா
காடைக்கு நான் கண்ணிவச்சேன் - போடு கிண்ணாக்கு
காடைபடும் கண்ணியிலே - புள்ள கிளியம்மா
கவுண்டன் மகள் பட்டாளடி - போடு கிண்ணாக்கு

இவன் மாமரத்துப் பக்கத்தில், மானுக்குக் கண்ணி வைத்தான்! கருங்கரட்டுப் பக்கத்தில் காடைக்கு கண்ணி வைத்தான்! அவன் உண்மையில் கண்ணி வைத்தது யாருக்கு? கவுண்டன் மகளான, தன் மாமன் மகளுக்குத்தான்! அவன் வைத்த கண்ணியிலே அவள் பட்டுவிட்டாள்! அவளைத்தான் அவன் காடை என்றும் மான் என்றும் வருணிக்கிறான்.

கண்ணியில் கிடைத்த மாமன் மகளுக்காக அவன் எவ்வளவு காலம் காத்திருந்தான் என்பதை அவளுக்கும் கூறுகிறான்:

கொல்லிமலை அடிவாரத்தே - தில்லாலே லேலம்
கோழிக்கு நான் கண்ணி வச்சேன் தில்லாலே லேலம்
கொடியோரம் காத்திருந்தேன் தில்லாலே லேலம்
குந்தி குந்தி அலுத்தனடி தில்லாலே லேலம்
குந்திருந்த நேரத்திலே தில்லாலே லேலம்
கொன்னவாச்சி தோனுனாளே தில்லாலே லேலம்
கொன்னவாச்சை கண்டொடனே - தில்லாலே லேலம்
குதிச்சி நானும் ஓடினேனே - தில்லாலே லேலம்

இவன் தன் மாமன் மகளுக்காக மட்டுமே காத்திருந்தான். வேறு எந்த கொன்னவாச்சிக்காகவும் அல்ல. அவள் இவனை மயக்கப் பார்த்தாலும் இயலாது. குதித்து ஓடி விடுவான்!

மாமன் மகள் வரவேண்டிய இடத்தில் கொன்னவாச்சி வந்தாளே அவள் எப்படிப்பட்டவள்:

ரோட்டோரம் வீட்டுக்காரி - தில்லாலங்கடி லேலம்
ரோசாப்பூக் கொண்டைக்காரி - தில்லாலங்கடி லேலம்
மூணு மயித்துக்காரி - தில்லாலங்கடி லேலம்
முக்காப்படி ஈறுக்காரி - தில்லாலங்கடி லேலம்
காதோரம் கொண்டைக்காரி - தில்லாலங்கடி லேலம்
காசு வாங்கக் கெட்டிக்காரி - தில்லாலங்கடி லேலம்.

அவளைத் தன் மாமன் மகளிடம் பழிக்கிறான். சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவனிடம், இலந்தைப் பழம் பறித்துத் தரும்படி வேண்டுகிறாள். 'கிட்டரிய காதற் கிழத்தி இடும்' வேலை, விட்டெறிந்த கல்லைப் போல் மேலேறிப் பாயாதோ! அவள் கேட்கிறாள்:

ஏரிக்கரை மேலே தில்லால்லங்கடி லேலம்
இலந்தைப் ழுத்திருக்கும் தில்லாலங்கடி லேலம்
இளைய கொழுந்தனாரே தில்லாலங்குடி லேலம்
ஏறி உலுக்குங்கடா தில்லாலங்கடி லேலம்.

இவன் மரத்தின் மேலே ஏறி உலுக்கிவிட்டான். அவன் உலுக்கிவிட்டாலும் அத்தனையையும் அவள் பொறுக்கி எடுக்க இயலவில்லை. அவள் கூறுகிறாள்:

பாசாங்கு கன்னியரே - தில்லாலங்கடி லேலம்
பாத்துப் பொறுக்குங்கடி தில்லாலங்கடி லேலம்
ஒரு பழம் தப்புச்சுண்ணா தில்லாலங்கடி லேலம்
ஒதைப்பேனடி இடுப்பு மேலே தில்லாலங்கடி லேலம்.

அவன் 'இடுப்பு மேலே உதைப்பேன்' என்று சிரித்துக் கொண்டே சொன்னாலும் கூட அவளுக்கு ஊடல் வராதா என்ன? சிறுசினத்தால் அவள் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லுகிறாள். அவன் ஓடிப்போய்த் தடுத்து நிறுத்திப் பாடுகிறான்:

மீசை துடிக்குதடி - தில்லாலங்கடி லேலம்
மேலே போற பொண்ணுமேலே தில்லாலங்கிடி லேலம்
ஆசை துடிக்குதடி தில்லாலங்கிடி லேலம்
அவரைக்காய் பந்தலடி தில்லாலங்கடி லேலம்.

அவள் கோபம் தணியவில்லை. அவன் தன் மீது நிலையான அன்பு கொள்ளவில்லை என்று வருந்துகிறாள். அவள் சொல்கிறாள்:

நெல்லிமரம் நிழலாகுமா - மச்சான்
நெட்டை சம்பா சோறாகுமா?
கொள்ளு நல்ல பருப்பாகுமா - மச்சான்
குமரிப்பொண்ணு உறவாகுமா?

அவரை பருப்பாகுமா - இந்த
அழகு பொண்ணு உறவாகுமா?

இவை எல்லாம் சிறந்தவை அல்ல. ஆகவே உன்னைச் சிறந்தவனாக நம்ப முடியாது. நீ போகலாம் என்று கூறுகிறாள். ஆயினும் எப்படியும் அவள் ஊடலைத் தீர்த்துவிட எண்ணுகிறான் இளைஞன்:

பச்சைக்கடலை தாரேன் - பிள்ளை கிளியம்மா
பத்துமுடி தேங்கா தாரேன் - போடு கிண்ணாக்கு
ஒரு குண்டு வெல்லம் தாரேன் - பிள்ளை கிளியம்மா
ஓடிவாடி என் பொறனே - போடு கிண்ணாக்கு

அப்படியும் அவன்பின் வரவில்லை. 'பிகு' செய்கிறாள். ஏதாவது வேடிக்கை சொல்லியாகிலும் சிரிக்கவைக்க எண்ணுகிறான்.

வேப்பமரத்தைப்பாரு - புள்ள கிளியம்மா
மேகோக போறவாதைப்பாரு - போடு கிண்ணாக்கு
சோர்வா மலையைப்பாரு - புள்ளே கிளியம்மா
செவத்த புள்ள முலையைப்பாரு - போடு கிண்ணாக்கு.

துத்திப்பூ பட்டுடுத்தி - புள்ளே கிளியம்மா
தொலைதூரம் போற பொண்ணே - போடு கிண்ணாக்கு
தொடையழகப் பார்ப்பமுன்னு - புள்ளே கிளியம்மா
விடியளவும் தூக்கமில்லே போடு கிண்ணாக்கு
நெல்லிக்கா பட்டுடுத்தி - புள்ளே கிளியம்மா
நேர் கிழக்கே போறபொண்ணே - போடு கிண்ணாக்கு
நேரான குத்துமொலை - புள்ளே கிளியம்மா
நெருங்குமா என் கையாலே - போடு கிண்ணாக்கு
அஞ்சிவிரல் மோதிரமாம் - புள்ளகிளியம்மா
அறியாப் பொண்ணு ஓசனையாம் - போடுகிண்ணாக்கு

ஆசை வச்சேன் உன்மேலேதான் - புள்ள கிளியம்மா
அய்யபையன் தோட்டத்திலே போடு கிண்ணாக்கு

உன் மீது ஆசை வைத்துவிட்டேன்! என்னால் மறக்க இயலாது என்று இவ்வளவும் கூறிய பின் அவள் சற்று மனம் மாறுகிறாள். அவள் பேசுகிறாள்.

குண்டு குண்டு பொட்டுக்காரா
குதிரைமேலே போறசாமி
குந்தி ஒரு முத்தம் தந்தா
குதிரை மேலே நான் வருவேன்!

என்று முத்தம் கேட்கிறாள். அவன் எதிர்பார்த்த இனிமை கிடைத்ததென்று முத்தம் கொடுத்துவிட்டான். மேலும் பாடுகிறாள்:

வட்ட வட்டப் பொட்டுக்காரா
வடக்கே போற வண்டிக்காரா
நீ கொடுத்த முத்தத்துக்கு
நிக்கட்டுமா போகட்டுமா?

என்று சொல்வதன் மூலம் அவனுடன் அவள் வண்டி ஏறிச் செல்ல விரும்புகிறாள். அவளை அவன் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டான். வண்டி ஓடுகிறது. அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டு என்ன வாங்கித் தருவதாகக் கூறுகிறான் கேளுங்கள்:

கொள்ளு புடிச்ச வண்டி - லேலங்கிடி லேலம்
கொளத்தூரு போறவண்டி -லேலங்கிடி லேலம்
கொள்ளுவிலை ஆகட்டுண்டி லேலங்கிடிலேலம்
கொப்பு பண்ணி போடுவண்டி லேலங்கிடிலேலம்.

நெல்லு புடிச்சவண்டி - லேலங்கிடி லேலம்.
நீலமலை போகும் வண்டி - லேலங்கிடி லேலம்.

நெல்லு விலை ஆகட்டுண்டி லேலங்கிடி லேலம்.
நெளி பண்ணி போடறண்டி லேலங்கிடி லேலம்.

கொப்பும் நெளியும் செய்து போடுவதாகக் கூறுகிறான். இளைஞன். கொள்ளும் நெல்லும் விற்பனையாக வேண்டும். கொளத்தூர் சந்தையில் கொள்ளும், நீலமலைச் சந்தையில் நெல்லும் விற்பது வழக்கம் போலும். இருவரும் வண்டியில் ஏறிக்கொண்டு மகிழ்ச்சிப் பாடல் பாடுகிறார்கள்.

கோபுரத்துக்கு மேற்புறமா
என்ன என்ன பார்க்கலாம்
செண்டுமல்லியும் செவ்வரளியும்
சேர்ந்த கும்பலும் பார்க்கலாம்.

தேனடைச் சிதறல்கள்

சங்கத்து அகத்துறைப் பாடல்களில் உடன்போக்கு என்ற ஒரு துறை உண்டு. தலைவனுடன் தலைவி, பெற்றோர் உற்றார் யாரையும் கேட்காமல், அவர்களுக்குத் தெரியாமல் சென்று விடுவாள். தலைவன் ஊருக்குச் சென்று அங்கு திருமணம் முடித்துக் கொள்வார்கள். தலைவியின் செவிலி அல்லது பெற்ற நற்றாய் எதிர்வரும் வழிப்போக்கர்களிடம் "ஓர் இளைஞனும் ஓர் இளம் பெண்ணும் சென்றதைப் பார்த்தீர்களா?" என்று வினவுவார்கள். அதேபோல் நாட்டுப் பாடலிலும், ஒரு தலைவி ஒரு தலைவனுடன் உடன்போக்கில் சென்று விட்டாள்! தாய் அவளிடம் பழகிய தோழிமார்களிடம் 'என் மகளைப் பார்த்தீர்களா?' என்று கேட்கிறாள்.

தொட்டிய மகளே நீ
துரை மகளே ராமாயி
பட்டிக்குப் போனவளைப்
பார்த்ததுண்டா ராமாயி !

பாலான பொன்மேனி
பருவமுள்ள அவள் மேனி
நூலான பொன்மேனி
நோவாதோ? பார்த்தீங்களா?

இராமாயி என்ற அந்தத் தோழி பார்க்கவில்லை போலும். மேலும் தாய் தேடுகிறாள். சில பெண்கள் எதிர்திசையில் இருந்து வருகிறார்கள் அவர்களைப் பார்த்துக் கேட்கிறாள் தாய்:

பொண்டுங்களா பொண்டுங்களா
அச்சான பொண்டுங்களா
மின்னல் கொடி ஒண்ணும்
பஞ்சவர்ணக் கிளி ஒண்ணும்
பஞ்சணை மெத்தையிலே
பார்த்ததுண்டா பொண்டுங்களா!

தலைவியின் தாய், வழியில் செல்லும், 'அழகான பொண்டுங்களா அச்சான பொண்டுங்களா' என்று அழைத்துக் கேட்கிறாள். அப்படி அழைத்தால்தானே நின்று பதில் சொல்வார்கள். தலைவனை மின்னல் கொடி என்றும், தலைவியை பஞ்சவர்ணக்கிளி என்றும் வருணிக்கிறாள் போலும். 'பஞ்சணை மெத்தையிலே' என்றது அவர்கள் இணைந்து சென்ற நெருக்கத்தைக் கூறியதாய் இருக்கும். சிலர் தாங்கள் பார்த்ததாகக் கூறுகிறார்கள். அதனைக் குறிப்பாகத்தான் கண்டுபிடிக்க முடிகிறது.

சோளக்கட்டு மூலையிலே-மணித்தில்லாலே
சோடிப்புறா ரெண்டு மேயும்-மணித்தில்லாலே
கம்பங்காட்டு மூலையிலே -மணித்தில்லாலே
கானப்புறா ரெண்டு மேயும்- மணித்தில்லாலே
மலைகண்ட பக்கமெல்லாம்- மணித்தில்லாலே
மணிப்புறா மேயுதம்மா-மணித்தில்லாலே

சோளக்காட்டு மூலையிலும் கம்பங்காட்டு மூலையிலும், அந்தத் தலைவனும், தலைவியும் இருந்ததைப் பார்த்ததாகக் கூறுகிறார்கள் பெண்கள். அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள் என்பதையும் உணர்த்துகிறார்கள்.

கொட்டத்தண்டு வெட்டப்போயி-மணித்தில்லாலே
கட்டுனான்டி பொட்டுத்தாலி-மணித்தில்லாலே
மஞ்சமரம் பார்க்கப்போயி-மணித்தில்லாலே
மாட்டுறானே மஞ்சத்தாலி-மணித்தில்லாலே

இவற்றைக் கேட்ட தாயும் செவிலித்தாயும் பதைபதைக்கிறார்கள். நீங்கள் உணர்த்துகிற இடம் எங்கே உள்ளது என்று கேட்கிறார்கள். அதற்கு அந்தப் பெண்கள் பதில் சொல்கிறார்கள்.

வாலுவாலா காய்காய்க்கும்-மணித்தில்லாலே
வாழைமரம் அடையாளம்-மணித்தில்லாலே
குண்டுகுண்டா பூபூக்கும்-மணித்தில்லாலே
கொன்னை மரம் அடையாளம்-மணித்தில்லாலே

சரியான பதிலைச் சொல்கின்ற அவர்கள் தலைவன் தலைவிக்கு இடையூறு வந்துவிடக்கூடாது என்று கருதினார்களோ என்னவோ அவர்கள் சொல்லும் அடையாளங்களைக் குழப்புகிறார்கள். வேடிக்கையாகச் சொன்னதுபோல் செய்து விடுகிறார்கள்.

செத்தாடு பால்சுரக்கும்-மணித்தில்லாலே
செனையாடு பால்கறக்கும்-மணித்தில்லாலே

என்று கூறி மழுப்புகிறார்கள். மழுப்பல் மேலும் மிகுகிறது.

ஓடு போட்ட வில்லை வீடு-மணித்தில்லாலே
ஊட்டுக்காரன் மொள்ளமாரி-மணித்தில்லாலே

மொள்ளமாரி கொண்டையிலே -மணித்தில்லாலே
முழுநீளப் பூவிருக்கும்-மணித்தில்லாலே..

இந்த அடையாளங்களை வைத்துக் கொண்டு எப்படித் தேடுவது? செவிலியும் தாயும் தேடிக் கண்டு பிடிக்க முடியாமலே திரும்பியிருப்பார்கள்.

சில சிதறல் பாடல்களைக் கீழே காணலாம். புல்லால் கூரை வேய்ந்த குச்சு வீட்டில், அதன் நடுப்பகுதியில் ஊறி மழையால் சொட்டுசொட்டென ஒழுகும் தண்ணீர் இயற்கையாகப் பாடப்படுகிறது.

மத்தாங்கிப் புல்லறுத்து
மலை மேலே குச்சி கட்டி
குச்சி மேலே ஒழுகுந்தண்ணீ-உன்
கொண்டை மேலே ஒழுகுதடி

வெள்ளைக்காரன் செய்த வண்டிகள் நம் நாட்டுக்கு வந்த புதிதில் எழுந்த பாடல்:

ஆறுவண்டி நூறுசத்தம்-மணித்தில்லாலே
அம்பத்தாறு கட்டை வண்டி-மணித்தில்லாலே
வெள்ளைக்காரன் செய்த வண்டி-மணித்தில்லாலே
வேகம் பறக்குதுபார்-மணித்தில்லாலே

இது வேகம் பறக்கும் மிதிவண்டியை, அல்லது பேருந்து வந்த புதிதில் அதனைப் பாடப்பட்டதாக இருக்கலாம்.

இன்னும் பருவம் வராத பெண்தான், பட்டணத்து ஆண்மகனைப் பறந்து மையல் கொண்டு பாடிய பாடலாகக் கருதத்தக்கது. இதோ கீழே.

பாம்பு சொரக்காயாம்-லேலங்கி லேலம்
பட்டணத்து மாம்பழமாம்-லேலங்கி லேலம்

பார்த்துப் பறிப்பமுன்னா-லேலங்கி லேலம்
பருவம் கொஞ்சம் பத்தலையே-லேலங்கி லேலம்.

குப்பை சொரக்காயாம்-லேலங்ககி லேலம்
கூடலூரு மாங்கனியாம் லேலங்கி லேலம்
வளைச்சிப் பறிப்பமுன்னா லேலங்கி லேலம்
வயசு கொஞ்சம் பத்தலையே -லேலங்கி லேலம்

அவன் ஒரு இயங்கி வண்டியில் வந்திருப்பான் போலும் அவள் பாடுகிறாள்:

வண்டிக்காரா வண்டிக்காரா-லேலங்கடி லேலம்
வடக்க போற வண்டிக்காரா-லேலங்கடி லேலம்
வளைஞ்சு ஒரு முத்தம் தந்தா-லேலங்கடி லேலம்
வண்டியிலே நான் வருவேன்-லேலங்கடி லேலம்

அவள் ஏமாந்து போய் வண்டிக்காரனுடன் போய் விடுவாளோ என்று அஞ்சிய ஒரு தாய் சொல்கிறாள். அவன் போச்சம்பள்ளிக் காரன், போச்சம்பள்ளி நல்ல ஊராக இருக்கலாம். இவன் குணம் உடன்போனால் ஏமாற்றி விடுவான் என்கிறாள்.

போச்சம்பள்ளிக்காரனோட - என் தங்கம்
போகுறது மோசமடி - என் தங்கம்

என்று சொல்லித் தடுக்கிறாள். அவள் நின்றாளா, ஏமாந்தாளா என்று தெரியவில்லை சில நாட்களாக, வெளியூருக்கு ஓடிவிட்ட அவளுடைய கணவன் வருகிறானாம். தனியாக வரவில்லை. யாரோ ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு வருகிறானாம். அதுவும் 'வம்புதாலி கட்டி' அழைத்து வருகிறானாம். அதைப் பார்த்தவள் அந்த மனைவியிடம் கூறுகிறாள்.

செம்பு செலை எழுதி லேலங்கடி லேலம்
செவத்தபுள்ளே பேரெழுதி லேலங்கடிலேலம்

வம்புல தாலிகட்டி லேலங்கடி லேலம்
வராண்டி உம்புருசன் லேலங்கடி லேலம்

எங்கிருந்து வருகிறானாம்? விறகு சுமை நிறைய எடுத்துச் செல்லும் வெள்ளி மலை, விளாரிமலை, செம்பி மலை, கொண்ட மலையில் இருந்து வருகிறானாம்.

வெள்ளிமலை விளாரி மலை லேலங்கடிலேலம்
வெறகொடிக்கும் செம்ப மலை லேலங்கடிலேலம்
பொல்லாத கொண்டமலை லேலங்கடிலேலம்
போகுமடி விறகு சுமை லேலங்கடி லேலம்.

இதைக் கேட்டதும் அந்த மனைவியின் மனம் துன்புறுகிறது.

ஆத்தோரம் பந்தல் போட்டு - லேலங்கடி லேலம்
அழகான ஊத்து வெட்டி லேலங்கடி லேலம்
ஊருகோலம் போகும்போது லேலங்கடிலேலம்
உருமுதடி ஊமை கேட்பின் லேலங்கடி லேலம்.

ராத்திரி சொன்னசொல் என்னவோ தெரியவில்லை. இவன் வேறு திருமணம் செய்து கொள்ளப் போவதை முன்பே அறிவித்தானோ என்னவோ? இவள் மனம் ரம்பம் போட்டு அறுக்கிறது.

ஆத்தோரம் ஊத்து வெட்டி - லேலங்கடி லேலம்
அதுல கொஞ்சம் பல் விளக்கி - லேலங்கடி லேலம்
ராத்திரி சொன்ன சொல்லு லேலங்கடி லேலம்
ரம்பம் போட்டு அறுக்குதடி லேலங்கடி லேலம்

இன்னொருவன் மாம்பழம் விற்கும் பெண் மீது ஆசைப்படுகிறான். அவன் பாட்டைக் கேட்போம்.

மங்கு மங்கு சீலைக்காரி - லேலங்கடி லேலம்
மாம்பழத்துக் கூடைக்காரி - லேலங்கடி லேலம்

மாம்பழத்திலே ஆசை இல்லை லேலங்கடி லேலம்
மார்மேலே ஆசையடி - லேலங்கடி லேலம்.

அவன் பாட்டுக்கு அவள் சொல்லும் பதில் சற்று சூடாகவே உள்ளது. சற்று அவையல் கிளவியாக உள்ளது.

சுண்டக்கா செடியழகா- லேலங்கடி லேலம்
சுடுகாட்டு மண்ணழகா - லேலங்கடி லேலம்
அண்டத்து மயிரழகா - லேலங்கடி லேலம்
அலசுமடா உன் தென்பாங்கே - லேலங்கடி லேலம்
சாமத்திலே துணி உடுத்தி - லேலங்கடி லேலம்
கக்கிலிச்சி தூமை தின்னு - லேலங்கடி லேலம்
களியத்தான் காலைத் தின்னு - லேலங்கடி லேலம்
சொல்லட்டுமா என் தென்பாங்கே! - லேலங்கடி லேலம்

அத்தோடு அவன் விடவும் இல்லை. விலகிப் போகவும் இல்லை. உறவுமுறை கொண்டாடுகிறான். அவளை அரளிப்பூ என்றும் வருணிக்கின்றான்.

கொளத்துலதான் - ஏலேல பொன்னம்மா -
கொத்தரளி
கொத்துக்கொத்தா - ஏலேல பொன்னம்மா -
பூத்திருக்கும்
கொழுந்தனாரு நான் - ஏலேல பொன்னம்மா -
பூசைசெய்ய
கொத்தரளி - ஏலேல பொன்னம்மா - பறிக்கலாமா?

அத்தனை திட்டு திட்டியவள் அவனை அரளி பறிக்க அனுமதித்தாளா இரக்கம் ஏற்பட்டதா என்று தெரியவில்லை. சேர்வராயன் மலை காப்பிக் கொட்டை பற்றியபாடலும் கத்தரிமலைச் சாரல் மக்களிடம் கிடைத்தது.

சேர்வா மலை ஏலேலோ காப்பிக் கொட்டை ஏலேலோ
சேலம் வந்து ஏலேலோ கூடை இறங்கும் - ஏலேலோ
சேலத்திலே ஏலேலோ சேர்ந்தொடனே - ஏலேலோ
படிப்படியா ஏலேலோ - விற்க வேணும் ஏலேலோ
சேலத்திலே ஏலேலோ - சேலை எடுத்து - ஏலேலோ
செவந்திப்பூ ஏலேலோ சாயங்காட்டி - ஏலேலோ
மதுரையிலே ஏலேலோ சீலை எடுத்து ஏலேலோ
மல்லிப்பூ ஏலேலோ சாயம் கட்டி -

காப்பிக் கொட்டை விற்று புடவை எடுத்தார்கள் போலும். புடவை எடுத்துப் பின் சாயம் கட்டும் வழக்கமும் இருந்தது போலும் - இன்னொருவன் சொல்கிறான்.

ஓட்டமும்தான் ஓடிப்பார்த்தேன்
ஓமலூரு தேரு பார்த்தேன்
நடையும்தான் நடந்து பார்த்தேன்
நாமக்கல்லு தேரு பார்த்தேன்

வட்ட வட்டப் பாறை பாரு
வாத்தியாரு வீட்டைப் பாரு
ஓமலூரு ரோட்டைப் பாரு
ஒசந்த பொன்னு ஒயிலைப் பாரு

செண்டு மல்லி கட்டை வெட்டி
திரும்புறாண்டி சேலம் சில்லா
கொட்டத் தண்டு வெட்டப் போயி
கட்டுனாண்டி பொட்டுத் தாலி

மேற்கண்ட பாடல்கள் துண்டுதுண்டாகக் கிடைத்தவை. தொடர்புபடுத்த இயலவில்லை என்றாலும் படித்துச் சுவைக்கத்தக்கன. சில பாடல்கள் ஒரே மாதிரி தொடங்கி மாறுபட்டு முடிவது உண்டு. பாலை மலைப் பாடல்கள் என்ற இவ்வாசிரியர் நூலில் முன்பே சொல்லப்பட்ட வரிகள்:

அடுக்கடுக்கா நெல்லஞ்சோறு
அழகான கோழிச்சாறு
மாப்பிள்ளைக்கு வேணுமின்னு
மறைக்குறாளாம் சாமத்திலே

இனி கீழே அடிகள் மாறுகின்றன. முன்பு மாமியார் கண்டாள். இதில் ஊட்டுக்காரனே காண்கின்றான்.

ஊட்டுக்காரன் கண்டுக்கிட்டான்
உள்ளுத்தாளு போட்டுக்கிட்டான்
காதை புடிச்சிக்கிட்டான்
கம்பை எடுத்துக்கிட்டான்

கம்பை எடுத்தவன் என்ன செய்திருப்பான். நன்றாக அடித்திருப்பான்!

இனி ஒரு கும்மி கேட்கலாம். சோளக்காட்டு மூலையிலே இரண்டு மணிப்புறாக்கள் சந்தித்து பேசுகின்றனவாம்!

சோளக்காட்டு மூலையிலே- மணித்தில்லாலே
சோடிப்புறா ரெண்டு மேயும் - மணித்தில்லாலே
மலைகண்ட பக்கமெல்லாம் - மணித்தில்லாலே
அழகான மணிப்புறா - மணித்தில்லாலே
ஆவாரங்காட்டுக்குள்ளே - மணித்தில்லாலே
ஆடுமேய்க்கும் கூளப் பொண்ணே - மணித்தில்லாலே
உன்னுடைய தகப்பனாரும் - மணித்தில்லாலே
என்னை வண்டி ஓட்டச் சொன்னான் -
மணித்தில்லாலே
நித்தம் நித்தம் நெல்லஞ்சோறு - மணித்தில்லாலே
நெய் வழியும் கோழிச்சாறு - மணித்தில்லாலே
கோழிக்குளம்பிலேதான் - மணித்தில்லாலே
கூட்டி வச்ச கைம்மருந்து - மணித்தில்லாலே

ஆவாரங்காட்டில் ஆடுமேய்ப்பவனிடம் இவன் சொல்கிறான். இவனை அவள் தகப்பன் வண்டி ஓட்டச் சொன்னானாம். எதற்கு வண்டி? இல்லற வண்டியா? அவன் அவளிடம் 'விடமுடியா விருப்பினன்' ஆகிவிட்டானாம். காரணம் அவள் கை மருந்தை கோழிக் குழம்பிலே வைத்துக் கொடுத்துவிட்டாளாம். அதாவது அவன் கொண்ட காதலை அவ்வாறு உணர்த்துகிறான்.

அவள் அவனுக்காக என்னென்ன செய்கிறாளாம் - விரதம் இருப்பாள் போலும்.

பள்ளங்கண்ட பக்கமெல்லாம் - மணித்தில்லாலே
பரக்கத் தலை முழுகி - மணித்தில்லாலே
குட்டை கண்ட பக்கமெல்லாம் - மணித்தில்லாலே
குளிரத் தலைமுழுகி - மணித்தில்லாலே

விரதம் இருந்தது மட்டுமல்ல,

ஆறுவண்டி நூறு சத்தம்
அம்பத்தாறு கட்டை வண்டி

யிலே சென்று வணங்குகிறான். இனி வருவதும் ஒரு கும்மிதான் அதில் செய்திகள் தொடர்பின்றி வருகின்றன என்றாலும் படிக்கத்தக்கது. அதனால் கீழே தருகிறேன்.

கரட்டோரம்தான் பட்டி போட்டு - ஏலேலக்கும்மி ஏலேலோ
கரடி நானும் சோடி போட்டு - ஏலேலக்கும்மி ஏலேலோ
கரடி நல்ல புண்ணியத்துக்கு - ஏலேலக்கும்மி ஏலேலோ
கணவனைத்தான் இன்னும் காணோம் - ஏலேலக்கும்மி ஏலேலோ

மலையோரந்தான் பட்டி போட்டு ஏலேலக்கும்மி ஏலேலோ
மானும் நானும் சோடி போட்டோம் - ஏலேலக்கும்மி ஏலேலோ
மானு நல்ல புண்ணியத்துக்கு - ஏலேலக்கும்மி ஏலேலோ

மன்னவனை இன்னும் காணோம் - ஏலேலக்கும்மி
ஏலேலோ

ஆத்தோரம்தான் ஊத்து வெட்டி - ஏலேலக்கும்மி
ஏலேலோ

மாமரத்தை ஏத்தம் வச்சோம் - ஏலேலக்கும்மி
ஏலேலோ

மாமன் மகன் இறைக்கும் தண்ணி - ஏலேலக்கும்மி
ஏலேலோ

மாம்பழமாம் சக்கரையாம் - ஏலேலக்கும்மி ஏலேலோ

கரடியோடு சோடிபோட்டேன் - கணவனை இன்னும் காணோம், மானோடு சோடி போட்டேன் - மன்னவனை இன்னும் காணோம் என்பதனை கிராமியச் சூழல் புரிந்து கொண்டு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

காலை மரம் காலையிலே
பளபளவென்று பூத்திருக்கும்
பாவி மக கொண்டையிலே
பத்துவகை பூத்திருக்கும்

பச்சை வளையல் போட்டு
பாசிக்கீரை பறிக்கும் பொண்ணே
பச்சை வளையல் மின்ன
பாசிக்கீரை வாட்டமாச்சு

நீல வளையல் மின்ன
நெல்லு அறுக்கும் பொண்ணே
நீல வளையல் மின்ன
நெல்லு கதிர் வாட்டமாச்சு

பூஞ்செடிக்குத் தண்ணி கட்டி
பொண்ணு பொறந்திருக்கும்

பொண்ணு நல்லா வாட்டமில்லை
பூஞ்செடியும் வாட்டமாச்சு

முத்துக் கொடி பள்ளத்திலே
முத்தறுக்கும் சின்ன பொண்ணே
சத்தம் போட்டு நீ அழைச்சா
சாதம் கொண்டு நான் வருவேன்

பாவி மகள் கொண்டையிலே பத்து வகை பூத்திருந்தாலும் பாசிக்கீரையும் நெல் கதிரும் வாட்ட முறுகின்றன! பொண்ணுபொறந்திருக்க, பூஞ்செடியும் வாட்டமாச்சு என்ற தொடர் அதற்கு பதில் சொல்கிறது. பெண் பிறந்தால் தாயாகிய பூஞ்செடிக்கே வாட்டமோ என்னவோ?

ஒரு பெண் ஓடக்காரனைப் பார்த்து அந்தக் கரையில் என்னைக் கொண்டுபோய் விடு, பணம் தருகிறேன் என்கிறாள். அவன் கொண்டுபோய் விட மறுக்கிறான். அவளிடம் அவன் பணத்தை எதிர்பார்க்கவில்லை. வேறு எதையோ எதிர்பார்க்கிறான். பெண் சொல்கிறாள்:

பெண் ஒரு பானை பணமும் தாரேண்டா
அட ஓடக்கார ராமசாமி
ஓடத்தையும் தாட்ட மாட்டியா?

ஓடக்காரன் : ஒரு பானை பணம் வேண்டாண்டி
அடி அத்தை மகளே
அருமைக்காரி - பெருமைக்காரி
சூதுக்காரி -சொகுசுக்காரி
கொண்டைக்காரி - கொலுசுக்காரி
கொடி மல்லிகை சீலைக்காரி
ஓடத்தையும் தாட்ட மாட்டேண்டி

ரெண்டு பானை பணமும் தாரேன் என்று அவள் பழையபடி கேட்கிறாள். மீண்டும் அதே பதில் சொல்கிறான். பத்து பானை பணம் வரை சொல்கிறாள். அப்பொழுதும் அவன் ஒப்பவில்லை. பிறகு அந்த அத்தை மகள் என்ன தருகிறேன் என்று கூறினாளோ அவன் ஓடத்தைத் தாட்டினானோ அறியோம்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த நேரத்தில் பாடப்பட்ட நாட்டுப்புறக் கற்பனை கீழே வருகிறது. காந்திய சிந்தனை வெற்றி பெற்றது என்ற எண்ணமும் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருந்துள்ளது. வேறு நாட்டு நடப்பைப் பாடும்போதும் கீழ்க்கண்ட பல்லவி திரும்பத் திரும்ப வருகிறது.

சண்டை முடிஞ்சுதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி ஜெயமுங்கோ
கட்டடம் இடியுது ஊருலே - செருமனி
கப்பலும் முழுகுது நீருலே
சண்டை முடிஞ்சதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

உச்சிக் குடுமி தட்டி முடிஞ்ச
அக்காலமே போச்சி - இப்ப
கோனைக் கிராப்பும் குங்குமப் பொட்டும்
சுப்பா போடலாச்சு
சண்டை முடிஞ்சிதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

வட்டக் குடுமி மொட்டை அடிச்சிட்ட
காலமெல்லாம் போச்சே - இப்போ
'வா' ங்கிற பெண்களே குடியைக் கெடுக்கிற
வட்ட கிராப்புமாச்சு
சண்டை முடிஞ்சிதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

குச்சு வீடு கட்டி குடியிருக்கிற
அக்காலமே போச்சு - இப்ப
கூரை வீடு கட்டி கண்ணாடி பதிச்சி
கண்ணால் பார்க்கலாச்சி
சண்டை முடிஞ்சிதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

மண்ணுக்குடமெடுத்துத் தண்ணிக்குப் போகிற
அக்காலமே போச்சு - இப்ப
சாப்பு கடையிலே சருவம் எடுத்து
சைசா நடக்கலாச்சு
சுன்னாங் கடைக்குப் போயி கும்பா எடுத்து
கக்கத்தில் வைக்கலாச்சு
சண்டை முடிஞ்சிதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

கந்தைத துணியைக் கசக்கிக்கட்டின
காலமெல்லாம் போச்சு - இன்று
பட்டுப்புடவையும் புட்டா ரவிக்கையும்
கண்ணால் பார்க்கலாச்சு
சண்டை முடிஞ்சிதுங்கோ - மகாத்மா
ஜயக்கொடி செயமுங்கோ

காந்தியடிகள் தம் உயர்ந்த கொள்கையில் வெற்றி பெற்றமைக்கும் காலம் மாறிக்கொண்டு வந்தமைக்கும் அந்த நாட்டுப்புற மக்கள் உறவு கண்டார்கள் போலும். நமக்கு விடுதலை வந்த சில ஆண்டுகளில் நாம் பெரும் பஞ்சத்துக்கு ஆளானோம் அது நாட்டுப்புற மக்கள் பார்வையில் பாட்டாகிறது

பஞ்சம் வந்தது பஞ்சம் வந்தது - நாட்டுக்கு - பல
சரக்கு விக்கிற கடைக்குப் போனா
சில்லறை இல்லே நோட்டுக்கு

'வெங்காயம் படி ரெண்டணா
வீசைபுளி நாலணா
செங்கல் காட்டில் நாம் பண்ணா
சீமை எண்ணெய் வாங்ககூப்பனா?

ஊருல ரெண்டு கூப்பனுமாச்சு
ஊட்டுக்கு ரெண்டு மூட்டை எடுக்கவுமாச்சு
உளுத்த சோளத்தைப் போடவுமாச்சு
முறத்திலே குத்திப் புடைக்கவுமாச்சு

வீட்டுக்கு இரண்டு மூட்டையாகிலும், லெவி கொடுத்தே ஆக வேண்டும் என்ற நிலை - தானியம் விளையாவிட்டாலும் - இருந்ததுண்டு மண்ணெண்ணையை மாதம் கால் பாட்டில் வாங்க கூப்பனை வைத்துக்கொண்டு காத்திருந்த காலமும் உண்டு இப்பாடல்கள் வரலாற்றைக் கூறுகின்றன

நான் அறிந்த அனுபவத்தில் மேலே கண்ட பாடல்களை விளக்கியுள்ளேன். படிப்போர் தங்கள் அனுபவங்களையும் இணைத்து இப்பாடல்களைக் கற்பார்களாக.

8. தாலாட்டும் ஒப்பாரித் தாலாட்டும்

'கண்ணுக்குக் கண்ணுறங்கு
குயிலுறங்கு மயிலுறங்கு'

என்ற பாடல் ஒரு குடிசையில் இருந்து அலைஅலையாக வெளிப்பட்டு, எங்கள் காதுகளின் வழிச்சென்று, கருத்தில் நனைந்தது. நானும் நண்பர்களும் அப்படியே நின்றுவிட்டோம். குடிசைக்குள் சென்றோமானால் பாட்டு நின்றுவிடும். மெய்ம்மறந்து பாடும் தாயும்கூட புதிய ஆட்களைக் கண்டு திடுக்கிடக்கூடும் ஆகவே அப்படியே நின்று பாட்டைப் பதிவு செய்கிறோம்.

புடிச்சி விளையாட - என் கண்ணே
புள்ளிமான் கொண்டுவாரேன்
கட்டி விளையாட - என் கண்ணே
கவரிமான் கொண்டுவாரேன்
ஏறவானம் தூணெடுத்து -என் கண்ணே
இந்திர வண்ணத் தொட்டில்கட்டி
இந்திர வண்ணத் தொட்டிலிலே - என் கண்ணே
இருந்தாடும் பாலகியோ?

புள்ளிமானும் கவரிமானும் கொண்டுவந்து மகளுக்கு விளையாடக் கொடுக்கும் தாய், தன் மகளை இந்திர வண்ணத் தொட்டிலில் - அதாவது வானவில் போன்ற தொட்டிலில் துயில் செய்விக்க விழைகின்றாள். இனி மகளை அழகுபடுத்திப் பச்சை குத்திப் பெயர் வைப்பதைக் கூறுகிறாள். பெயர் வைக்கும்போது பச்சை குத்துவார்கள் போலும்.

நெத்தியிலே பச்சைகுத்தி - என் கண்ணே
நிலான்னு பேரு வச்சி
கக்கத்திலே பச்சை குத்தி - என் கண்ணே
கமலான்னு பேரு வச்சி
தங்கத்திலே ஆலாத்தி - என் கண்ணே
தலைச்சுட்டியை நான் எடுத்தேன்

வடக்கே மதுரையம்மா - என் கண்ணே
வாழைமரம் கூடாரம்
வாழைமரம் கூடாரம் - என் கண்ணே
வளைய கடை வேவாரம்.
வட்டிக்கடை செட்டிமன்னன் - என் கண்ணே
வளையல் விலை சொல்லுமின்னான்
வாங்கி அடுக்கிடுவான் - என் கண்ணே
வகு வரிசை செய்திடுவான்!

தெக்கே மதுரையம்மா - என் கண்ணே
தென் மதுரைப் பேட்டையம்மா
தெக்கே மதுரையிலே - என் கண்ணே
தென்னைமரம் கூடாரம்
தென்னை மரம் கூடாரம் - என் கண்ணே
செலம்புகடை வேவாரம்
தென்மதுரை வீதியிலே - என் கண்ணே
செலம்பு வாங்க உன்மாமன்
சேத்தி அடுக்கிடுவான் - என் கண்ணே
செரி வரிசை செய்திடுவான்.

மாமன் வளையல் வாங்கி அடுக்கிவைப்பான். சிலம்பு வாங்கிச் சேர்த்து வைப்பான். தன் உடன்பிறப்பை எண்ணும்போதே அவனுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. உடன் பிறப்பின் குழந்தைக்கு என்னென்ன கொண்டு வந்தேன்.

துள்ளி விளையாட - என் கண்ணே
புள்ளிமான் கொண்டு வந்தேன்
கொண்டாடக் குழலூத - என் கண்ணே
கொல்லிமலை சங்கோதி.
சங்கோ சரித்திரமாம் - என் கண்ணே
சரித்திரத்துக் கோபுரமாம்
கோபுரத்து உள்ளிருக்கும் - என் கண்ணே
குணமயிலே கண்ணுறங்கு

ஏற்கனவே புடிச்சி விளையாடிடப் புள்ளிமான் கொண்டு வந்திருந்தாலும், துள்ளி விளையாடவும் புள்ளிமான் கொண்டு வருகின்றான். மேற்கண்ட பாடல்களில் அந்தாதித் தொடையான ஈற்றுச் சொல்லாக வைத்துப் பாடும் முறையைக் காண முடிகிறது. கொல்லிமலை சங்கோதி என முடிந்து சங்கோ சமுத்திரமாம் எனத் தொடங்கும் முறையைக் காண்க. அதுபோலவே பிறவும் மேலும் படியுங்கள்:

ஆரடிச்சி நீயழுதாய் - என் கண்ணே
அடிச்சாரைச் சொல்லியழு
பாட்டன் அடிச்சாரோ - என் கண்ணே
பஞ்சுனைக்கும் கோலாலே.

பாட்டி அடிச்சாளோ - என் கண்ணே
பல்லாங்குழிக் கல்லாலே
அத்தை அடிச்சாளோ - என் கண்ணே
அரளிப்பூச் செண்டாலே

மாமன் அடிச்சாரோ - என் கண்ணே
மல்லிகைப்பூச் செண்டாலே
ஆரடிச்சி நீயழுதாய் - என் கண்ணே
அடிச்சாரைச் சொல்லி அழு

இங்கு சமுதாய உறவுப் பிரச்சினையை, நாம் சற்று ஊன்றிக் கவனித்தால், ஒரு மெல்லிய, ஆனால் ஆழமான கருத்து நம்மை ஆட்கொள்கிறது. பாட்டன் அடிப்பது பஞ்சுடைக்கும் கோலால் - பாட்டி அடிப்பது பல்லாங்குழிக் கல்லால் - இவை இரண்டுமே வலிக்கும் - அந்தத் தாயின் மாமனார் மாமியார் அல்லவா அவர்கள் - ஆகவே அடித்திருப்பார்கள் என்று அவள் சொல்கிறாள். அவளது இதய நெருடல் வெளிப்படுகிறது.

அடுத்து, அத்தை அடித்தாளானால் அவ்வளவு வலிக்காது. அது அரளிப்பூச் செண்டு, தாய்க்கு தன் நங்கை பிடத்தில் அவ்வளவு வெறுப்பில்லை என்றாலும் உறவுமுறைப்படி சற்று நெருடல்தானே. அதுவும் ஓரளவு வலிக்கும்.

தாயின் உடன்பிறப்பு அடித்தால் வலிக்கவே வலிக்காது. காரணம் அவர் அடிப்பது மல்லிகைப்பூச் செண்டால்! அதாவது செல்லமாகத்தான் அவர் அடிப்பார்.

மாமன் அடித்தாரோ - என் கண்ணே
மல்லிகைப்பூச் செண்டாலே
ஆரடிச்சி நீயழுதாய் - என் கண்ணே
அடிச்சாரைச் சொல்லி அழு.
அடிச்சாரைச் சொல்லியழு - என் கண்ணே
ஆக்கினைகள் செய்திடலாம்.

என்று கேட்கிறாள்.

இனி, தான் பிறந்த செல்வச் சூழலை வியந்து போற்றுகிறாள். தன் அண்ணன் தம்பிகள் சிறப்பினை இதனால் கூறுகிறாள்.

பால் குடிக்க வெள்ளிக் கிண்ணம் - என் கண்ணே
பழம் பறிக்கத் தங்க ரதம்

நெய் வார்க்கும் சங்கு அல்லோ - என் கண்ணே
நிழல் பார்க்கும் கண்ணாடி

அத்தை மவன் ஆச்சாரி - என் கண்ணே
சேர்த்தினான் பொன்தூரி
பொன்தூரி விலை மதிக்க - என் கண்ணே
புண்ணியராம் உன் மாமன்

சேலத்துச் சந்தையிலே - என் கண்ணே
சின்ன குண்டா விக்குதுன்னு
சின்னகுண்டா விலைமதிக்க - என் கண்ணே
சேவகராம் உன் மாமன்.

பட்டணத்துச் சந்தையிலே - என் கண்ணே
பட்டுக்குல்லா விக்குதுன்னு
பட்டுக்குல்லா விலைமதிக்க - என் கண்ணே
பத்துப் பேரு தாய்மாமன்.

தாய்மாமன்மார்கள் குழந்தைக்கு சங்கு, கண்ணாடி, ஊஞ்சல், சின்னக்குண்டா, பட்டுக்குல்லா எல்லாம் வாங்கித் தருவார்கள். நீ ஏன் அழுவேண்டும். உனக்குக் குருவிப் பிடித்தாட்ட வேண்டுமானாலும், பிடித்துத் தருவார்களே!

சிட்டு பறக்குதய்யா - என் கண்ணே
சின்ன மலை ஓரத்திலே
சிட்டைப் பிடிச்சாட்ட - என் கண்ணே
சேவகராம் உன் மாமன்.

பச்சி பறக்குதையா - என் கண்ணே
பாலமலை ஓரத்திலே
பச்சி புடிச்சிட்டா - என் கண்ணே
பாண்டியராம் உன் மாமன் .

கொளத்தூரு சந்தையிலே - என் கண்ணே
காதோலை விக்குதுன்னு
காதோலை வாங்கிவர - என் கண்ணே
கண்ணியராம் உன் மாமன்

மாமன் தன் மருமகனுக்கு, சிட்டுக்குருவி பிடித்துத் தருவது மட்டுமல்ல. பச்சி (பக்ஷி பறவை) புடிச்சாட்டுவார் - காதோலை தங்கத்தால் வாங்கித்தருவார்.

தன் மகன் எவ்வளவு செல்வச் சிறப்பில் பிறந்துள்ளான் என்பதனை அந்தத் தாய் வருணிக்கிறாள்:

எட்டுக்கட்டு மண்டபமாம் - என் கண்ணே
எறும்பேறா மாளிகையாம்.
பத்துக்கட்டு மண்டபமாம் - என் கண்ணே
பாம்பேறா மண்டபமாம்.

இத்தகைய மண்டபத்தில் பிறந்துள்ள உனக்கு பசும்பால் கொண்டு வந்து தருவேன். நன்றாக உறங்கு என்கிறாள்.

பாங்காய் உறங்கு கண்ணா - உனக்குப்
பசுமாட்டுப் பால் தாரேன்.

தன் கணவன் மீது கோபம் கொண்ட மனைவி, அவனது நடத்தை சரியின்மையாலும், அவனை, இவளது அண்ணன் தம்பிகள் பல இக்கட்டுகளில் இருந்து காப்பாற்றி விட்டதையும், பாடுகிறாள். குழந்தையிடம் சொல்லக்கூடாதவைதான். என்றாலும் மன இறுக்கம் அவற்றை வெளிக்கொணர்கின்றன.

மானா மதுரையிலே - என் கண்ணே
மாடு விக்கும் சந்தையிலே
மாடுவிலை கேட்டு - அங்கே
மாட்டிக்கிட்டான் உன் தகப்பன்

மாடுவிலை ஞாயம் தீர்க்க - என் கண்ணே
மகராசர் உன் மாமன்.

இங்கே 'மாமன்' என்ற இடத்தில் 'தகப்பன்' என்ற சொல்லையும் 'தகப்பன்' என்ற இடத்தில் 'மாமன்' என்ற சொல்லையும் அந்தத் தாய் தன் உறவுமுறைகளின் விருப்புவெறுப்புக்கேற்பப் பாடுகிறாள். கீழே காணும் பாடல்களும் அவற்றையே கூறுகின்றன.

கூனார் குறிஞ்சியிலே - என் கண்ணே
குதிரை விற்கும் சந்தையிலே
குதிரையைத் திருடிவிட்டு -அங்கே
குத்துப்பட்டார் உன் தகப்பன்
குதிரை நாயம் பேசவந்த - என் கண்ணே
குறுக்களவர் உன் மாமன்

சோமாரச் சந்தையிலே - என் கண்ணே
சோளத்தட்டு நல்ல விலை
சொரணை கெட்ட உன் தகப்பன் -என் கண்ணே
சோளத்தட்டை முத்தமிட்டான்.

மானா மதுரையிலே -என் கண்ணே
மல்லிகைப்பூ நல்ல விலை
மானங்கெட்ட உன் தகப்பன் -என் கண்ணே
மல்லிப்பூ முத்தமிட்டான்.

தன் கணவன் - அதாவது குழந்தையின் தகப்பன் சோளத்தட்டையும், மல்லிப்பூவையும் முத்தமிட்டான் என்பதால் அவன் தன்னை விட்டுத் தவறான, நடத்தைக்குச் சென்றுவிட்டான், பிற பெண்களை அவாவுகிறான் என்பதும் சிந்தித்தால் புரிகிறது.

குழந்தை நடைபயிலும் பருவமாக இருந்தால், தாய்பிற யாவற்றையும் மறந்து, குழந்தை நடந்தால் அதற்குக் கால் வலிக்குமே என்று வருந்துகிறாள்.

கரட்டோரம் வரிசையிலே - என் கண்ணே
கவரிமான் விற்குதென்பார்
கவரிமான் புடிச்சாட்ட - என் கண்ணே
கால்கள் ரெண்டும் நோகாதோ

பூ பூத்த வரிசையிலே - என் கண்ணே
புள்ளிமான் மேயுதென்பார்
புள்ளிமான் புடிச்சாட்ட - என் கண்ணே
பொன்காலும் நோகாதோ

குடும்பத்திலுள்ள நன்மை தீமைகள், விருப்பு வெறுப்புகள், ஆசாபாசங்கள் அனைத்தும், நாட்டுப்பாடல்களில் அது எந்தப்பாடலானாலும், அவற்றில் கலந்து வந்துவிடுகின்றன. இவற்றை உணர்ந்து கேட்கும்பொழுதுதான் பாடுபவரின் அடிமன ஆழத்தின் ஓசைகள் புரியும்.

ஒப்பாரியே தாலாட்டு

சில சூழ்நிலைகளை ஒட்டி, ஒப்பாரியைத் தாலாட்டாக்கி விடுவதும் உண்டு.

ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர் நான்கைந்து குழந்தைகள். முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தாள். கடைசி குழந்தைக்கும் இன்னும் ஓராண்டு கூட நிறைய வில்லை. தாய் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுகிறாள். பெரிய பெண்தான், தன் இறுதி உடன்பிறப்பைப் பாதுகாக்க வேண்டும். தம்பியை, அல்லது தங்கையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறாள்:

தாயின் மடிமேலே - என் தம்பி
தங்கக்கிளி போலிருந்தோம்

தங்கக்கிளி மேலிருந்து - என் தம்பி
தழைத்து விளையாடனமே!

தாயும் பாவம் செஞ்சா - நாம
தங்கக்கிளி நாலுபேரும்
தவியாத் தவிக்கிறமே - என் தம்பி
தகடாப் பறக்கறமே.

எறவாளம் தூணெடுத்து - என் தங்கா
இந்திர வண்ணத் தொட்டில்கட்டி
இந்திர வண்ணத்தொட்டிலிலே - என் தம்பி
இருந்து விளையாடனமே!

ஈசுவரியா மடிமேலே - என் தங்கா
இஞ்சி கிளி நாலுபேரும்
இருந்து விளையாடனமே
ஈசுவரியா காலமானா - என் தங்கா
இண்டுகிளி ரெண்டுபேரும்
ஈயாப் பறக்கறமே என்தங்கா
இருந்து நாம் வாடறமே!

வாய்க்கால் மருக்கொழுந்து - என் தங்கா
வளர்ந்து இருந்தோமே!
வளர்த்தவ மடிமேலே - நாம நாலுபேரும்
வளைஞ்சி விளையாடனமே!
வளர்த்தவ இல்லாம - என் தங்கா
வருத்தப்பட்டு நிக்குறமே!

பாத்தி மருக்கொழுந்து - என் தம்பி
பாஞ்சி விளையாடனமே
பெத்தவளே தாயாரு - என் தம்பி
மடிஞ்சதால் வாடறமே!

துளிரு மருக்கொழுந்து - என் தம்பி
தூசு பட்டு நிக்கறமே!
துளுத்துக் கருவரமே - என் தம்பி
துக்கப்பட்டு நிக்கறமே!

உன்னிதமா தொட்டி கட்டி - என் தங்கா
ஊஞ்சலிலே தாலாட்டி
உன்னிதமாம் தொட்டிலிலே - என் தங்கா
ஒசைஞ்சாடும் பாலகியே

கல் பதிச்சி திண்ணையிலே - என் தம்பி
கால் மேலே கால் போட்டு
கால் மேலே கால்போட்டு - என் தம்பி
கடிதம் படிச்சிடடா
தாயார் கடிதமுன்னு - என் தம்பி
தந்தியின்னு சொல்லிடடா!

பிஞ்சு உள்ளங்களில் கூட கற்பனைகள் எப்படி ஊற்றெடுக்கின்றன. அதிலும் துக்கத்தில் ஊற்றெடுக்கும் கற்பனை எவ்வளவு சிறப்பானது என்று எண்ணும்போது வியப்பு உண்டாகிறது.

இனி, வெளியூர் பண்டிகைகளுக்குச் செல்லும் தாயார் உயிரோடு இருந்தால் என்னென்ன வாங்கி வருவாள். என்று அன்று அந்தப் பெண் பாடித் தாலாட்டுகிறாள் :

சேலத்து வீதியிலே - என் தங்கா
செல்லியம்மன் கோயிலிலே
செல்லி திங்கும் முட்டாயி - அங்கே
சேரு சேரா வித்துவரும்.
செல்லத்தாயிதானிருந்தா - என் கண்ணே
சீலையை விரிச்சிடுவா - என் தங்கா
சேர் கணக்கா வாங்கிடுவா!

செல்லத்தாயி இல்லாம - என் கண்ணே
சீரழிஞ்சி நிக்குறமே!

மாரியம்மள் கோயிலிலே - என் தங்கா
மயிலி திங்கும் முட்டாயி!
மயிலி திங்கும் முட்டாயி - என் தங்கா
மணிக்கணக்கா வித்துவரும்
வளர்த்தவ தானிருந்தா - என் தங்கா
மடியை விரியுமென்பா
மணிக்கணக்கா வாங்கிடுவா
வளத்தவ இல்லாம - என் தங்கா
மணிக்கணக்கா வாடறமே!

சென்னிமலைக் கந்தாண்ட - என் தங்கா
தேம்பாலு ஆடிவரும்
தேம்பாலும் சர்க்கரையும் - என் கண்ணே
தித்திப்பா வந்திறங்கும்
செல்லித்தாயி இல்லாம - என் தங்கா
தேம்பாலும் சர்க்கரையும்
தித்திப்பா இல்லையடி.

காசிக்கு அந்தாண்ட - என் தம்பி
கரும்பாலை ஆடி வரும்
கரும்புப்பால் சர்க்கரையும் - என் கண்ணே
கண்டிப்பா வந்திறங்கும்
பெத்தத்தாய் இல்லாம - என் கண்ணே
கரும்புப்பால் சர்க்கரையும்
காணாமல் போனதடி.

பொன்னுமலை போவோம் - என் தங்கா
பொன்னு செடி புடுங்கிடுவோம்

பொன்னு செடி புடுங்கி - என் தங்கா
பொன்னு நகை செய்திடுவோம்.

வருத்தம் தீரப் பாடிவிட்டு, சற்று மன அமைதி கொண்டு பாடுகிறாள் மூத்த பெண்.

பாலிலே ஓலைவெச்சி - என் தங்கா
பச்சரிசி சோறு பண்ணி
சாப்பிட்டு வெளியே வந்தா - என் தங்கா
சந்தனத்து வாசம் வரும்
சகதாரை கையலம்பி - என் தங்கா
சாஞ்சி படுத்திடுவோம்!

செடியிலே பூவெடுத்து - என் தங்கா
சென்டுசென்டா மாலைகட்டி
படியிலே பூவெடுத்து - என் தங்கா
படிப்படியா மாலைகட்டி
தேக்குமரத் திண்ணையிலே - என் தங்கா
சேர்ந்து விளையாடலாமே!

மேலே கண்டவற்றை ஒப்பாரிக்கும் பாடுகிறார்கள். தாலாட்டுக்கும் பாடுகிறார்கள். அவர்கள் மனநிலை எப்படி உள்ளதோ அப்படி மாறி விடுகின்றன. தாயை நினைத்து அழுது பாடி தன் தங்கையை அல்லது தம்பியைத் தூங்கவைக்கிறாள் அந்த சின்னப் பெண். தாயின் மறைவு அந்த சின்ன அக்காவுக்கு அழுத்தமாக நெஞ்சில் நிற்கிறது.

குழந்தைக்குப் பொருள் புரிகிறதோ இல்லையோ ஓசை தூங்க வைக்கிறது. இந்த சின்ன அக்காவுக்கும் மனச்சுமை இறங்குகிறது. நாட்டுப்புறங்களில் இன்னும் இந்நிலை இருந்து கொண்டுதான் உள்ளது.

9. துன்ப மாலைகள்

அவலச் சுவை நிரம்பிய துன்பமாலை, தாய், தந்தை, உடன்பிறப்பு, மகன், இப்படி பல்வேறு உற்றார் உறவினர்களுக் காகப் பாடப்படுகிறது. ஒப்பாரி என்று சொல்லும் இவை ஏராளமான கருத்துச் செறிவுடை யனவையாய் மட்டுமின்றி, சமுதாய அமைப்பு முறைகளையும், பொருளாதாரத் தாக்கங்களையும் கூறுவனவாய் உள்ளன. காலத்தால் பிறநாட்டுப் பாடல்கள் மறைய நேரினும், ஒப்பாரி வாழ்ந்து கொண்டிருக்கும்.

தாய்:

தாயார் இழப்புக்கு ஒரு மகள் அழுகிறாள்:

கல்லாத்து வாழை வெட்டி
என்னைப் பெத்தத் தாயாரு
கனியைப் பழுக்கவைச்சி
காத்து இருப்பாளே
நான் பொறந்த கோட்டையிலே
கன்னிக்கொரு ஆடும் வெட்டி
காத்து இருப்பாளே!

மகள் வருகிறாள் என்று கேட்டவுடனே அவள் என்னென்ன செய்கிறாள் என்பது மேலே சொல்லப் பட்டது. தாயார் வீடு போக மகள் செல்லும் சிறப்பு எப்படி?

இஞ்சி தலை முழுகி
எலுமிச்சைப் பட்டுடுத்தி
மயிந்தனை எடுத்திக்கிட்டு

மன்னவரைக் கூட்டிக்கிட்டு
புகுந்த நல்ல வீடிருந்து
மன்னவரும் தேவியும்
மகத்தூரி வண்டி கட்டி - நான்
மயிலம்மா போறதென்ன?

அப்படிப் போய் தாய்வீட்டில் தங்கி இருந்தால், எத்தனை நாட்களானாலும், மகிழ்ச்சியாக இருக்கலாம். தன் கணவன் எவ்வளவு சிறப்பாக உண்டு களித்து இருப்பான், அவன் உபசரிக்கப்படுவான் என்று பெருமைப் படுகிறாள்.

மைந்தனுக்கும் பால்காயும்
மன்னருக்கும் சாதமுண்டு
மன்னவரும் சாதம் தின்னு
மைந்தரும் பால் குடிச்சி
சாப்பிட்டு எழுந்திருச்சி
சந்தோச கை கழுவி

ஊருக்குப் [redacted] முடிவு செய்தால், தாய் சொல்வாள்.

உச்சிப் பொழுதென்பாள்
உன்னொரு நாள் தங்கல் என்பாள்

ஆனால் அவளது புகுந்தவீட்டு நிலத்தில் வேலையுண்டு. அதை மகள் தாயிடம் சொல்கிறாள்.

நான் புகுந்த ஓரியிலே
சோளவிதைப்புமுண்டு
சொகுசான வேலையம்மா!

சோளவிதைப்பு இருக்கிறதம்மா! அந்த வேலை எனக்கு மகிழ்ச்சி தரக் கூடியதம்மா என்று சொன்னவுடன் தாய்,

மல்லிகைப்பூ வாய்திறந்து
மகராசி போய் வா

என்று சொல்கிறாள்! மகள் பிறந்தவீடு விட்டு புகுந்தவீடு வருகிறாள்.

மன்னரும் தேவியும்
மைந்தனை எடுத்துக்கிட்டு
பொறந்த நாழி உட்டுட்டு
புகுந்த நாழி வந்ததென்ன?

வந்தவுடன் இவளது தாய்க்கு உடல்நிலை சரியில்லை என்று செய்தி வந்தது. அவள் சொல்கிறாள்.

மாயே சரஸ்வதியே
வாய்காத்த ஈஸ்வரியே
கார்த்தி இளநோம்பி
கருத்துவச்சி தீவாளி
வரிசை என்ன வாங்கி வந்தே!

இவற்றுக்கு நான் ஊருக்கு வந்தால், திரும்பிப் போகும்போது 'என்ன வாங்கி வந்தே' என்று புகுந்த வீட்டில் கேட்பார்கள் என்பதற்காக,

வண்ண கரைவேட்டி
மைந்தனுக்குக் கைக்காப்பு
மங்கை மனங்களிக்க
வாங்கியளிச்சியே!

என்று கூறி, தாயைப் பார்க்க ஓடுகிறாள். உங்க உடம்புக்கு என்ன அம்மா - மருந்து குடிக்கலையா? என்று கேட்கிறாள்

சோடா கலருக்கும்
சொகுசான மேனிக்கும்
தீம்பு வந்து ஆனதென்ன?

மன்னருக்கும் மக்களுக்கும் மருந்து விலை நூறிருக்கும்-

கல்லால கல்லாக்கி காசை மருந்தாக்கி
மருந்து குடிங்களம்மா
மாத்திரையை சாப்பிடுங்க!

என்று சொன்னபோது, நோயில் கிடக்கும் தாய் சொல்கிறாள்:

மருந்தும் வசியமில்ல
மாத்திரையும் தித்திப்பில்ல
விரலை புடிச்சது வெறும் நாடி பார்த்தது
விரலும் உணக்கை இல்லை
விரல் நாடி ஒப்பமில்லே
கண்மூடி கண் திறந்தா
கருவிழியும் பஞ்சடையும்
காடுவனம் சென்னின்னா
கண்ணகியோ என்ன செய்வே!

என்று வருத்தமுறுகிறாள் தாய்! சில நாட்கள் கழித்து மகள் தன் புகுந்த வீடு வருகிறாள்! தாய் இறந்து விடுகிறாள். ஆள் அனுப்பி வைக்கிறார்கள் அவளுக்கு.

ஆத்துக்கு அந்தாண்ட
ஆளுமே அனுப்பி வச்சார்
ஆனைக்கே தீனியில்லே - நான்
ஆனை மேலே ஏறிக்கொண்டேன்
ஆட்களும்தான் தென்படலை.

என்றாலும் மகள் ஆனைமேல் ஏறிப் புறப்பட்டு வருகிறாள். துணைக்குக் கூட ஆள் இல்லை. வந்து சேருமுன் அழுகை சத்தம் கேட்கிறது. சில அடிகளுக்குப் பொருள் புரியவில்லை. கண்டு கொள்க.

ஆனை இளம் பருத்தி
அடிவரிசை பாலில் கட்டி - நா
அத்தை வீடு மேலேறி
எங்கப்பன் வீட்டு மாளியிலே
அழுகை சத்தம் கேட்டதுங்க
அளித்தேன் திருமுடியை - நான்
முகத்திரையை நீக்கியல்லோ
மங்கை வர சேதி என்ன?
மக்கள் வர சேதி என்ன?
எங்கப்பன் வீட்டுப்
பாட்டு வந்த சேதி என்ன?

தாயைப் பார்த்து அழுகிறாள் மகள். தாய் உடுத்துப் புடவைச் சிறப்பெல்லாம் சொல்கிறாள்.

அம்மா
உடுத்தும் கருப்புச்சீலை
உள்குத்துத் தங்க நிறம்
உடுத்து வெளியே வந்தா
ஊரே ஒளி மணக்கும்
உள்ளூ குத்து பூ மணக்கும்!

அம்மா
கட்டும் கருப்புச்சீலை
கரையெல்லாம் தங்கநிறம்
கட்டி வெளியே வந்தா
கஸ்தூரி பூமணக்கும்

தாயாரு போய் மடிய
காயாம் பூவுமில்லே
கஸ்தூரி வாசமில்லே
தெற்குமா வீதியிலே

தேனுவந்து கூடுவைக்கும்
தேனுமில்லே கூடுமில்லே
எங்கப்பன் வீட்டுக்குத்
திரும்பிவரப் பாசமில்லே
வடக்கே மதுரையிலே
மயிலுவந்து கூடுவைக்கும்
வளர்த்ததாய் போய் மடிய
மயிலுமில்லே கூடுமில்லே
மறிச்சிவரப் பாசமில்லே

என்று புலம்புகிறாள். அம்மாவின் பிறப்புச் சிறப்பை எண்ணுகிறாள்!

அம்மா பொறந்தது - அறுபதடிகல் கோட்டை
நானும் பொறந்தது - நாவுரிஞ்சி கச்சேரி
என்னைக் கொடுத்தது - ஏழாம் வளநாடு

என்று பெருமைப்படுகின்ற அவள், தாய் என்னவெல்லாம் வாங்கிக் கொடுப்பாள் என்பதை எண்ணுகிறாள்.

பரணி நதி போனபோது - பட்டுவாங்கித் தந்தது
பட்டு நனையலம்மா
பாதி நகை மங்கலம்மா
பாவி விடும் கண்ணீரு
பட்டு நனைஞ்சதம்மா
பாதையெல்லாம் மங்குதம்மா!

சித்திரை மாதத்திலே
செல்லத் தேர் ஓடையிலே
சீலைன்னு கேட்டதும்
சீலை இருநூறு - சீர் வரிசை முன்னூறு
சீலை எடுத்துடுத்தி - சிறு நகையும் மேல்பூட்டி
சென்னிமலை போயிறங்கி

சீலை நனையலம்மா - சிறு நகையும் மங்கலம்மா
செல்லி விடும் கண்ணீரு
சீலை நனையுதம்மா
சிறு நகையும் மங்குதம்மா!

அப்படி வாங்கிக் கொடுத்த சீலை கண்ணீரால் நனைகிறது. அதனால் நகையும் மங்குகிறது என்று புலம்புகிறாள். சீலை நனையலையே என்ற புலம்பலும் உண்டு.

சீலையும் ஆயிரமாம் - என்ன பெத்த செல்லி
சில்லறையும் தொண்ணூறாம்
சீலையை எடுத்துக்கட்டி- சில்லறையை எண்ணிக்கிட்டு
சின்ன ரயிலேறி - சீரங்கம் போயிறங்கி
சீரங்கம் பேஞ்ச மழை
சீலை நனையலையே
சில்லறையும் மங்கலையே!
பெத்தவளும் போய் மடிய
சீலை நனையுதடி
சில்லறையும் மங்குதடி.

பட்டிலே ஆயிரமாம் - என்ன பெத்த செல்லி
பவுனுகளும் தொண்ணூறாம்
பட்டை எடுத்துடுத்தி - பச்சை ரயிலேறி
பட்டணமும் வந்திறங்கி - பட்டணம் பேஞ்ச மழை
பட்டும் நனையவில்லை
பவுனுகளும் மங்கவில்லை
பெத்தவளும் போய்மடிய
பட்டும் நனையுதடி - பவுனுகளும் மங்குதடி!

கொய்யா மரமுன்னு - குந்தினோம் மரத்தடியே
கொய்யாமரம் சாஞ்சதடி
குளத்தோரம் நிற்குறமே!

தாய் இறந்ததால் இழந்த பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. தாய் இருந்தபோது பாத்திரங்கள் வாங்கித் தந்தாள்! பெரிய பாத்திரங்கள் சின்ன பாத்திரங்கள்! அவள் மடிந்த பின் நிலை என்ன?

வண்ண வண்ண பாத்திரங்கள்
வரிசைகளை நான் இழந்தேன்
பெத்தவளும் தாயிருந்தா
வாங்கி விலைமதிப்பா
வண்டி பாரம் பூட்டிடுவா
வண்டியிலே வாரவங்க
வரிசைகளும் யாருதுன்னார்!

ஆத்திலே பரிசில் போட்டு
அரும்பெருமை கோலமிட்டு
வரிசை பார்க்க வந்த சனம்
வரிசையிலே குத்தமில்லே
வளர்த்த தாயி எங்கே இன்னார்!
வளர்த்த தாயி போய் மடிஞ்சு
வகுநாளு ஆச்சுதுன்னார்!
செண்டு செவந்திப்பூ
செடி நிறைய மல்லிகைப்பூ
ஒருவரிடம் சொல்லாம
உருகுறனே போந்தியிலே

தெக்க தெக்க தூரத்திலே
தென் மதுரைப் பட்டினமாம்
சின்ன சின்ன பாத்திரங்க
சீருன்னு வாங்கி வந்தார்!
பெத்தவளும் தாயிருந்தா
சின்ன சின்ன பாத்திரமே
தேரு பாரம் பூட்டிடுவா!

தேரு பார்க்க வந்த சனம்
சீருகளும் யாருதுன்னார்
தேடும் தாயும் இல்லாம
சிந்துறனே கண்ணீரே!

தெக்கே வெகுதூரம் - தேக்கூடு மின்னலும்மா
தேக்கூடு மின்னலிலே - தேடும் தாயி குந்திருப்பா
தேடும் தாயி இருக்கும்போது - சீருக்காக வந்தாலும்
சின்ன பொறப்புகளும் - சீருள்ள தம்பிகளும்
சீரு தருவாங்க - சின்னதே ஆடிவரும்
தேடும் தாயி இல்லாமே - சீருகளும் வாராம
திண்ணை விட்டுக் கீழிறங்கி - சிந்தினேன் கண்ணீரை
திண்ணை சுழன்றுவரும் - தேடும் தாயைச் சுத்திவரும்

வடக்கே வெகுதூரம் - வடதுருவ மின்னலிலே
வளர்க்கும் தாயி குந்திருப்பா
வளர்க்கும் தாயி இருக்கும் போது
வாழ்க்கைப்பட்டு வந்தபோது
முன்னே பிறப்பு வரும் - முழு சீரும் முந்தி வரும்
வளர்க்கும் தாயி இல்லாம - வகு சீரும் வாராம
வார்த்திட்டேன் கண்ணீரை

ஆல மரத்தடியே - அந்தரத்தில் தோன்றும் கிளி
அண்டின மரத்தடியே - அம்பால ரெண்டு கிளி
சிம்பா பறக்குறமே!

ஒருவர் நடக்கும் தடம் - ஓட்டி வந்த பொன்னுதடம்
ஒருவர் நடந்து வந்து - ஒடம்பை வலிக்கு தென்பார்
பெத்தவளும் தாயிருந்தா
ஒடம்பை பிடிச்சிடுவா - ஒத்தடமும் வைத்திடுவாள்
பெத்த தாயி இல்லாம
ஒடம்ப பிடிக்கவில்லை - ஒத்தடமும் தரவில்லை

தந்தையார்:

தாய்க்கு இரங்கி பாடிய பாடல்கள் இன்னும் பல உள்ளன. இனி தந்தைக்கு மகள் பாடிய பாடல்கள் சிலவற்றைக் காணலாம். தந்தை ஒரு தீபம் அணைந்து விட்டார்! அவர் ஒரு கல்தூண். சாய்ந்துவிட்டார்!

கருணா மலைமேலே - காட்டா பொறுத்திருக்கு
கல்தூணு நின்னுருக்கும்
கல்தூணு நின்னதவும் கன்னி வனவாசம்
கல்தூணு சாய்ஞ்சிருச்சி

திருணா மலைமேலே தீபம் பொருத்தியிருக்கும்
சிறு தூணு பாவிருக்கும்
திருணாமலை கள்ளவரு
சேர்ந்து நின்னு பேசணுதும்
தீபம் அணைஞ்சதுவும்
சிறு தூணு சாய்ஞ்சிருக்கும்.

திருவண்ணாமலை கள்ளவரு என்பது, அண்ணாமலைக் கடவுளே சூது செய்து இவள் தந்தையாகிய தீபத்தை அணைத்துவிட்டார் என்று எண்ணுகிறாள். ஒரு வகையில் தந்தை கடவுளிடம் சேர்ந்து விட்டார் என்ற பொருளும் வருகிறதல்லவா?

கன்னு கன்னா தென்னம் பிள்ளை
கற்கண்டு காய்க்கும் பிள்ளை
வளர்த்தவரு இல்லாம
கல்கண்டு தின்ன மக்கள்
கதவண்டி நிக்கலாச்சே
மொட்டு மொட்டா தென்னம்பிள்ளை
முட்டாயி காய்க்கும் பிள்ளை
வளர்த்தவரு இல்லாம

முட்டாயி தின்ன மக்கள்
முகம் சோர்ந்து நிற்கலாச்சே

தகப்பனார் இருக்கும்போது கல்கண்டும் முட்டாயும் தின்ன மக்கள் முகம் சோர்ந்து நிற்கிறார்கள். தகப்பனாரிடத்தில் வழக்கமாக வாணிகம் செய்பவர்கள் வந்தார்கள். அவர்கள் கேட்கிறார்கள். மக்கள் பதிலும் சொல்கிறார்கள்.

காசளக்க வந்தவங்க - கனத்த மெத்தை யாருதின்னார்
காசி மணி ராசாவும் - கனகவல்லி அம்மாவும்
காசாடும் மெத்தை என்பார் - காசி மணமணக்கும்
எங்கப்பன் வீட்டுக் கடைவீதி பூ மணக்கும்

காசியில் எடுத்தது - காந்தி இளவேட்டி
கஸ்தூரி மல்லுவேட்டி- கஸ்தூரி வேட்டி கட்டி
கழுத்து மாலை போட்டுக் கிட்டு - எங்களப்பன்
காடு சுத்தி வந்திட்டா
காடும் குளிர்ச்சி உண்டு - கணக்கனுக்கும் புத்தி உண்டு
கஸ்தூரி கட்டாம - கழுத்து மாலை போடாம
காடும் குளிர்ச்சி இல்லே - என்னைப் பெத்த
கணக்கருக்கும் புத்தி இல்லே

துட்டுக்கு எடுத்தது - தும்மை இளவேட்டி
தும்மை இளவேட்டி - துத்திப்பூ மல்லுவேட்டி
துளிர வெளுத்துக்கிட்டு - தோளுமேலே
போட்டுக்கிட்டு
தோட்டம் சுத்தி வந்துட்டா
தோட்டம் குளிர்ச்சி உண்டு - என்னைப் பெத்த
துரை மாருக்கும் புத்தி உண்டு
துளிர வெளுக்காம - தோளுமேலே போடாம
தோட்டம் சுத்தி வாராம

தோட்டம் குளிர்ச்சி இல்லே
துரைமாருக்கும் புத்தி இல்லே.

தங்கரணா போட்டுக்கிட்டு தங்கக் குடைபிடிக்க
தாரிசு மெத்தையிலே - தகப்பனாரு சாஞ்சிருந்தா
தங்க நகை கேட்டோம் - தங்காளு நாலு பேரும்
தங்க பொட்டி சீர் கேட்டோம்

பொன்னுஅரணா போட்டுக்கிட்டு
பொன்னூஞ்ச மெத்தையிலே
தகப்பனாரு சாஞ்சிருந்தா - தங்கா நாலுபேரும்
பொன்னு நகை கேட்டோம் - பொன்னு
பொட்டி சீர்கேட்டோம்.

என் தகப்பனார் உயிரோடு இருந்தால் தங்கை மார்கள் நால்வருடன் சேர்ந்து நாங்கள் பொன்னும் மணியும் கேட்போம். அவரும் எல்லாம் தருகிறேன் என்று சொல்வார், தருவார்!

பொன்னு நகைதாரேன் - பொன்னுபொட்டி சீர்தாரேன்
பொறுத்திருங்க மக்களின்னார்
பொறுத்திருக்கும் நாளையிலே
பொன்னு ரதமேறி - புறப்பட்டார் கானகத்தே
பொன்னு நகை இழந்தோம் - பொன்னு பொட்டி

சீரிழந்தோம்.

இப்படித் தாங்கள் இழந்தவற்றை எண்ணிப் பெண் மக்கள் புலம்புகிறார்கள். தந்தை வாக்களித்ததை, அவர்களுடைய உடன் பிறப்புக்கள் தரவா போகிறார்கள். உடன்பிறப்புக்கள் தர எண்ணினாலும், அண்ணிமார்கள், கொழுந்தன்மார்கள் விடுவார்களா? தனியுடைமையின் ஆற்றல் அவர்களைக் கொடுக்க விடாது.

உடன் பிறப்புகள்:

இனி உடன்பிறப்புக்களை இழந்தவர்கள் பாடும் துன்ப மாலையினைக் காணலாம். பாடலைப் படித்துக் கொள்ளுங்கள். சிந்தித்துச் சூழ்நிலை அறிந்து பொருள் காணுங்கள்.

கருப்புக் கலரு வண்டி - காசாட்டம் ஆடும் வண்டி
காசாடும் அண்ணனுக்கு - கலறு கொண்டு
போறானம்மா
கலறா எறங்குதம்மா கரை எல்லாம் செல்லுதம்மா

சிவப்பு கலரு வண்டி - சீட்டாட்டம் ஆடும் வண்டி
சீட்டாடும் அண்ணனுக்கு - செலம்பு கொண்டு
போறனம்மா
சிலம்பு பிரிந்ததென்ன - சீட்டாட்டம் சோர்ந்ததென்ன

தங்கக் கொடி - தங்க மஞ்ச - தங்கா குளிக்கும் மஞ்ச
தங்காளுக்குப் பூத்திருக்கும் - தங்கா முடிஞ்சது
தரையிலே சாய்ந்தது
தங்களோட தம்பி இருந்தா - தட்டி எரியுவாங்க
தங்கா துடிச்சது தடவழியே சாஞ்சது

பொன்னுக் கொடி பொன்னு மஞ்ச
பொன்னா குளிக்கும் மஞ்ச
பொன்னாருக்குப் பூத்திருக்கும்
பூமியிலே என்றழுதேன்
பொன்னா குடிச்சது - பூமியிலே சாய்ந்தது
பொன்னோட தம்பி இருந்தா - புடுங்கி எரிவாங்க
பூமியிலே ஊத்துவாங்க - பொன்னுத்தம்பி இல்லாத
புடிங்கி எரியவில்லை - பூமியிலே ஊத்தவில்லை.

மேலே கண்ட பாடலில் உடன்பிறப்பு தன் மடிவுக்காக ஏதோ நஞ்சு அருந்தப் போவதாகவும், தம்பி இருந்தால் தடுத்து

நிறுத்துவானே என்று கூறுவது போலவும் உள்ளது. அடுத்தது தங்கை எங்கோ கொடுமை தாங்காமல் இறந்து போக துயர் தாங்காமல் பாடியதாகத் தெரிகிறது.

பொன்னா பொறப்பாலும் - பொன்னுமடம்
கட்டிவைச்சேன்
பொன்னு பொழைக்காம - பொறந்த இடம் வந்திருந்தா
பொறப்புக்கு வாட்டமுண்டு
பொன்னு பொழைச்சி இருந்தா
பொண்ணுக்கு குத்தமில்லே
பொறப்புக்கு வாட்டமில்லே

தங்கா பொறந்தான்னு - தங்க மடம் கட்டி வைச்சேன்
தங்கா பொழைக்காம தாயிடம் வந்திருந்தா
தங்கைக்கும் செல்வமுண்டு- தாயாருக்கும்
வார்த்தையுண்டு
தங்கா இறந்துவிட - தங்கைக்கும் குத்தமுண்டு
தாயாருக்கும் வாட்டமுண்டு

தன் உடன்பிறப்பு இருக்கும்போது எத்தனை தீராத ஞாயங்களை எல்லாம் தீர்த்து வைத்தார். இப்பொழுது ஞாயம் தீர்க்க உடன் பிறப்பு இல்லையே என்று ஏங்குகிறாள் ஒரு தங்கை.

ஆத்தி நல்லா பள்ளிக்கூடம்
அப்புறமா தெப்பக்குளம்
வழக்கமான ஞாயமெல்லாம்
வண்டியிலே வந்து இறங்கும்
வண்ணப் பொறப்புமில்லே
வகுஞாயம் பேச யாருமில்லே

திண்ணையிலே பள்ளிக்கூடம்
திருநெல்வேலி தெப்பக்குளம்
தீராத நாயமெல்லாம்

சேர்ந்த பொறப்புமில்ல
ஞாயம் பேச யாருமில்லே

தன் அண்ணன் ஏலம் படித்து வியாபாரம் செய்யும் சிறப்பை எண்ணிப் பார்க்கிறாள் ஒரு பெண்.

எட்டு லட்சம் முத்துக்களாம்
ஏராளம் கொண்டு வந்து
எட்டு பேரு கூடியல்லோ
ஏலம் படிக்கையிலே
இன்பமா இருந்தது
ஏலம் படிச்ச அண்ணா
எந்த தேசம் போனியடா

பத்து லட்சம் முத்துக் களாம்
பாங்காகக் கொண்டு வந்து
பத்துபேரு கூடியல்லே
ஏலம் படிக்கையிலோ
பாங்கே இருந்தது - பரதேசம் போனியடா

'ஏலம் படிக்கையிலே' என்பதற்குப் பதிலாக 'பாரதம் படிக்கையிலே' என்று மாற்றியும் பாடுகிறார்கள்.

பத்து லட்சம் முத்துக்களாம்
பாங்காகக் கோலமிட்டு
பத்துப் பேரு கூடியல்லோ
பாரதம் படிக்கையிலே
பாங்கான நாவுக்குப்
பக்கம் வந்து பார்ப்பாங்க
பாரதம் படிக்காம - பரதேசம் போனியடா!

தங்கை வீட்டுக்குச் சென்றால் எப்படி உபசரிப்பாள் என்பதுவும் கூறப்படுகிறது. இதைச் சொல்பவன் அண்ணனாக இருக்கலாம், அல்லது அக்காமார்களாக இருக்கலாம்.

தங்க கோச்சு வண்டி - தரிச்சிட்டேன் பொந்தியிலே
தங்கையோட சீமைக்கு - தனிமுன்னே வந்திருந்தா
சமைச்சிப் படைக்கிடுவா - தனிக்காப்பி வேணுமாம்பா
தங்கையோட சஞ்சலிப்பு - தனிச்சொருநா இல்லாட்டி
சட்டம் குலுங்கிவிடும் - தங்கமுகம் வாடிவிடும்

பொன்னு சைக்கிள் வண்டி - பொளச்சிட்டேன்
பொந்தியிலே
பொறப்பிருக்கும் சீமைக்கு - பொழுதோட வந்திருந்தா
புதுக்காப்பி சாப்பிடும்பா,
பொன்னோடே சஞ்சலிலே
பொழுதொருநாள் செல்லுதம்மா
பொழுதொரு நாள் இல்லாட்டி
பொன்னு முகம் வாடிவிடும்

கருப்பு ரயிலு வண்டி - கரூரு போறவண்டி
கரூருடேசனிலே கமுக்கமரம் கூடாரம்
கமுக்க மரத்தடியே - காரைத்திண்ணை போயிருக்கும்
எம்பொறவி தங்கா

கவலையை சொல்லிடுவா - காரைத்திண்ணை என்ன
செய்யும்
கன்னிக்கு போட்டெழுத்து - கணக்கா முடிஞ்சுதடி

சிவப்பு ரயிலுவண்டி - சீரங்கம் போறவண்டி
சீரங்கத்து டேசனிலே - சிலுக்கமரம் கூடாரம்
சிலுக்க மரத்தடியே - செல்வி திண்ணை போலிருக்கும்
செல்விதின்னை மேலேறி
திருச்சிபக்கம் பார்ப்பமுன்ன - செரியா முடிஞ்சுதம்மா

இதில் கரூர், திருச்சி எல்லாம் வருகிறது. இந்தப் பாடல் எப்படி இந்தப் பகுதிக்கு வந்ததோ தெரியவில்லை.

கணவன்:

இனி கணவன் இறப்புக்கு மனைவி பாடும் பாடல் பார்க்கலாம். அவை மிகுதியாகக் கிடைக்கவில்லை என்றாலும் கிடைத்த சிலவற்றை ஆராயலாம். கீழே உள்ள பாடல் உன்னைக் காப்பாற்றுகிறேன் என்று மணந்து கொண்டவன் பாதியில் விட்டுச் சென்றானே என்ற பொருள் வருவது போல் தோன்றுகிறது.

கட்டுன மாட்டுவண்டி - காசி பரதேசி
நாம் பொறந்த ஏரியிலே - கருமலையும் தன்னாசி
கையை விரியுமுன்னான் - கனத்தபாரம்தார முன்னான்
கையை விரிக்காம - கனத்த பாரம் தாங்காம
கை ஒடிஞ்சி நிக்கிறனே!

செஞ்சிக்குப் போறமுன்னு - சேத்தினம் பொட்டிவண்டி
செஞ்சிமலை தன்னாசி - நாம் பொறந்த கோட்டையிலே
செடிமலையும் தன்னாசி
சிறகை விரியுமுன்னான் - சேர்ந்தபாரம் தாருமுன்னான்

அவய சனத்திலே - நாம் புகுந்த ஓரியிலே
சேர்ந்தவரம் வாங்காம - சின்னப்பட்டு நிக்கறனே!
மல்லிப்பூ மருக்கொழுந்து -
மார்மேலே சந்தனமாம்
மடியை வளைச்சி கட்டி - மறுஞாயம் பேசவந்தா
மாளிகை கிடுகிடுக்கும் - மறுஞாயம் வெற்றியாகும்

துத்திப்பூ திருக்களையாம் - தோளிலே சந்தனமாம்
தொடைநிறைய புத்தகமாம்

தூளி வரிஞ்சிகட்டி - துரை ஞாயம் பேசவந்தா
பூமி கிடுகிடுங்கும் - புது ஞாயம் வெற்றியாகும்

கச்சேரி வாசலுக்குக் கணக்கெடுக்கப் போனவரே
கச்சேரி வாசலிலே கணக்கெடுத்து வாரதெப்போ

இப்படியெல்லாம் இறந்த கணவனை எண்ணி மனைவி அங்கலாய்க்கிறாள். கணவன் கச்சேரிக்கு போவது, அவனுடைய சந்தனப் பூச்சு, வேட்டிக்கட்டு எல்லாம் அவள் மனதில் நிற்கிறது.

ஒருத்தி தன் கணவன் மாடுமுட்டி இறந்து விட்டான் என்று அறிந்து செல்கிறாள். அவள் அவனைப் பிரிந்திருப்பாள் போலும். பிணத்திடம் அவளை அவனது உறவினர் விடவில்லை போலும். அவள் அழுகிறாள்:

மாடுமிதிச்ச பொணம் - எனக்கு வந்த ராசா
மந்தையிலே செத்த பொணம்
மந்தை பொணம் காக்க - இந்த
மயிலாளுக்குச் சொந்தமில்லே

அபூர்வமாக மகன் இறந்துவிடுவதும் உண்டல்லவா? அப்படி மகனை இழந்த தாயொருத்தி அழுகிறாள்:

ஏரிக்கு அந்தாண்ட - எட்டு லட்சம் கந்தாயம்
என் மகனுக்கு வேணுமின்னு
எழுதிவைச்சேன் பட்டாவும்
என்றன் மகனுமில்லே - எழுதி வச்சி அழுவுறண்டா
பாலனுக்கு வேணுமின்னு - பத்துலட்சம் கந்தாயம்
பாலா வழக்காடி படிச்சிவச்சேன் பொந்தியிலே
பாலனும் ஆடவில்லை - பார்த்தவுடன் அழுவுறண்டா
பார்த்தனுக்கு வேணுமின்னு - பட்டயங்கள்
பண்ணிவச்சேன்

பார்த்தாள ஆளுமில்லே - பார்த்தவுடன்

அழுவுறண்டா

தாய் மகனுக்காக நிலம் வாங்கிப் பட்டா செய்து வைத்திருந்தாள். அவனோ இறந்து விட்டான். அதற்காகத் தாய் அழுகிறாள்!

துன்பமாலை முழுதும் ஒன்றில் ஒன்று கலந்து கிடக்கின்றன. எந்தப் பாடல் யாருக்குப் பாடியது என்று கறாராகக் கூறமுடியாது. ஒரே பாடல் இடத்துக்கு ஏற்ப மாறுகிறது. அதனால் தொகுத்த பல பாடல்களை இடம் அறிந்து யூகித்துத்தான் முடிந்தவரை சரியாகப் பிரித்துள்ளேன். பலவற்றைப் பிரிக்கவே முடியவில்லை.

துன்ப மாலைதான் மனித வாழ்வில் மிகுதியாக உள்ளது. ஒவ்வொருவரும் இம்மாலையைச் சூட்டிக் கொள்ளாமல் தப்பமுடிவதில்லை.

நாட்டுப்புற இலக்கியங்கள் காலத்தால் இறந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த பணியைச் செய்துள்ளேன். இனியும் செய்வேன்.